உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு " ,, ரூ. 5-0-0

R. No. M. 3066 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹு புரட்டாசி-மீ 22-உ (7—10—1934) | மலர் 7.

தொழிலாளர் ஓலம்.

(சுயமரியாதைப் பாவலர் தோழர் தி. அ. வேங்கடசாமி பாடியது.)

மெட்டு "சத்யமெங்கு மேதளரா நாடு"

1. ஐயகோ! முதலாளிக் கூட்டம்—எம்மை
ஆட்டுவிக் கின்றாரேபே யாட்டம்
வெய்யில் மழையிருளில் ஓட்டம்—சற்றும்
விடுப்பில்லை என்இந்தத்திண் டாட்டம்

2. தொழிலாளர் நாங்கள்படும் பாடு—கண்டும்
தூரத்துகின் றாரே செடிங் காடு
எளியோம் எதிர்ப்படில்ஓ டோடு—பயலே
என்றால்இ தென்னசுடு காடு

3. நெஞ்சில் கருணைசற்றும் இல்லை—இந்த
நீசர்உயர் ஜாதியென்ன தொல்லை
வஞ்சம்இல் லாதுழைக்கும் பிள்ளை—இழி
வர்க்கமாம் என்னபெரும் சள்ளை

4. கல்லும்முள் ளும்நிறைந்த காடு—நாங்கள்
கஷ்டப்பட் டுழைக்கின்றோம். வீடு
புல்லும் புதர்நிறைந்த கூடு—எங்கள்
போக்கற்ற உண்கலம்மண் ஓடு

5. நாங்கள் புனைவதழுக் காடை—ஐயோ
நாள்தோறு மேவரும்நோய் பீடை
நீங்காதெங் கள்தலைமண் கூடை—இதை
நீக்குவது நாங்கள்வறும் பாடை

6. குடிதண்ணீ ருக்கோபெரும் பஞ்சம்—எனில்
குளிப்பதெங் கேஇதுமா வஞ்சம்
துடிதுடிக் குதேஎங்கள் நெஞ்சம்—இதைச்
சொல்லவும்வாய் கூசுதேது தஞ்சம்

7. கூழ்கூழ்என் றெங்கள்மக்கள் அழுறார்—எங்கள்
கோதையர் சோர்ந்துமண்மேல் விழுறார்
மூள் கோப(ம்)ர் முதலாளிக் கெழுறார்—எமக்கிம்
மோசத்தை யோ"பிர்மன்"எ ழுதுறார்

8. விளைபொருள் செய்பொருள்கள் யாமே—நெற்றி
வேர்வைநிலம் வீழவுழைப் போமே
உழைப்பிலார் வீட்டுள்அவை போமே—எங்கள்
உள்பசித் தீப்புகுந்து வேமே

9. தோட்டம்தொழில் சாலைகளில் வேலை—சதா
தூக்கமின்றிச் செய்வோம்காலை மாலை
ஆட்டும் முதலாளர்பூஞ் சோலை—அலங்
காரநிழல் வீற்றிருக்கும் லீலை

10. சோம்பேறி முதலாளிக் கூட்டம்—இன்பம்
துய்க்கின்றா ரேபெரும்கொண் டாட்டம்
சோம்பா துழைக்குமெங்கள் வாட்டம்—தீரத்
தோன்றாதோ வோர்அறப்போ ராட்டம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	0-8-0	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்	0-6-0
சுதந்தரப்போர்	0-4-0	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை?	0-1-0
மாதர் சுதந்திரம்	0-8-0	சாமிகளின் அடிமை	0-12-0
விவாக விடுதலை	0-4-0	லோகல்போர்டுஆக்ட் (சென்னை)	2-0-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	2-0-0	பகுத்தறிவு கீதம்	0-1-0
The Right of Temple Entry (English)	1-0-0	நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை	0-8-0
The Crux of the Indian Problem (English)	1-0-0		

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு
ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணா 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
ஈரோடு.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

"வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.
கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.
ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணா ஒன்று.
விலாசம்:
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

"சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

"நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை
ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

கோவையில்

சுயமரியாதைத் திருமணம்.

ஈ. வெ. இராமசாமி சொற்பொழிவு.

சு. ம. திருமணமும்—பு.ம. திருமணமும்.

தோழர்களே!

இன்று இங்கு நடக்கும் இத்திருமணத்திற்கு சுயமரியாதைத்திருமணமென்றும், சீர்திருத்தத்திருமணம் என்றும் சொல்லப்படுகிறது. சுயமரியாதைத் திருமணம் என்றால் சிலருக்குப்பிடித்தமில்லாமல் இருக்கலாம் என்று சீர்திருத்தத் திருமணமெனச் சொல்லப்படுகிறது.

சீர்திருத்தம்?

எப்படி இருந்தாலும் ஒன்றுதான். சீர்திருத்தம் என்றால் என்ன? இருக்கின்ற நிலைமையிலிருந்து மாற்றம் செய்வதையே சீர்திருத்தமென்றும், நாகரீகமென்றும் சொல்லுகிறோம் என்றாலும் இந்த சீர்திருத்தமும், நாகரீகமும் வெறும் மாறுதலுக்காகவேஏற்படுவதும்உண்டு. மற்றும் பல விஷயங்களில் சௌகரியத்தையும், நன்மையையும், அவசியத்தையும், பகுத்தறிவையும் உத்தேசித்து மாற்றப்படுவதும் உண்டு. மாறுதலும், சீர்திருத்தமும், மக்களுக்கும், உலகத்துக்கும்புதிதல்ல. உலகம்தோன்றிய நாள் முதல் ஒவ்வொருதுறையிலும் எவ்வளவு மாறுதல்அடைந்து வந்திருக்கிறது என்பதை சரித்திரங்களையும், பழைய சின்னங்களையும் பார்த்து வந்தால் நன்றாய் விளங்கும். அதுபோலவே மனிதசமூகமும் சகல துறைகளிலும் எவ்வளவு மாறுதல் அடைந்து வந்திருக்கின்றது என்பதும் வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்கள் அடைந்து வந்திருக்கின்றது என்பதும் நம் குறைந்த கால ஆயுவின் அனுபவத்தைப் பார்த்தாலே தெரியவரும்.

மாறுதல்.

மாறுதல் என்பது இயற்கையேயாகும். மாறுதல் இல்லாமல் எந்த நாடும், எந்த சமூகமும் எந்த வஸ்துவும் இருக்க முடியாது.

இந்தக்கல்யாணம் சுயமரியாதைக் கலியாணம் என்றும், இதில் பழக்க வழக்கங்கள், சாஸ்திரங்கள்,சம்பிரதாயங்கள் ஒன்றும் கவனிக்கப்படுவதில்லை என்றும், இதை புராணமரியாதைக்காரர்களும், வைதீகர்கள் என்பவர்களும் குற்றம் சொல்லலாம்.

வைதீகம்.

சாதாரணமாக இந்நாட்டில் நடைபெறும் வைதீகக் கல்யாணம் புராண முறைப்படி நடக்கும் கல்யாணம் ஆகியவைகளைப் பற்றியே சிந்தித்துப் பாருங்கள். வைதீகப்பிரசாரத்துக்கும், வைதீகத்துக்குமாகவே உயிர் வாழ்வதாய் சொல்லிக் கொள்ளும் பார்ப்பன சமூகத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய கல்யாணங்களில் இப்போது எவ்வளவு சீர்திருத்தம், எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறன என்பதை நீங்கள் கவனித்துப்பாருங்கள். காலை 7-மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு தூரத்தில் உள்ள கோவில்களுக்குப் போய் அங்கு கலியாணம் செய்து கொண்டு பகல் சாப்பாடு சாப்பிட்டு விட்டு மாலை 6மணிக்கு புறப்பட்டு வீடுவந்து சேர்ந்து விடுகிறார்கள். 3-நாள், 5-நாள், 7-நாள் அவ்பாசனங்கள், சடங்குகள் என்பவைகள் எல்லாம் எங்கே போய் விட்டன? பெரும் செலவுகள் ஆடம்பரங்கள், பலவகைப்பட்ட விருந்துகள் எல்லாம் எங்கே போய்விட்டன?

சென்னை.

மற்றும் குருட்டு நம்பிக்கையும், மூட பக்தியும் பிறந்த ஊராகிய சென்னை முதலிய இடங்களில் நாயுடு, முதலியார், செட்டியார் என்றுசொல்லப்படும் ஜாதிகளும், வைதீக சிகாமணிகளும் சடங்குகளினாலும், வேஷங்களினாலும் தங்களைப்பெரியஜாதியார் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுமான மக்கள் இன்று தங்கள் தங்கள் வீட்டிலேயே, ஒரே நாளில், ஒரு பகலில் ஒரு விருந்தில் கல்யாணங்களை முடித்து விடுகின்றார்கள். இவைகள் எல்லாம் மாறுதல் அல்லவா? சீர்திருத்தம் அல்லவா என்று யோசித்துப் பாருங்கள். மனிதனில் எவனும் மாறுதலுக்கு ஆளாகாமல் இருக்கமுடியாது.

காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் நடந்து போனால்தான் புண்ணியம் என்று நம்பின மனிதன் இன்று காலை வண்டியில் போய், குதிரை வண்டியில் போய், ரயிலில் போய், மோட்டாரில் போய், ஆகாயக்கப்பலில் மணிக்கு 300 மைல் வேகம் போகக்கூடிய நிலைமையை அடைந்து விட்டான். இவனிடம்புராணத்தையும்,வைதீகத்தையும் பேசினால் செல்லுமா என்று யோசித்துப் பாருங்கள். அதுபோலவே சக்கிமுக்கிக் கல்லின் மூலம் விளக்கு வெளிச்சத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த மனிதன் விளக்காகி, பந்தமாகி, பவர் லைட்டாகி கியாஸ் லைட்டாகி, இன்று எலக்ட்டிரிக் லைட் அதாவது ஒரு பொத்தானை அமுக்கினால் லக்ஷம் விளக்கின் வெளிச்சம் போன்ற பிரகாசத்தைக் கண்டுபிடித்து அனுபவித்து வருகிறான். இந்தக் காரியங்களையெல்லாம் புராணமுமம, வைதீகமும் தடுத்துவிடக் கூடுமா என்று பாருங்கள்.

திருமணம்.

அதுபோலவே இந்தத் திருமணம் என்னும் விஷயத்திலும் முற்போக்கு ஏற்பட்டுத்தான் தீரும். அதை நீங்கள் தடுத்துவிட முடியாது, திருமணத்துக்கு 1000 சாஸ்திரமும் புராணமும் இருந்தாலும் அதை இனி மக்கள் நம்பிக்கொண்டும், ஏற்றுக் கொண்டும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. கால தேச வர்த்தமானத்துக்குத் தகுந்தபடி மாறிக் கொண்டுதான் வரும். அநேக தேசங்களில் கல்யாணம் என்கின்ற பேச்சே இப்போது அமுலில் இல்லை. ஆணும், பெண்ணும் ஒன்றாகக்கூடித் தான் வாழ வேண்டும், அல்லது வாழ்க்கை நடத்த வேண்டும் என்கின்ற முறையும் இல்லை. இஷ்டப்பட்டால் இரண்டுபேர் கூட்டு வியாபாரம் செய்வதுபோல் சேர்ந்து ஒரு குடும்பத்தை நடத்துகிறார்கள். இஷ்டம் இல்லாவிட்டால் தனித் தனியாக குடும்பத்தை நடத்துகிறார்கள். மேலும் குடும்பம் என்கின்ற தொல்லையே இல்லாமல் சுதந்திர மக்களாகவே இருக்கிறார்கள்.

ஒரு ஆணும், பெண்ணும் சேர்ந்து அனுபவிக்கும் இன்பத்தையும், உணர்ச்சி பரிகாரத்தையும் இரு சினேகிதர்கள் அனுபவிக்கும் சினேக இன்பத்தைப் போலவும் இயற்கைக் கூட்டுப்போலவும் கருதி வாழுகின்றார்கள். இவைகள் எல்லாம் மனிதன் அனுபவத்தினாலும், நாளுக்குநாள் மனிதனுடைய கஷ்டமும், கவலையும், தொல்லையும் குறைக்கப்பட்டு வரவேண்டும் என்கின்ற முயற்சியினாலும் தத்துவ விசாரத்தினாலும் ஏற்படும் காரியங்களே யாகும்.

சுயமரியாதை.

ஆதலால் சுயமரியாதை என்கின்ற வார்த்தையைக் கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை.

மனிதனுடைய பகுத்தறிவுக்கு மரியாதை கொடுப்பதுதான் சுயமரியாதையின் முக்கிய தத்துவம் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் பகுத்தறிவினாலும் உங்கள் அனுபவ உண்மையாலும் உங்களுக்கு ஒன்றுதோன்ற—உலக பழக்க வழக்கத்துக்கு—சாஸ்திரத்துக்கு—மதக்கட்டுப்பாட்டுக்கு என்கின்ற நிர்ப்பந்தத்தின் மீது அதற்கு மாறாய் நீங்கள் நடக்க வேண்டிய அடிமைத் தன்மை ஏற்பட்டால் அதைத் தான் சுயமரியாதைக்கு விரோதம் என்று சொல்லுகிறோம். அதைத்தான் அடிமைத் தனம், சுதந்திரமற்றதனம் என்று சொல்லுகின்றோம்.

ஆதலால் எந்தக் காரியத்தையும், உங்கள் பகுத்தறிவையும் அனுபவ பலனையும் அனுசரித்துப்பார்த்து நடக்க வேண்டும் என்கின்ற முறையிலே தான் இந்த சுயமரியாதைக் கல்யாணம் என்பதும் ஆங்காங்கு செய்யப்பட்டும், பிரசாரம் செய்யப்பட்டும் வருகின்றதே ஒழிய வெறும் மாறுதலுக்காக என்று செய்யப்படவில்லை.

புராணமரியாதை.

உங்களுடைய புராண மரியாதைக் கல்யாணத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். பு. ம. கல்யாணத்தின் முதல் தத்துவமே பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள்—சுதந்திரமற்றவர்கள்,—மனிதத்தன்மைக்கு அருகதையற்றவர்கள் என்பவைகளை நிலைநிறுத்துவதற்காகச் செய்யப்படும் சடங்கு, அல்லது காரியம் என்பது எனது அபிப்பிராயம். உதாரணமாக கன்னிகாதானம்,பெண் கொடுத்தல், பெண் வாங்குதல், தாலி கட்டுதல், முதலியவார்த்தைகளாலும் புருஷனுக்கு கொண்டவன், தொண்டான் என்று சொல்லப்படுகின்ற வார்த்தைகளாலும் பெண் அடிமையாகப் பாவிக்கப்படுகிறது என்பதை உணரலாம்.

இந்தச்சுயமரியாதைக் கல்யாணம் என்பதின் முக்கிய தத்துவம் கூட்டு வாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமோ உயர்வு தாழ்வோ இல்லை என்பதும் சகல துறைகளிலும் சம சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்பதுமே யாகும்.

மற்றும் வைதீகப் புராண முறைக் கல்யாணத்தில் மதம், ஜாதி, வகுப்பு, குலம், கோத்திரம் முதலியவைகளைக் கவனிப்பதே முக்கியமாய் இருப்பதால் ஆண் பெண் பொருத்தம் சரியாய் ஏற்படுவதில்லை. "குலத்தில் ஒரு குரங்கைக் கொள்ளு" "பாத்திர மறிந்து பிச்சைகொடு. கோத்திர மறிந்து பெண்ணைக் கொடு" என்னும் பழமொழிகளைப் பார்த்தாலே குலம், கோத்திரம், ஜாதி, வகுப்பு முதலியவைகளுக்குள்ள நிர்ப்பந்தங்கள் நன்றாய்த் தெரியும்.இதன் பயனாய்அநேக கல்யாணங்களில் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை இல்லாமலும், மாப்பிள்ளைக்கு ஏற்ற பெண் இல்லாமலும், நாயும் பூனையும்போல் ஜோடிகள் சேர்ந்து விடுகின்றன.

சுயமரியாதைக் கல்யாணத்தில் ஜாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பனவைகள் கவனிக்கப்படாமல் மண மக்களுடைய யோக்கிய தாம்சங்களையே கவனித்துப் பார்க்கப்படுகின்றது.

வைதீகக் கல்யாணத்தில் 'வயதுக்கிரமங்களில் தக்க பருவங்களை முக்கியமாய் கவனிப்பதில்லை. தக்க பருவம் வருவதற்கு முன்பு பெண்களுக்குக்கல்யாணம் செய்யவேண்டியநிர்பந்தம் இருந்து வருகின்றது. உதாரணமாக "10 வயது வந்தால்

தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க

தென்னிந்திய நலவுரிமைச் சங்க மகாநாடு.

தலைவர் கனம்

பொப்பிலி ராஜா அவர்கள் பிரசங்கம்.

29, 30-9-34ந்தேதி சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய நலவுரிமைச் சங்க மகாநாட்டுத்தலைவர் கனம் பொப்பிலி அரசரின் தலைமைப்பிரசங்கம் வருமாறு:—

வரவேற்புக்கழகத் தலைவரவர்களே! அங்கத்தினர்களே!! சகோதரப் பிரதிநிதிகளே!!! சீமான்களே!!!! சீமாட்டிகளே!!!!!

இப்பெரிய மகாநாட்டிற்கு தலைமை வகிக்கும் பாக்கியத்தை எனக்கு நீங்களளித்ததற்காக எனது மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குச் செலுத்துகின்றேன். கூடிய வரையில் நீங்கள் என்னிடத்தில் வைத்த நம்பிக்கைக்குப்பாத்திரனாக நான் நடந்துகொள்வேனென்று உறுதி கூறுகின்றேன்.

ஒன்பது வருட காலமாக பெரிய பதவிகளையும், கவர்னர்பதவியையும் வகித்த சர். மகமத் உஸ்மான் சாகிப் பகதூர் அவர்கள் மீண்டும் நமது பக்கம் திரும்பியிருப்பதை நான் குதூகலத்தோடு வரவேற்கின்றேன்.

கனம் சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரும், கனம் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களும் அரசாங்க உத்தியோகத்தை வகித்திருப்பது மல்லாமல், இன்னும் அனேக திறமையுள்ளவர்கள் நமது கட்சியில் இருப்பதைப்பற்றி நாம் பெருமையடைய வேண்டும்.

இத்தருணத்தில், நமது மகாநாடு கூடுவதானது நமது இயக்கத்தின் சரித்திரத்திலேயே மிக மிக முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்கதாகும். நமது தாய்நாட்டின் எதிர்கால வாழ்க்கையில் பல முக்கியமான சம்பவங்களைக் குறித்து நாம் இம் மகாநாட்டில் முடிவு செய்யவேண்டியிருக்கும். எனவே, உங்கள் அரசியல் ஞானத்தையும், மாசற்ற தேச பக்தியையும், தேசநலத்தில் உங்களுக்குள்ள அளவிறந்த பக்தியையும், இத்தனை வருஷங்களாக நீங்கள் பாதுகாத்துவந்த உங்கள் கட்சியின் உயர்ந்த கொள்கைகளையும் விளக்குவதற்கு இதைவிட வேறு பொருத்தமான சந்தர்ப்பமே கிடையாது.

ஒத்துழையாமை—இது ஒரு பழங்கதை.

சற்றேறக்குறைய சென்ற பதினைந்து வருஷ காலங்களாக, நமது நாட்டின் அரசியல் ஸ்தாபனங்களில் முக்கியமானதொன்றாகக் கருதப்படும் காங்கிரஸானது, நமது நாட்டின் அரசியல் விடுதலைக்கு ஒத்துழையாமை யொன்றே சரியான வழியென்று கூறி வந்தது. இவ்வியக்கம் பல்வேறு காரணங்களுக்காக உபயோகப் படுத்தப் பட்டதையும் நாம் அறிவோம். குற்றமற்ற பல மக்களும், அவரது குடும்பங்களும் குட்டிச்சுவராய்ப் போவதற்கு இவ்வியக்கம் காரணமாயிருந்தது. பள்ளி மாணவர்பலரின் எதிர்காலவாழ்க்கையைப் பாழ்படுத்தியது. வியாபாரம், கைத்தொழில், முதலியனமந்தப்பட்டன. இத்துடன் உலகப்பொருளாதார மந்தமும் கலந்துகொண்டு நமது துன்பத்தை அதிகரித்து நாட்டிற்கு இணையற்ற தீங்கை விளைவித்தது. அந்தோ! இவ்வியக்கத்தா லேற்பட்ட வேறு பல கெடுதிகளைக் கூறிக்கொண்டே போவதில் பயனில்லையென்றே விடுக்கின்றேன். கோர்ட்டு பகிஷ்காரம், உத்தியோக பகிஷ்காரம் இன்னும் இவைபோன்ற பல முக்கியமான கொள்கைகள் காங்கிரசால் கைவிடப்பட்டுக் கிடக்கின்றன. இவைகளெல்லாம் நடக்குமென்பது நமக்கு ஏற்கனவே தெரிந்தது தான்.

இவற்றுளெல்லாம் தலை சிறந்து விளங்கியது, காங்கிரஸ் செய்த சட்டசபை பகிஷ்காரத் தீர்மானமேயாகும். அவ்வப்போது, இத் தீர்மானத்தை யெதிர்த்து, இதை உபயோகமற்றதாக ஆக்கவேண்டுமென்று சில காங்கிரஸ்காரர்கள் பிரயத்தனம் செய்தது உண்மையே யெனினும், அது போதிய பலனடையவில்லை. காலஞ்சென்ற சி. ஆர். தாஸ் அவர்களும், பண்டித மோதிலால் அவர்களும், இந் நோக்கங்கொண்டே சுயராஜ்யக் கட்சியொன்றை ஸ்தாபித்தன ரெனினும், அக் கட்சியையும் காங்கிரஸ் அங்கீகரிக்காது விடுத்ததுமன்றி, தனது பூர்வாங்கக் கொள்கைகளுக்கு மாறுபட்ட எதிர்க் கட்சியாகவே கருதி புறக்கணித்து விட்டது மாகாண சட்டசபைகளிலோ, அன்றி இந்திய சட்டசபையிலோ, இக் கட்சியினர் நடந்துகொண்ட யோக்கியதையைநன்கு அறிவீர்களாகையால் நானதைப்பற்றி விவரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவர்கள் தங்களுடைய தேர்தல் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டனரென்றும், சட்டசபைகளுக்குள் நுழைந்தவுடனேயே உருமாறினரென்றும் கூறுவது மிகையாகாது. அம்மட்டோ! சீர்திருத்தங்களை உடைத்தெறிவதற்கென்றே சட்டசபைகளில் நுழைகின்றோமென்று மார்தட்டிச் சென்ற பலர் தங்கள் ஸ்தானங்களை மாற்றி உத்தியோகப் பதவிகளை ஏற்றுக்கொண்டனரென்பது யாவருமறிந்ததாகும்.

இவர்களுடைய நடத்தை எவ்வாறிருப்பினும் உண்மைக் காங்கிரஸ் வாதிகளெனக் கூறிக் கொள்ளும் பலர் இவர்களுடைய வேலையில் ஒரு சிறிதும் நம்பிக்கைகொள்ளாது ஒத்துழையாமையாலேயே இன்னும் தேசத்திற்குப் பல நன்மைகள் செய்ய முடியுமென்றே கூறி வந்தனர். என்றாலும் சட்டசபைகளின் காலம் முடிவுபெறப்போகும் இத்தருணத்தில் இவர்களும் சட்டசபைகளில் நுழைய வேண்டுமெனத் தீர்மானித்திருப்பதைக்காண, இவர்களுடைய அரசியலறிவு எத் தன்மைத்தென விளங்குகின்றதல்லவா? அத்துடன், இம் மோகம் அவர்களுக்குதித்தவுடனேயே, தங்கள் முன் பின் பழக்க வழக்கங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, தங்கள் தாய்ச் சபையின் அங்கீகாரம் பெறுவதற்கு முன்னமே இவ் வேலையில் தீவிரமாக இறங்கி விட்டனர்! இந்த கலகக்காரர்கள் ஒழுங்கு முறையில் திரும்பிவிட்டதைக்காண நமக்கேற்பட்டுள்ள சந்தோஷத்தினால் இவர்களைப் பற்றி இன்னும் அதிகம் கூற நாம் விரும்பவில்லை. ஐயோ! பாவம் இப் பதினைந்து வருஷகங்களுக்கப்புறமாவது, பாராளுமன்ற முறையே தகுதியான முறையென்று கண்டு அவ்வழிக்குத் திரும்பிய அவர்களை நான் மனமார வாழ்த்துகின்றேன்.

சட்டசபைகளுக்குள் நுழைந்தவுடன் நம்மை விட பெரும் வேலைகள் செய்து விடுவார்களென்று அர்த்தமல்ல. இனிமேலாவது இவர்கள் ஒழுங்கு முறையைப்பின் பற்றுவார்களென்பதோடு கூட பொது மக்களை தப்புவழியில் நடத்தி அளவிறந்த துன்பங்களுக்கு அவர்களை ஆளாக்காது விட்டு விடுவார்கள் என்பதை நம்பி நாம்மகிழவேண்டியிருக்கிறது. ஏனெனில் பலர் பெருந்துன்பங்கள் அனுபவித்து, வீடிழந்து, வாசலிழந்து, வாழ்க்கை கெட்டு நாசமாயினர். எனவே ஒத்துழையாமை என்ற இயக்கம் ஒழிந்ததே மேல்.

காங்கிரஸ் தற்போது விடுத்திருக்கும் தனது தேர்தல் அறிக்கையில் வெள்ளைக் காகிதத்தை நிராகரிப்பதும், தேசியஅமைப்புச்சபைஏற்படுத்துவதுமே தனது முக்கிய கொள்கையாகத் தெரிவித்திருக்கின்றது. மற்றும் காங்கிரஸ் வாதிகளே உண்மையான இந்தியர்களென்றும், அவர்களே தேசத்தின் பிரதிநிதிகளாகஇருந்து தேசத்துக்காகப் பறிந்துபேச அறுகதை உடையவர்களென்றும் பல காங்கிரஸ் தலைவர்களால் கூறப்பட்டு வருகின்றது.

கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டியார் தற்போது இந்திய சீர்திருத்த விஷயமாகக் கவனித்து வருவதால் வெள்ளை அறிக்கை தற்போது ஒழிந்து விட்டதென்றே கூறலாம். இக் கமிட்டியில் சிபார்சுகள் எவ்வாறிருக்குமென்று சொல்லுவதற்கில்லை. ஆனால், இந்தியாவின் நன்மையைக் கோரியும், இங்கிலாந்தின் நன்மையை இங்கும் கோரியும், அங்குமுள்ள பிற்போக்காளர்களின் சதியாலோசனைகளைச் சற்றும் கவனியாது அதிகாரிகள் தக்க அறிவுடனும், அரசியல் ஞானத்துடனும் நடந்து கொள்வார்களென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளை அறிக்கை பற்றிய நமது அபிப்பிராயத்தை வட்டமேஜை மகாநாட்டிலும், மற்றும் சட்ட சபைகளிலும் நமது பிரதிநிதிகள் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளனர். இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் தற்காலீகமாக மாகாண சுய ஆட்சி உடனே அளித்தல் மிகவும் நலமென கூறப்பட்டது. ஆனால், நமதுநாட்டுப் பிரதிநிதிகள் அதை ஏற்க மறுத்து விட்டனர். நானும் ஜஸ்டிஸ் கட்சியின் பிரதிநிதி என்ற ஹோதாவில் மத்திய அரசாங்கத்தில் பொறுப்பில்லாத எந்த மாகாண சுய ஆட்சியும் பிரயோசனப்படாதென்றும், என்னுடைய கட்சி அதை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் கூறினேன். தற்போதய அரசாங்க முறையை கையாண்டும், கவனித்து வருபவர்களுக்கே மத்திய அரசாங்கத்தில் பொறுப்பில்லாத மாகாண சுயாட்சி எத்தனை பிரயோசனமற்றதென்பதும் ஒன்றுக்கொன்று எத்தனை முரண்பட்டதென்பதும் தெற்றெனவிளங்கும். எனவே கூட்டுப்பார்லிமெண்டரி கமிட்டியாரால் சீர்திருத்தப்பட்டு வெளிவரப்போகும் வெள்ளை அறிக்கையை நாம் ஆதரிக்கிறோம். அதுவே இம் மகாநாட்டின் முடிவாக இருக்குமென்று நான் நம்புகின்றேன்

அரசியல் அமைப்புச் சபை என்ற பெயரைக்கண்டு எந்த அரசியல் வாதியும் ஏமாந்துவிட முடியாது. வகுப்புவாதத்திட்டத்தை உதறித் தள்ளுவதனாலும், வெள்ளை அறிக்கையை நிராகரிப்பதனாலும் தேசம் ஒரு சிறிதும் முன்னேற்றமடையப் போவதில்லை, இந்த வகுப்புவாதத் தீர்ப்பால் ஒரு வகுப்பினருக்கும் திருப்தி ஏற்படவில்லை யென்பதை நான் அறிவேன். இவ்விவாதத்தை நாமே நமக்குள் தீர்த்துக்கொள்ள முடியாமல் அரசாங்கத்தாரை இதை ஒரு முடிவு செய்யும்படி கேட்டுக் கொண்டதினாலேயே அதை பிரதம மந்திரியவர்கள் ஏற்றுக்கொண்டு தீர்ப்பு செய்தார். மேலும் இத்தீர்ப்பானது தற்காலீகமானதென்றும், பல்வேறு வகுப்பினரும் தமக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ளும் காலங்களில் இதை மாற்றிக்கொள்ளலாமென்றும் பிரதம மந்திரியவர்கள் தெளிவாகக் கூறியிருக்கும்போது இதைத் தப்பருத்தம் செய்வதும், அவர் மீது வீண்பழி சுமத்துவதும் எவ்வளவு தவறானதென்பதையே நீங்கள் கவனிக்கவேண்டும்.

அரசியலதிகாரமானது இந்தியர்க

தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க.

சர். ஷண்முகம் பேச்சு.

"குல்லூகப்பட்டர் (மனுஸ்மிருதிக்கு வியாக்கியானம் எழுதியவர்) குதர்க்கம்."

ஆட்டாவா ஒப்பந்த விளக்கம்.

சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் 27-9-34ந் தேதி மாலை தோழர் எ. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான பொதுஜனங்களும், பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முகவுரைக்குப்பின் சர். ஆர். கே ஷண்முகம் அவர்கள் பேசினார்.

சர். ஷண்முகம் பேச்சு.

பின்னர் பலத்த கரகோஷத்தினிடையே சர். ஷண்முகம் எழுந்து பேசியதாவது:—

தோழர்களே! இம்மண்டபத்தில் சென்னை மகாஜனங்களடங்கிய கூட்டத்தில் நான் பேசி பலவருஷங்களாகின்றன. பலவருஷங்களுக்கு முன் தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியாரை அவரது சகாக்கள் கைவிட்டு விட்டபோது, அத்தகைய செய்கையைக் கண்டித்து, இம் மண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் நான் பேசினேன். ஆனால், இப்போது அவர் என்னைக்கண்டித்து வருவதற்குப் பதில் கூறுவதற்காக நான் பேச நேர்ந்திருப்பது வேடிக்கையான விஷயமேயாகும் இச்சந்தர்ப்பத்தில் தோழர் ராமசாமி முதலியார் தலைமை வகித்திருப்பதைக் குறித்து நான் சந்தோஷமடைகிறேன். ஏனெனில் சென்ற 2-வருஷ காலமாக இந்தியா சட்டசபைத் தலைவர் என்ற ஹோதாவில் நான் அவரது பிரசங்கங்களைக் கேட்டு வந்தேன். எனவே இப்போது அவர் தலைமை வகித்து எனது பிரசங்கத்தைக் கேட்க நேர்ந்திருக்கிறது. (சிரிப்பு)

பார்லிமெண்டு தேர்தல் போர்டு போக்கு.

சென்னை மகா ஜனங்களடங்கிய இப்பெரும் கூட்டத்தில் பேசும்படியான அவசியத்தை உண்டுபண்ணியதற்காக நான் காங்கிரஸ் தேர்தல் போர்டாருக்கு வந்தனமளிக்கிறேன். சாதாரணமாக சட்டசபைத் தலைவர், தமது கொள்கையை விளக்கிக் கூட்டங்களில் பேசி, தமக்கு ஓட்டு கொடுக்குமாறு வாக்காளர்களைக் கேட்டுக் கொள்ளும்படி நேருவதில்லை. இந்தியாவிலேயே பிரதம அரசியல் ஸ்தாபனமாக விளங்கும் காங்கிரஸில், அத்தகைய உயர்ந்த சம்பிரதாயத்திற்கு மதிப்புக் கொடுப்பார்களென்றும், அரசியல் கட்சிகளிலும், அரசியல் விவாதங்களிலும் சட்டசபைத் தலைவராக இருப்பவர் கலந்து கொள்ளும்படி செய்யமாட்டார்களென்றும் நான் நினைத்தேன். ஆனால் காங்கிரஸ் தேர்தல் போர்டார் வேறு விதமாகத் தீர்மானித்து விட்டனர். எனது தொகுதியில் போட்டி போடுவதென காங்கிரஸ் தேர்தல் போர்டார் தீர்மானித்த பின்னர் கூட, கூடுமான வரை அரசியல் விவாதங்களில் கலந்து கொள்ளக் கூடாதென்றே நினைத்தேன். ஆனால் பிரதிதினமும், பிரதி கூட்டத்திலும் என் மீது துவேஷப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

சென்ற 15 வருஷ காலமாக தேசத்துரோகமாக நான் ஏதாவது செய்தேனா வென்பதை அத்தகையோர் காட்ட முடியுமா? அவ்விதம் காட்ட முடியாததால், அவர்கள் பொய்ப்பிரசாரத்திலும், துவேஷப் பிரசாரத்திலும் இறங்கி விட்டார்கள். சமீபத்தில் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் தமிழ் ஜில்லாக்களிலுள்ள ஓரிடத்தில் பேசியதாவது, எனது தொகுதியில் போட்டிபோட காங்கிரஸ் தேர்தல் போர்டு தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். அவர் அப்போது கூறியதன் சாரமாவது:— சட்டசபைத் தலைவர் தொகுதியில் போட்டி போடக் கூடாதென்ற சம்பிரதாயம் சுதந்திர நாட்டில் தான் இருந்து வர முடியும். வைசிராய் அல்லது கவர்னர்களின் ஆளுகைக்குட்பட்டு நடந்து கொள்ளும் தலைவர்கள் விஷயத்தில் அத்தகைய சம்பிரதாயத்தை கைக் கொளுவதென்பது சரியாகாது."

மகாத்மாவின் அத்யந்த சகாவான தோழர் ஆச்சாரியார் அவ்விதம் கூறியது மிகவும் இழிவான அவதூறாகும். தோழர் ஆச்சாரியார் அவ்விதம் கூறியிருப்பதற்கு இரண்டே பொருள்கள் தான் உண்டு. அதாவது ஒன்று வைசிராய் சட்ட சபைத் தலைவரை ஆட்சி செய்து வரவேண்டும், அல்லது நான் அடிமை உணர்ச்சியுடையவனாக வைசிராய்க்குக் கீழ்ப்படிந்து இருந்து வருபவனாக இருக்க வேண்டும். வைசிராய் தலைவரை ஆட்சி செய்து வரும் பட்சத்தில் காலஞ்சென்ற தோழர் வி. ஜே. பட்டேலையும் அவர் ஆட்சி செய்திருக்க வேண்டும். இனி வரப்போகும் தலைவரையும் ஆட்சி செய்வார் என்று தான் நினைக்க வேண்டும். அவ்விதம் அவர் கூறியது பார்லிமெண்டு முறைக்கு முற்றிலும் விரோதமென்று கூறுவதைத் தவிர நான் அதிகமாக எதுவும் கூறவில்லை.

மகாத்மா சிஷ்யர்கள் ஆக்கிரஹம்

மகாத்மா இத்தேசத்திற்கு சத்தியாக்கிரகத்தைக் கொடுத்தார். அவர் சத்தியத்தை அனுஷ்டித்து வருகிறார். ஆனால் அவரது சிஷ்யர்களோ ஆக்கிரகத்தைக் கைக்கொண்டிருக்கிறார்களென வடஇந்தியா பத்திரிகையொன்று கூறியது முற்றிலும் சரியே. (பலத்த சிரிப்பு) அதனால் தான் அவர்கள் பிறர் மீது துவேஷப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இந்தியா சட்ட சபையில் எனது நடவடிக்கைகளை சட்டசபைக் குறிப்புகளிலிருந்து யாவரும் அறிந்து கொள்ளலாம். அதில் ரகசியம் ஒன்றுமில்லை. ஷைகுறிப்புகளிலிருந்து நான் எப்போதாவது வைசிராயின் கட்டளைக்குட்பட்டு நடந்திருக்கிறேனென தோழர் ராஜகோபாலாச்சாரியார் காட்ட முடியுமா? ஆனால் பாரபட்சமற்ற முறையில், தலைவர் என்ற ஹோதாவில் நான் கூறியுள்ள தீர்ப்புகளைப் பற்றி நான் எதுவும் கூறப்போவதில்லை.

'குல்லூகப்பட்டர்' வியாக்யானம்.

பார்லிமெண்டு தலைவருடன் போட்டி போடுவதில்லையென்ற சம்பிரதாயம் பார்லிமெண்டு முறை இருந்து வரும் தேசங்களிலெல்லாம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. அவ்வித அனுஷ்டானமிருந்து வருவதற்கு சிறந்த காரணங்களுமிருக்கின்றன. சட்டசபைத் தலைவரின் நிலைமை என்ன? தலைவர் அளிக்கும், தீர்ப்பானது தேசத்திற்கே பாதகத்தை விளைவித்து விடக்கூடும். சட்ட சபையில் பல கட்சிகளும் அதிகாரத்திற்கு வரப் போராடி வருவது சகஜமாகும். எனவே தலைவர் அங்கு சிறிதும் பாரபட்சமின்றி நடந்து கொள்ள வேண்டும். பயமோ அல்லது சலுகையோ கூடாது தலைவர் மேடை மீதேறி 'தாத்தனம்' செய்வதும் கூடாது. அதனால் அப்பதவியின் கௌரவத்திற்கு ஹானி யேற்படும். எனவே: தலைவர் கட்சிகளிலோ, விவாதங்களிலோ சிறிதும் கலந்து கொள்ளக் கூடாது. தலைவர் எந்த கட்சியிலும் பற்றுதலுள்ளவராக இருக்கக் கூடாதென்பதே சம்பிரதாயத்தின் நோக்கமாகுமென காங்கிரஸின் குல்லூக பட்டரான தோழர் ஸி. ராஜகோபாலாச்சாரி கூறுகிறார். என்னை 2 வருஷங்களுக்கு முன் இந்தியா சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது, எந்த அரசியல் கட்சியிலும் நான் பற்று தலை விட்டு விட்டதாகக் குறிப்பிட்டேன். அதன் பின் எந்த அரசியல் விவாதத்திலாவது, கட்சியிலாவது நான் கலந்துகொண்டேனென தோழர் ஆச்சாரியார் ருஜுப்பிக்க முடியுமா? நான் எந்த அரசியல் கட்சியிலும் சேரக்கூடாதென்ற விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வருகிறேன். எனவே மேற்படி பிரசாரத்தின் யோக்கியதையை பொதுஜனங்கள் அறிந்துகொள்ளுவதற்கு, நான் தலைவர் என்ற ஹோதாவில் செய்துள்ள கடமையே தகுந்த உதாரணமாகும்.

26 ஜில்லாக்களுக்கு பிரதிநிதி

என்மீது மற்றோர் புகாரையும் கிளப்பி யிருக்கிறார்கள். நான் பழைய தொகுதியிலிருந்து ஓடி,புதிய தொகுதியில் நிற்பதாக சென்னையிலுள்ள ஓர் பத்திரிகை கூறியது. அதன் ஆசிரியருடைய அபார மூளையில் இந்த யுக்தி எவ்விதம் உதயமாயிற்றோ தெரியவில்லை. (சிரிப்பு) சென்ற 11 வருஷங்களாக நான் 3 ஜில்லாக்களின் பிரதிநிதியாக இருந்து வந்திருக்கிறேன். இப்போது 26 ஜில்லாக்களின் பிரதிநிதியாக முற்பட்டிருக்கிறேன். (கரகோஷம்) 3 ஜில்லாக்களில் மாத்திரமல்ல; 26 ஜில்லாக்களிலுள்ளவர்களின் நம்பிக்கைக்கு நான் பாத்திரனாக இருக்கிறேனா வென்பதைப் பார்க்கவே நான் இப்போது முற்பட்டிருக்கிறேன். அவ்விதமிருந்தும் துவேஷப் பிரசாரமும், பொய்க் கூற்றுகளும் இடைவிடாமல் நடந்து வருகின்றன. இப்போது சென்னை மாகாணம் முழுவதிற்கும் நான் பிரதிநிதியாக நிற்கிறேனென்பதை அத்தகைய பிரசாரகர்கள் அறிந்துகொள்ளவில்லை. இவ்விதம் தலைவர் வேறு தொகுதியில் நிற்பது இது முதல் தடவையல்ல. முன்னர் வி. ஜே. பட்டேல் முதலில் பம்பாய் நகர் பிரதிநிதியாக தேர்தலுக்கு நின்றார். 2-வது முறை குஜரத் தொகுதியில் அபேட்சகராக நின்றார். அப்போது அவரை எதிர்ப்பவர்கள் தேசத் துரோகியெனக் கூறினார்கள். ஆனால் இப்போது நிலைமை வேறு விதமாக இருக்கிறது!

"ஒட்டாவா இல்லை ஆட்டாவா"

அடுத்தபடியாக நான் ஆட்டாவா மகாநாட்டில் கலந்துகொண்ட தன் சம்பந்தமாக என்னை துரோகி யெனக் கூறுகிறார்கள். ஆட்டாவாவில் நான் செய்த அலுவல்களைக் குறித்து என் மீது புகார் கூறுகிறவர்களுக்கு "ஆட்டாவா" என்ற உச்சரிப்பைக்கூட சரியாகக் கூறத் தெரியவில்லை (சிரிப்பு) அது ஒட்டாவா அல்ல. ஆட்டாவா என்பது தான் சரியான உச்சரிப்பாகும். (மீண்டும் சிரிப்பு) ஆட்டாவா ஒப்பந்தத்

தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க

R. K. ஷண்முகத்திற்கு பெரும் ஆதரவு.

வெற்றி நிச்சயம். பிரசிடெண்டும் நிச்சயம்.

பார்ப்பனரல்லாத பிரபதஸ்தர்கள் அறிக்கை.

இந்திய சட்டசபைத் தேர்தலில் வர்த்தகத் தொகுதி அபேட்சகராய் நிற்கும் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களை ஆதரித்து பல பிரபலஸ்தர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதன் விபரம் வருமாறு:—

அடுத்துவரும் இந்தியா சட்டசபைத் தேர்தலில் இந்திய வர்த்தகர் தொகுதிக்கு கனம் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்கள் அபேட்சகராக நிற்க முன் வந்திருக்கின்றார். சென்ற 14 வருஷங்களாக சர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் செய்துவரும் பொதுஊழியத்தை உத்தேசித்தும், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களில் அவர் காட்டிவரும் விசேஷ சிரத்தையை உத்தேசித்தும் அவர் வர்த்தகத் தொகுதிக்குப் பிரதிநிதியாக இருக்கத் தகுந்த யோக்கியதை உடையவரென்று நாங்கள் அபிப்பிராயப்பட்டு, இந்தத் தொகுதியில் உள்ள எல்லா ஓட்டர்களும் சர். ஷண்முகம் அவர்களுக்கே தங்களுடைய "ஓட்" கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரபலஸ்தர்கள் விபரம்.

தோழர்கள்.

சர். மகமத் உஸ்மான் சாயபு கே. சி. ஐ. ஈ. (சென்னை மாஜி கவர்னர்)

ராஜா சர். அண்ணாமலை செட்டியார் கே. டி. எல். எல். டி.

ரங்கராவ் (பொப்பிலி ராஜா)

பி. டி. ராஜன்

திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார்

சர். வி. கிருஷ்ணயச் சேந்திரா (வெங்கடகிரி மகாராஜா)

ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி (ராமனாதபுரம் ராஜா)

ராஜா சர். வாசுதேவ ராஜா (கொல்லங்கோடு ராஜா)

ராமச்சந்திர மார்த்தாண்ட தேவ் (கள்ளிக்கோட்டை ராஜா) எம். எல். சி.

குமார ராஜா எம். எ. முத்தையா செட்டியார் எம். எல். சி.

டி. கே. கிருஷ்ணயச் சேந்திரா எம். எல். சி. (வெங்கடகிரி குமார ராஜா)

சர். ஏ. பி. பாத்ரோ எம். எல். சி.

திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடு எம். எல். சி.

திவான்பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியார்

திவான்பகதூர் வி. ஷண்முக முதலியார்

திவான்பகதூர் எம். பாலசுந்தரம் நாயுடு

கான்பகதூர் ஆதம்ஹாஜி முகம்மது சேட்

மேக வெங்கடராமய்ய அப்பாராவ், எம். எல். சி. (மிர்ஜாபுரம் ஜமீன்தார்)

ஏ. எல். ஏ. ஆர். ஆர். எம். வெள்ளையன் செட்டியார் (தேவகோட்டை ஜமீன்தார்)

திவான்பகதூர் கே. சூர்யநாராயணமூர்த்தி நாயுடு

திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் (கோயம்புத்தூர் முனிசிபல் சேர்மன்)

திவான்பகதூர் ஏ. எம். எம். முருகப்ப செட்டியார் எம். எல். சி.

ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் (பழையகோட்டை பட்டக்காரர்) எம். எல். சி.

ஐ. சி. ஈஸ்வரன் பிள்ளை எம். எல். சி. திருநெல்வேலி ஜில்லா போர்ட் பிரசிடெண்ட்)

ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை எம் எல். சி. (திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்ட்)

ராவ்பகதூர் பி. எஸ். ராஜப்பா (பாப்பனாடு ஜமீன்தார்)

எம். டி. டி. ரங்கநாத முதலியார் எம். எல். சி. (திருநெல்வேலி முனிசிபல் சேர்மன்)

ஒய். மஹாபலேஷ்வரப்பா (பெல்லாரி ஜில்லா போர்டு பிரசிடெண்ட்)

ஜி. ஜெகன்னாத ராஜா (சென்னை சட்டசபை டிப்டி பிரசிடெண்ட்)

எம். சிடி. எம். சிதம்பரம் செட்டியார்

டப்ளியூ பி. ஏ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். சி.

வி. கனகசபை நாடார்

எம். எஸ். பி. செந்திக்குமார நாடார்

வி. வி. ஷண்முக நாடார்

எம். எஸ். அய்யாசாமி நாடார்

பி. எஸ். சிதம்பரநாடார்

பி. எஸ். சாத்தப்ப செட்டியார்

எஸ். எ. எ. அண்ணாமலை செட்டியார் எம். எல். சி.

எம். ஆர். எம். பெரியண்ணன் செட்டியார் (காரைக்குடி முனிசிபல் சேர்மன்)

கே. வி. ஏஎல். ஆர்எம். அளகப்ப செட்டியார் எம். ஏ. (பாரிஸ்டர்)

ரோச் விக்டோரியா (தூத்துக்குடி முனிசிபல் சேர்மன்)

எஸ். வி. நல்ல பெருமாள் பிள்ளை.

டி. அப்துல்லா (சென்னை

வி. அப்துல் ரஹீம் சாயபு

எம். சின்னதம்பி பிள்ளை (முனிசிபல் கவுன்சிலர் சேலம்)

அத்திப் பெருமாள் அய்யர் (முனிசிபல் கவுன்சிலர் சேலம்)

எ. கே. டி. கே. எம். சங்கர நம்பூத்திரி பாட் (மலபார் ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி மானேஜிங் ஏஜண்டு)

ராவ்பகதூர் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு.

ஜி. குப்புசாமி நாயுடு (மானேஜிங் டைரெக்டர், கோயம்புத்தூர் காட்டன் மில்ஸ்)

ராவ்சாகிப் எஸ். என். பொன்னே கவுண்டர்

எஸ். வேணு உடையாக் கவுண்ட (சங்கராண்டாம்பாளையம் பட்டக்காரர்)

வி. ரங்கசாமி நாயுடு (மானேஜிங் ஏஜண்டு, ராதா கிருஷ்ணா மில்ஸ்)

கான்சாயபு ஷேக்தாவுத் சாயபு (ஈரோடு முனிசிபல் சேர்மென)

நாராயணதாஸ், கிரதாரதாஸ் (சென்னை.)

"மனித உற்பவம்" என்னும் நூலின் அறிக்கை.

இந்தப்புத்தகத்திற்கு ரிஜிஸ்டர் செய்துள்ளவர்களுக்கு வி. பி. யில் அனுப்பவேண்டுமானால், வி. பி. ரிஜிஸ்டிரேஷன் உள்பட புத்தகமொன்றுக்கு அணா $14\frac{1}{2}$ ஆகின்றது. முன்பணம் அனுப்பினால் காப்பி ஒவ்வொன்றுக்கு அணா $11\frac{1}{4}$ கால் ஆகின்றதென்று போஸ்டாபீஸ் மூலம் தெரிய வந்தது.

வி. பி. யில் அனுப்புவதில் புத்தகமொன்றுக்கு வீணே அணா $3\frac{1}{4}$ நஷ்டமாகிறது. இந்தக் கணக்கின்படி 500 காப்பிகளை வி. பி. யில் அனுப்பவேண்டில், சுமார் ரூபாய் 100 நஷ்டமாகின்றது. 20 புத்தகங்களுக்கு ரயில்வே பார்ஸலில் அனுப்பினால் மிக லாபமாக இருக்கின்றது. இந்தக்காரணங்களால் புத்தகம் வேண்டுமென்று ரிஜிஸ்டர் செய்தவர்களுக்கும், செய்யாதவர்களுக்கும் புத்தகமொன்றுக்கு;

விலை அணா	0—8—0
ஸ்டாம்பு	0—1—3
மணியார்டர் கமிஷன்	0—2—0
ஆக மொத்தம் ஒன்றுக்கு	0—11—3

ஆகையால் புத்தகமொன்றுக்கு அணா $9\frac{1}{4}$ மணியார்டர் மூலமாக அனுப்புவார்களாகில் புத்தகங்களை சாதாரண போஸ்டில் அனுப்பப்படும். ரயிலில் அனுப்பவேண்டுமென்போர் முன் கிரயத்தை மாத்திரம் அனுப்பினால் காப்பிகளை ரயில்வே பார்சலில் அனுப்பப்படும். ரயில் சார்ஜ் கட்டி புத்தகப் பார்சலைப் பெற்றுக்கொள்ளலாம். வெறும் ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் அனுப்ப முடியாது. மணியார்டரில் புத்தக விலையும் அதன் ஸ்டாம்பு சார்ஜும் முன் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சமதர்ம பிரசுராலயம்,
22, சவுத்பீச் திருவல்லிக்கேணி,
சென்னை

சிங்கப்பூர்.

இவ்வூர் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் 9-9-34 மாலை 4 மணிக்கு விக்டோரியா மெமோரியல் ஹால் என்ற டவுன் ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் அ. சி. சுப்பையா அவர்களின் தலைமையின் கீழ்கூடியது. ஆண்களும், பெண்களுமாக சுமார் 1000த்துக்கதிகமானஜனங்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகத்தின் காரியதரிசி தோழர் அ. இராகவன் அவர்கள் "நமது முன்னணிவேலை" என்னும் பொருள் பற்றி சுமார் $1\frac{1}{2}$ மணி நேரமும் தற்காலப்பொருளாதாரநெருக்கடியையும், அந்நெருக்கடி ஏற்படும் காரணத்தைப்பற்றியும், அதனால் விளையும் தீமைகளைப்பற்றியும் அவைகளை ஒழிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும் மிக விரிவாக ஒன்றரை மணிநேரமும்பேசியபின் தலைவர்முடிவுரை கூற 6மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

உலக தேச சரித்திரச் சுருக்கம்.

A Short History of the World.

by

H. G. Wells.

(மொழிபெயர்ப்பாளர் சி, வீ. கே.)

அத்தியாயம் 1.

குறிப்பு:— இற்றைய உலகில் எங்கணும் பகுத்தறிவு தழைத்தோங்கி வருவதின் பயனாய் விஞ்ஞானம் தலை சிறந்து விளங்குகிறது. அறிவுத்தாகம் கொண்டலையும் மாந்தர்கட்கு இத்தகைய நூல்கள் அவசியம். விஞ்ஞான உலகின் தத்துவங்கள் இன்று உலகில் தீவிரமாகப் பரவிவருவதிலிருந்து இதன் உண்மை தெற்றெனப் புலப்படுகின்றது. ஆகவே உலகின் நிகழ்ச்சிகளிலிருந்து விஞ்ஞானப் பிரபந்தங்கள் அவசியம் வேண்டற்பாலன வென்பதை நாம் அதிகம் வலியுறுத்தத் தேவையில்லை. மேல் நாடுகளில் இத்தகைய நூற்கள் நூற்றுக்கணக்காக வருடந்தோறும் பல்கி வருகின்றன. நமது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த விதமான நூல்கள் மருந்துக்கும் கிடைக்க கஷ்டமாயிருக்கின்றது. விஞ்ஞான நூல்கள் தமிழ் பாஷையில் இயற்றப்பட வேண்டுமென்ற அவாக்கொண்டவர்களில் நாமும் ஒருவர். ஆகவே எமது சிற்றறிவிற் கெட்டிய வரையில் சில புத்தகங்களை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்க வேண்டுமென்ற அவாக்கொண்டுள்ளோம். இதற்கிடையே நமது தோழர்களில் சிலர் எமது அவாவை ஆதரிக்கவே, லண்டன் பகுத்தறிவு நூற்பதிப்புச் சங்கத்தாரால் தோழர் எச், ஜி. வெல்ஸ் அவர்களைக் கொண்டு வெளியிடப்பட்ட உலக தேச சரித்திரச் சுருக்கம் என்ற நூலை மொழி பெயர்த்து "பகுத்தறிவு" மூலமாக வெளியிட இசைந்தோம். இந்நூல் கூடியவரை ஆசிரியர் கருத்துக்கு ஒரு சிறிதும் மாறுபடாதவாறு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது, பகுத்தறிவு பெற விழையும் வாலிபர்களை ஊக்குவிக்கப் பகுத்தறிவு இதைப் பிரசுரிக்குமென நம்புகிறோம்.

உலகின் விசாலம்.

நமது உலகத்தின் கதை இன்னும் சரிவரத் தெரிந்ததாக இருக்கவில்லை. ஒரு சில நூற்றாண்டுகட்கு முன்னர் 3000 வருடத்திற்கப்பாற்பட்ட தேச சரித்திரம்—மனிதர்களால் கையாளப்பட்டது அதற்கு முன்னர்நடந்த சம்பவங்கள்கட்டுக்கதைகளாகவும், கற்பனைகளாகவும் தான்கருதப்படுகிறது. நாகரீகமடையப் பெற்ற உலகினரில், பெரும்பாலோர் உலகம் தற்செயலாக கி. மு. 4004-ல் உண்டானதென்று நம்புகின்றனர். இந்த நம்புதல் பிறருக்குக் கற்பிக்கப்பட்டு, வருகின்றதென்றாலும் முதல் வருடம் வசந்த காலத்திலேயோ, கார் காலத்திலேயோ உற்பத்தியான தென்பதைப்பற்றிய தத்துவங்கள் வித்தியாசப்படுகின்றன. இந்தத்திட்டமான மனோ கற்பிதப் பொய்யுணர்வு ஹீப்ருபைபிளினின்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது. சுபேச்சையான தெய்வக் கோட்பாட்டினின்றும் இது தொடர் புடைத்தாயிருக்கின்றது. இந்த நம்பிக்கைகளெல்லாம் வெகு காலத்திற்கு முன்பே மத போதகர்களால் புறக்கணிக்கப்பட்டு உலகாயதமாக பிரபஞ்சம் அதன் சர்வ தோற்றங்களுடன் வெகு காலத்திற்கு முன்னதாகவும், மேலும் காலவரைகணக்கில்லாததாகவும் அமையப் பெற்றிருக்கிறது என்று அறிந்து வரப்படுகிறது. உண்மையில் இந்தத்தோற்றங்களில் வஞ்சகம் இருக்கலாம். எப்படி ஒரு அறை இரண்டு பக்கங்களிலும் கண்ணாடி வைத்திருப்பின், நீளம் தெரியாமல் இருக்கிறதோ அதே போன்று இத்தியாதி ஆராய்ச்சிகளிருக்கலாம். ஆனால் நாம் வசிக்கும் பிரபஞ்சம் ஆறாயிரம், அல்லது ஏழாயிரம் வருடங்களாக இருந்து வருகிறதென்பது முற்றிலும் விலக்கான நம்பிக்கையாகக்கருதப்படலாம்.



கனம் பொப்பிலி அரசர்.

தென்னிந்திய நலவுரிமைச்சங்க மகாநாட்டு பிரசிடெண்டு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்.

இந்த உலகம்—எல்லோருக்கும் அறியப்பட்டபடி—ஒரு கோளம், சிறிது நெருக்கப்பட்டு ஒரு ஆரஞ்சுப் பழ உருவில் எண்ணாயிரம் மைல் குறுக்களவில் இருக்கின்றது. அதன் சுற்றளவு ஏறக்குறைய 2500-வருடங்களாக அறிஞர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு முன்னர் உலகம் தட்டையாய் இருந்ததாகக் கருதப்பட்டு வந்தது. மேலும் இப்பொழுது மனோ கற்பிதமாக நம்பப்பட்டு வரும் எண்ணங்கள் ஆகாயத்திற்கும், நட்சத்திரங்களுக்கும் மற்ற கோளங்களுக்கும் தொடர்பாகப் பாவிக்கப்பட்டன. இந்த உலகம் தனது கோளத்தின் மையத்தில் சுழன்று வருகிறதென்பதை நாம் சகலரும் அறிவோம். (இந்தக் கோளத்தின் மையம் தனது சமரேகையின் குறுக்களவில் 24 மைல் குறுகினதாக இருக்கிறது.) ஒவ்வொரு 24மணி நேரத்திற்கும் சுழன்று வருகிறதால் பகலும், இரவும் மாறி மாறி வருகிறதென்பது அறியக்கிடக்கின்றது. சூரியனை கொஞ்சம் சாய்ந்ததும் மாறக்கூடியதும், முட்டை வடிவமுமான பாதையினூடே பூமி சுற்றி வருகின்றது. சூரியனிலிருந்து பூமியின் தூரம் $91\frac{1}{2}$ மில்லியன்ஸ் மைலுக்கும், $94\frac{1}{2}$ மில்லியன்ஸ் மைலுக்கும் இடையில் இருக்கிறதெனக் கணிக்கப்பட்டு இருக்கின்றது.

பூமியைச் சுற்றி ஒரு கோளம் சுழன்று வருகின்றது. அதன் பெயர் சந்திரன். சராசரி 2,39,000 மைலுக்கப்பால் சந்திரன் இருக்கிறது. பூமியும், சந்திரனும் மாத்திரம் சூரியனைச் சுற்றி வரும் கோளங்களல்ல. இன்னும் மற்ற கோளங்களான புதனும், சுக்கிரனும் முறையே முப்பத்தாறு (36), அறுபத்தேழு (67) மில்லியன்ஸ் மைலுக்கப்பாலிருக்கிறது. பூமியின் வளைவின் பாகத்திற்கு இப்பாலும் சில சிறு கோளங்களைத் தவிர்த்து, செவ்வாய், வியாழன், சனி, யூரனஸ், நெப்டியூன் முதலிய கோளங்கள் முறையே நூற்று நாற்பத்தொன்று (141) நானூற்று எண்பத்துமூன்று (483) எண்ணூற்றெண்பத்தாறு (886) ஆயிர

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

கோவை

தமிழ் மாகாண மகா நாடு.

தலைவர் தோழர் சி.

ராஜகோபாலாச்சாரியார் பேச்சு சுருக்கம்.

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார்.

29-9-34ந்தேதி கோயமுத்தூரில் நடைபெற்ற 36-வது தமிழ் மாகாண மகாநாட்டில் தலைமை வகித்து தோழர் ஆச்சாரியார் கூறியதாவது:—

"கத்தர் விஷயத்திலிருந்த கட்டுப்பாட்டைக் காங்கிரஸ் தளர்த்தி விடவில்லை."

"காங்கிரஸ்காரர்கள் மில் ஆடைகளையெல்லாம் விலக்கி கையால் நெய்த கத்தரையே உபயோகிக்க வேண்டும். கத்தரையே ஆதரிக்க வேண்டும்" என்று காரியக்கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

கத்தர் தான் முதல் வேலை.

தேசமெங்கும் தேசாபிமான சக்தியை மீண்டும் ஸ்தாபித்து காங்கிரசுக்கு பலம் நிறுவ விரும்பினால், எங்கும் கத்தர் மயமாக விளங்கவேண்டும். மற்றத்துணிகள் கண் முன் தென்படவே கூடாது.

'சுதேசி'க்கு ஆதரவு தருவது என்றால் கத்தர் கட்டுப்பாட்டை நெகிழ விடுவது என்று நினைக்கக் கூடாது. துணி விஷயத்தில் கத்தரையும் இதரசாமான்களுக்கு, சுதேசி சாமான்களையும் உபயோகிக்க வேண்டு மென்பதே அர்த்தம்.

காங்கிரஸ் ஸ்தாபனங்கள் சிறிய சிறிய குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமுண்டாக்க உழைக்க வேண்டுமேயன்றி, சுய சக்தியுடைய பெரிய தொழிற்சாலைகளின் சரக்குகளை ஆதரிப்பதில் நமது சிரத்தையைச் செலவிட வேண்டாமென்பது காந்திஜீயின் கருத்து. இதனால் பெரிய தோழில்கள் மீது விரோதமென்று அர்த்தமன்று. உதவியின்றி வளர முடியாத சிறு கைத்தொழில்களுக்கு காங்கிரசு தன் சிரத்தையைக் காட்டுவதாகத் தான் அர்த்தம்.

தீண்டாமை.

நமக்கு ஹிந்து மதத்தில் பக்தி இருந்தால், நாம் அதைக் காப்பாற்ற விரும்பினால், ஹரி ஜனங்களுக்கு மத விஷயத்தில், சம உரிமை கொடுக்க முடியும், கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய சித்தாந்தம். ஹரிஜனங்களுக்குக் கல்வி போதித்து அவர்களுடைய பொருளாதார நிலைமையை முன்னேற்றம் செய்ய முயற்சிப்பது உயர்ந்த நோக்கம் தான். ஆனால் அது உபகரணமாகுமே யொழிய, மத வழி பாடுகளில் அவர்களுக்கும் இதர ஹிந்து வகுப்பினரைப் போன்ற உரிமை உண்டு என்பதற்கு சமானமாகி விடாது. கல்வி, செல்வம், அதிகாரம் முதலியவற்றைக் கொடுத்து விட்டு சமூக அந்தஸ்தை யளிக்க மறுப்பதோ அல்லது தாமதப்படுத்துவதோ, இப்பொழுது மூட நம்பிக்கையினாலிருக்கும் அற்ப சந்தோஷத்திற்கு பதிலாக வெறுப்பை உண்டு பண்ணுவதாகும். அவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சீர்படுத்துவதற்கு முன்பாகவே, அவர்களுக்கு மத வழிபாடுகள் சம உரிமை கொடுப்பதில் வெகு காலத்திற்கு முன்னால் தோழர் ராமானுஜாச்சாரியாரும் மற்றவர்களும் மேற்கொண்ட வழியையே நாம் பின் பற்றுகிறோம். அது ஒன்றுதான் பகுத்தறிவுக்கேற்ற வழி.

இந் நிலைமைக்கு மாற்று, மத விஷயங்களில் சம உரிமை தான் என்று நான் சொல்வது மகாத்மாவின் அபிப்பிராயத்திற்கும் ஒத்திருக்கிறது. இருந்தாலும் எந்தச் சீர்திருத்தத்தையும் வற்புறுத்தலின் பேரில் சாதிக்க சீர்திருத்தக்காரர்களோ, காங்கிரஸோ விரும்பவில்லை யென்பதைத் தெளிவாக உணர வேண்டும். எந்த விஷயத்திலும் வற்புறுத்தலை மேற்கொள்வதில்லை யென்பது காங்கிரசின் கொள்கை. அரசியல் விடுதலையைக் கூட பலாத்காரத்தினால் அடையக் காங்கிரஸ் விரும்பவில்லை. அப்படியிருக்க சாத்தியப்பட்டால் கூட பயமுறுத்தலினாலோ, பலாத்காரத்தினாலோ, காங்கிரஸ் சமூக சீர்திருத்தம் செய்யக் கொஞ்சமும் விரும்பாது.

சட்டம் இல்லை.

வரப்போகும் தேர்தலில் சர்க்காருக்கும், காங்கிரசுக்கும் உள்ள அரசியல் பிரச்னைகளைத் தவிர, வேறொரு பிரச்னையையும் காங்கிரஸ் முன்னணியில் கொண்டுவரவில்லை. இத் தேர்தலில் வெற்றி யடைந்தால், அதைக்கொண்டு காங்கிரஸ் ஆலயப் பிரவேச சம்பந்தமாய் மசோதா கொண்டு வராதென்பது சந்தேகமறத் தெளிவாக்கப் பட்டு விட்டது. சனாதனிகளும் இது விஷயத்தில் திருப்தி யடைந்திருப்பார்களென்று நம்புகிறேன்

மது விலக்கு

சட்ட மறுப்பு நின்று விட்டதால் மது விலக்கும் நின்று விடவில்லை என்றும், மறியல் அல்லாத மற்ற வழிகளில் மது விலக்கு பிரசாரத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டு தான் போகவேண்டுமென்றும் கூறினார்.

சு. ம. காரர் மனமாற்றம்.

பின்னர் தோழர் ஆச்சாரியார் கூறியதாவது:—

"இதுவரை நமக்குப் பரம எதிரிகளாயிருந்த 'சுயமரியாதைக்காரர்கள்' என்ற கோஷ்டியாருக்கு இப்போது மனமாற்றம் ஏற்பட்டிருப்பது கண்டு நான் சந்தோஷிக்கிறேன்."

கடவுளிடம் நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறவர்களுக்குத்தான் அதிகமான தெய்வபக்தி இருக்கிறது. சுயமரியாதைக்காரர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களில் அநேகர்—அதிலும் குறிப்பாக இளைஞர்கள்—இப்பொழுது காங்கிரசில் சேரவேண்டுமென்று முன் வருகிறார்கள். அவர்களை நாம் வரவேற்க வேண்டும். பழைய தகராறுகளையும், எதிர்ப்புகளையும் காட்டி அவர்களைப் புறக்கணிக்க வேண்டாம்.

நடத்தை.

காங்கிரசுக்கு உண்மையாய்ப்பலமளிப்பது தனிப்பட்ட காங்கிரஸ்காரர்களின் நன்னடத்தையும் குண விசேஷங்களுமே. இதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனதில் இறுத்திக்கொண்டு ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியனும் காங்கிரசின் நல்ல பெயருக்கும் அதன் அபார சக்திக்கும், தான் ஒரு பொறுப்பாளி என்பதை மறவாமலிருக்க வேண்டும். தியாகம், கட்டுப் பாட்டுக்கும் தலைவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது இவைகளே நமக்கு எல்லாவித சக்திகளையும் அளித்திருக்கின்றன.

மகாத்மா அறிக்கை ஓர் வியாக்யானம்.

காந்திஜீ காங்கிரசை விட்டு விலகுவதாகக் கூறுவதை ராஜீயத்திலிருந்து விலகிக்கொள்ளப் போவதாய் அர்த்தம் செய்யக்கூடாது. காங்கிரஸை அவர் எதிர்ப்பதாகவோ அல்லது அதன் செல்வாக்கைக் குறைக்க விரும்புவதாகவோ நினைக்கக்கூடாது.

சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவில்லை.

அவர், பெருமிதமான மக்கள் சட்டமறுப்புச் செய்வதை முதலில் நிறுத்திக்கொண்டு தனிப்பட்ட நபர்கள் மட்டில் சட்டமறுப்பை மேற்கொள்ளலா மென்றார். வெற்றிகரமாய் சத்யாக்ரகப் போரை நடத்துவதற்கு வேண்டிய சக்தியையும் யோக்கியதாம்சங்களையும் தனிப்பட்ட நபர்கள் காண்பிக்க முடியுமென்று அவர் எண்ணினார். வெற்றிகரமாய் சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கு வேண்டிய சாதனங்கள் இல்லாமையால், தனி நபர்ச் சட்டமறுப்பையும் நிறுத்திவிட்டார். தோல்வியடைந்து விட்டோமென்ற உணர்ச்சியுடன் இவைகளில் எதையும் நிறுத்தி விடவில்லை.

ஆனால் நாம் இதுவரை நமது லட்சியத்தை நம்பவில்லை. தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவதும், அதன் சட்டசபை வேலைகளும், நமக்கும் பிரிட்டிஷாருக்கும் ஒரு கண்ணியமான சமரசத்தை ஏற்படுத்தி வைக்க உதவியாக இருக்கக்கூடும். ஆனால் நம்மிடம் பலம் இல்லாமற் போனால், அகிம்ஸை

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

இந்தியாவின் :: :: யோக்கியதை.

"ஆபாச மதம்.

கோவில்கள் கசாப்புக்கடைகள்.

வக்கீல்கள் ஒழுக்கமில்லாதவர்கள்.

மந்திரிகளும், நீதிபதிகளும் லஞ்சம் வாங்குபவர்கள்.

சிவிலியன்களே சத்தியவாதிகள்."

நடுநிலைமை நிருபர்.

"சண்டே டெஸ்பாச்சு" என்ற லண்டன் பத்திரிகையில் ஒரு நீண்ட நிருபம் வெளி வந்திருக்கிறது. அதை எழுதியவர் ஐடன் கிராலி என்ற ஒருவர். உலக முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து மற்றப் பத்திரிகைகளில் இதுவரையில் வெளிவராத விஷயங்களைத் தேடிப்பிடித்து தாம் கண்டவைகளை அப்படியேஎழுதிவிடவேண்டுமென்று "சண்டே டெஸ்பாச்சு" நிருவாகஸ்தர்கள் ஐடன் கிராலிக்கு கட்டளையிட்டிருந்தார்களாம். அந்தக் கட்டளையைச் சிரமேல் தாங்கி திரு. ஐடன் கிராலி இந்தியா முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்து தாம் கண்டவைகளை டிநிருபர் மூலம் பிரிட்டிஷாருக்கு விளக்கிக்கூறுகிறார்.

திரு. ஐடன் கிராலி பாரபட்சமின்றி அந்த நிருபத்தை எழுதியிருப்பதாக "சண்டேடெஸ்பாச்சு" பத்திரிகை ஒருபீடிகை போட்டுக்கொண்டு அக்கட்டுரையைப் பிரசுரித்திருக்கிறது ஆனால் அந்தப் பாரபட்சமற்றநிருபர்கூறுவதென்ன? இந்தியர்களில் பெரும் பாலார் ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரப் பதவியிலிருப்பவர்கள் என்ன சொன்னாலும் அதன்படி நடக்க இந்தியர்கள் தயாராகவும் இருக்கிறார்கள்.

அதிகாரம் செலுத்துகிறவர்கள் யார் என்பதைப் பற்றி இந்தியர்கள் கவலைப்படுவதே இல்லை

அப்பால் "இந்தியர்களின் அந்தரங்க நோக்கம் என்ன? இந்தியர்களின் குணகுணங்கள் எவை"? என்று பார்ப்போம்.

ஆபாச மதம்
அழுக்கடைந்த மக்கள்.

"இந்தியர்களைப் போன்ற அழுக்கடைந்த நாற்றம் பிடித்தமனிதர்களை உலகத்திலேயேபார்க்க முடியாது.

இந்தியர்களுக்கு வாந்திபேதியோ விஷசுரமோ உண்டாவதில்லை. ஏனெனில் பல நூற்றாண்டு காலமாக ஆபாச வாழ்க்கை-அசுத்த வாழ்க்கை வாழ்ந்து பழகிப் போனதில் அவர்களை அக்கொடிய வியாதிகள் தீண்ட பயப்படுகின்றன. அதனாலேயே கங்கா ஜலம் குடிப்பவர்களுக்கு நோயுண்டாவது இல்லை. காரணம் கங்கா ஜலம் பரிசுத்தமானதென்பதினால் அல்ல. கங்கா ஜலத்தைக்காட்டிலும்இந்தியர்கள் உடல் அழுக்காய்இருப்பதே அதற்குக் காரணம். காசியில் இந்தியர்கள் கங்கா ஸ்நானம் செய்வதை நான் பார்த்தேன். அவர்கள் ஸ்நானம் செய்து கொண்டிருக்கையில் பக்கத்தில் ஒரு பிரேதம் மிதந்து கொண்டிருந்தது."

"இந்தியர்களில் 100க்கு 90 பேர் கிராமங்களிலே வசிக்கிறார்கள். கிராமங்களில் நாற்கால் மிருகங்களும் கிராமவாசிகள் வீட்டிலேயே கட்டி வளர்க்கப்பட்டு வருகின்றன. வீடுகளுக்கு ஜன்னல்கள் கிடையா. அவைகளில் அங்கங்கே ஓட்டையிருக்கும். அந்த ஓட்டைகள் வைக்கோலால் அடைக்கப்பட்டிருக்கும். பறவைகள் அந்த வைக்கோலால் மூடப்பட்ட பொந்துகளில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன."

மதமே காரணம்.

"அவர்கள் ஏன் இப்படி உயிர் வாழ்கிறார்கள். அவர்களைச் சுத்தப்படுத்த பிரிட்டிஷார் ஏன் முயலவில்லை? என்று நீங்கள் கேட்கலாம். இந்தியர்களின் மதமே அதற்குக் காரணம், நகரங்களிலுள்ள வீதிகளைச் சுத்தம் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்தபோது சர்க்கார் மதவிஷயங்களில் தலையிட்டு விட்டதாக ஜனங்கள் புகார் செய்து கலகம் செய்யத் தொடங்கினார்கள்."

காந்திக்கும் அழுக்குத்தேவையே.

ஹிந்துமதத்தைப்போல அசுத்தமான மதம் உலகத்திலேயே இல்லை. உள்சுத்தம் போதுமானதென்றும் உடற்சுத்தம் தேவையில்லையென்றும் காந்தியே கூறியிருக்கிறார்.

"ஹிந்து மதத்தில் விசேஷ மகிமை எதுவும் இல்லை. காளி கோவில் உள்பட எந்தக் கிராமக் கோவிலுக்கு வேண்டுமானாலும் சென்று பாருங்கள். ஆட்டுக் குட்டிகளை ஜனங்கள் பலியிடுவதை நீங்கள் தாராளமாகக் காணலாம்."

கோவில்கள் கசாப்புக்கடை.

"இரத்தம் சிந்தியிருக்கும் இடத்தில் பெண்களும், குழந்தைகளும் குவிந்து கிடக்கிறார்கள் கோவில்கள் கசாப்புக் கடைகள் போல் இருக்கின்றன. கோயில் முழுதும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும்."

"இது பயங்கரமானது தான்' ஆபாசமானது தான். ஆனால் பொய்பல்ல. மெய்யாகவே நான் கண்ட காட்சி. இந்தியாவுக்குச் செல்கின்ற எவருக்கும் இந்த ஆபாசக் காட்சியைக் காணமுடியும்."

"இந்தியா ஒரு பயங்கரமான தேசம். இந்தியர்களுக்கு சிரிப்புண்டாக்குவது மிகவும் சிரமமான வேலை. வீதிகளில் ஒருவரும் சிரிப்பதோ உற்சாகம் காட்டுவதோ இல்லை."

மகாராஜாக்கள்.

"சுதேச மன்னர்கள் ஒரு சோம்பேறிக் கூட்டம். அவர்கள் முகத்தில் உற்சாகத்தையே காண முடியாது. திருவிழாக் காலங்களிலோ, இழவு காலங்களிலோ தான் அரண்மனைகளில் சங்கீதத்தை கேட்கமுடியும். அந்த சங்கீதமோ மிருகங்கள் கத்துகிற மாதிரி இருக்கும்."

"அழகான காட்சிகளிலும்கூட ஆபாசம் கலந்தே இருக்கிறது. தாஜ்மஹாலில்இந்த ஆபாசத்தைப் பார்க்கலாம். பச்சைப் பசேல் என்றிருக்கும் வயல்களிலும், மன்னர்களின் ஆபரணங்களிலும், தோட்டம் துரவுகளிலும் மாதர்களின் சாரிகளிலும்கூட இந்த ஆபாசத்தைக்காணலலாம்."

தாஜ்மஹால்.

"தாஜ்மஹால் ஒரு சவக் கல்லறை. அந்தக் கட்டிடப் பணி இன்னும் பூர்த்தியடையவில்லை. அங்கு காணப்படும் பட்சிகள் பாடமாட்டா. ஆந்தைகள் எப்படிப் பாடும்? தோட்டங்களில் உள்ள புஷ்பங்களுக்கு மணமில்லை. பெண்கள் முகமூடிகளால் முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள். அவர்களில் பெரும்பாலார் மணம் செய்து குழந்தை குட்டிகள் உடையவர்களாயிருப்பார்கள்: குழந்தைகள் அங்கப் பழுதுடையவைளாகவும், எலிக் குஞ்சுகள் மாதிரியும் இருக்கும்.

"சுதேச மன்னர்களின் ஆபரணங்களையும், நடையுடைபாவனைகளையும் பற்றி என்ன சொல்வது? நாம் அவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதினால் அவர்களிடம் ராஜபக்தி காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அவர்களை ஆட்சேபிக்க முடியாது. ஆனால் உண்மை என்ன?"

"அவர்களில் பெரும்பாலார் கண்ணியமான மனிதர்கள். கொஞ்சப்பேர் நல்ல அரசர்கள். ஆனால் அமிதமான பணம் படைத்தவர்கள் கெட்டுப்போவது போலவே அவர்களில் பெரும்பாலார் கெட்டுப்போயிருக்கிறார்கள். அநேகர் அயோக்கியர்களாயும்இருக்கிறார்கள்.

அரண்மனைகள்.

"பிரமாண்டமான அரண்மனைகளில் அவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்குச் சொந்தமாகப் படைகளும் உண்டு. ஆயிரக்கணக்கான பணியாட்களும் உண்டு. அதிதி சத்காரம் செய்வதில் அவர்கள் பெயர் பெற்றவர்கள். நான் அவர்களது அரண்மனைகளில் தங்கியிருக்கிறேன். சுதேச மன்னர்களைப் போல் ஆடம்பர வாழ்க்கை நடத்துபவர்களை எங்குமே காணமுடியாது."

போலி உபசாரம்.

ஆனால் பல மன்னர்கள் செய்யும் உபசாரம்போலி உபசாரமேயாகும். ஏனெனில் அவர்களில் பெரும்பாலார் கடன்காரர்களாயிருக்கிறார்கள். பிறந்த நாள் கொண்டாட்டங்களில் அவர்கள் கடன் வாங்கிச் செலவுசெய்தாலும் வாங்கின சாமான்களுக்கு அவர்கள் விலை கொடுக்க மாட்டார்கள்.

"வேலைபாட்கள் எல்லாம் மிகப்பணிவுடையவர்கள் போல பாவனைகாட்டிக் கொள்ளுகிறார்கள் ஏன்? ராஜ பக்தியினால் அல்ல; உயிருக்கு ஆபத்துண்டாகும், தமது பெண்களுக்கு ஆபத்துண்டாகும் என்றபயத்தினாலேயாம்"

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

பெண்கள் பகுதி.

ருஷியப்பெண்கள்.

இன்று ருஷியாவில் வேலைசெய்யும் தொழிலாளர்களில் மூன்றிலோர்பாகம் பெண்களேயாவார்கள். ஐந்து வருடத் திட்டத்தின் பயனாக கால்பங்கு பெண்கள் தொழிற்சாலைகளில் அதிகரித்திருக்கின்றார்கள். சென்ற 3 வருடங்களில் 35 லட்சம் பெண்களுக்கு அதிகப்படியாக வேலையளிக்கப்பட்டிருக்கின்றனர். இது அவர்கள் திட்டத்தில் கண்டுள்ள அபாரவெற்றியாகும். 1928-ம் வருடம் ருஷியாவில் பெண் தொழிலாளர்கள் மருந்துக்குக்கூட காணப்படவில்லை. இப்பொழுது 22 சதமானம் கைத்தொழில் இஞ்சினீயர்களாகவும் 20 சதமானம டாக்டர் களாகவும் இதர பெரும் பகுதி மக்கள் கைத்தொழில்ஆராய்ச்சியாளர்களாகவுமிருந்து வேலை செய்கின்றனர். பெண்கள் ரயில் வண்டி ஓட்டவும், டிராம் வண்டி ஓட்டவும் செய்கின்றார்கள். இரும்புத் தொழிற்சாலை, நெசவுத் தொழில், நூல் நூற்கும் தொழில், சுரங்கங்கள் முதலிய வற்றிலும் எண்ணிறந்தோர் வேலை புரிந்து வருகின்றனர்.

இன்று ருஷியாவில் விவசாயக் கூட்டுப்பண்ணைகளின் தலைவர்களாக 6000 பெண்களும், அதனை நிர்வாகம் செய்யும் அங்கத்தினர்களாக 60 ஆயிரம் பேரும் ஒரு லட்சம் பெண்கள் அதனை ஒழுங்குபடுத்து கின்றவர்களாகவும் 7 ஆயிரம்பெண்கள் "டிரேக்டர்" ஓட்டிகளாகவுமிருந்து வேலை செய்கின்றார்கள்.

சர்வகலாசாலைகளில் 31 சதமானத்திற்கு மேல் பெண் மக்கள் பயின்று வருகிறார்கள். தொழிற் பள்ளிக்கூடங்களில் 100 க்கு 40 பேர்கள் படிக்கின்றார்கள். 1928-ல்அந்நாடு முழுவதும் 4 லட்சத்து 49 ஆயிரம் பெண்கள் தான் பள்ளிக்கூடங்களில் கல்விபயின்றுவந்தனர். இப்பொழுது 15 லட்சத்து 60 ஆயிரம் பெண்கள் கலாசாலைகளிலிருந்து வருகின்றனர்.

டாக்டர்கள் பரீட்சைக்கு 100 க்கு 71 வீதம் பெண்கள் பயில்கின்றார்கள். போதனா முறைப் பள்ளிக்கூடங்களில் 100 க்கு 40 பேர்களும், விவசாயப்பள்ளிகளில் 100 க்கு 20 வீதமும் பெண்கள் நிறைந்து காண்கின்றார்கள். அந்நாட்டில் பெண்களின் முன்னேற்றம் இவ்விதமாக ஒவ்வொரு துறையிலும் அதிகரித்துக் கொண்டே வருவதானது அந்நாட்டின் சீர்திருத்தங்களையும், அது கொண்டுள்ள திட்டங்களின் வெற்றியையும் நன்கு வெளிப்படுத்துந்தரமாகும்.

சீனப் பெண் போலீஸ்.

சீனாவில் விவாகம் செய்துகொள்ளாத அநேக பெண்கள் போலீஸ் சேவகிகளாகச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுக்குப் பிரத்யேகமான ஒருவித போலீஸ் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் சமாதானத்தைக் காப்பாற்றும் வேலையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனக் கணித வேலைகள் போன்ற பிறகாரியங்களுக்கு இவர்களுடைய சேவகம் பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது. இவர்களில் ஒவ்வொருவருக்கும் சராசரியாக35 ரூபாய் சம்பளம் அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் தமது வேலை முடிவானதும் வெளியே போவதில்லை ஓய்வு நேரங்களில் படிப்பிலும், எழுதுவதிலும் தமது காலத்தைச் செலவுசெய்கின்றனர்.

ருஷியாவில் பெண் சிப்பாய்கள்.

ஆண் சிப்பாய்களைப்போல் பழக்கப்படுத்துதல்.

சோவியத் ருஷியாவில் பெண்கள் பட்டாளங்களில் சேர்க்கப்பட்டு பெண் யுத்தவீரர்களாக சிகப்புச் சேனையில் சேர்த்து அதிக வன்மையோடும், மன உறுதியோடும் போர் புரிவதற்குத் தக்க மாதிரியாய் பொதுகவாத்து பழக்கப்படுகிறார்கள். பெண் சிப்பாய்கள் ஆண்கள் எந்த முறையில் கவாத்து செய்கின்றார்களோ அதே முறையில் ஆண்களுடன் சரிசமமாய்செய்கிறார்கள். ஆனால் அவர்கள் படைச்சேவகத்திற்குப் பதிவு பெற்றவர்கள் அல்லவானாலும் அவர்களுடைய பட்டாளங்கள் பூராவும் சம்பளமில்லாமல் உத்தியோகம் செய்பவர்களாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கிறது. காலாள்படை, பீரங்கிப் படை, சுரங்கம் அறுக்கும் தொழில் இம்மூன்றிலும் பெண்களே நிறைந்திருக்கிறார்கள் என்பது வெட்டவெளிச்சமானதாக இருந்தபோதிலும், அதில் சேர்ந்துள்ள பெண்களின் எண்ணிக்கையை மட்டும் பட்டாள அதிகாரிகள் மிகவும் இரகசியமாக வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் பெண்கள் குதிரை வீரர் படை ஒன்றையும் நிர்மாணம் செய்திருக்கிறார்கள். அப்பெண் குதிரை வீரர்கள் கொசாக்ஸ் (Cossacks) என்று சொல்லும் பேர் போன குதிரை வீரர்களைப்போல் சவாரி செய்கிறார்கள். இவர்களுடைய வேலை சண்டை செய்வதே முக்கியமானதல்ல சமூகத்திற்குத் தொண்டு செய்வதே இவர்களின் முக்கிய வேலையாகக் கொண்டிருக்கிறார்கள். பட்டாள ஆகாயப் படைப்பகுதியில் அநேக கீர்த்தி வாய்ந்த பெண் கப்பலோட்டிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்களில் உதாரணமாக ஒரு முஸ்லீம் பெண் பின்னல் சடையுடன் ஆதியில் தனது காக்கேசஸ் தேசத்திலுள்ள வீட்டை விட்டு புருடா முதலியவை அணிந்து அந்தப்புரத்தில் வசிப்பதற்கு அஞ்சி ஓடிவந்தவராவர். அவர் இப்போது ஒரு பெரிய ஆகாயக்கப்பலோட்டியாக இருக்கிறார். "பீபிள்"

பெண்கள் குறைவு

வட இந்தியாவின் நிலைமை பால்ய விவாகமே காரணம்

ஐக்கிய மாகாணத்தில் 1000 பெண்களுக்கு 480 பேர்கள் வீதமே விவாகமாயிருக்கிறது. 1000 பெண்களுக்கு 218 வீதம் விதவைகள் இருக்கின்றனர். முஸ்லீம்களிடையே விதவைகள் குறைவு, (இதற்குக்காரணம் அவர்களிடையே மறுவிவாக வழக்கம் பரவியிருப்பதே.) பால்ய விவாகங்களால் தான் பிறக்கும் குழைந்தைகள் பலவீனமாயிருப்பதுடன், பல சிறுமிகள் விதவைகளாவதற்கு ஹேதுவாகிறது.

உயர்தர வகுப்புகளிடையே பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதற்குக் காரணம் ஸநாதன ஹிந்துக்கள் அவசியமெனக் கருதும் பால்ய விவாகமே. சென்ற பல வருஷங்களாகப் பெண்களின் சங்கியை குறைந்து வந்தும், இதன் காரணத்தை உணர்ந்துங்கூட வைதீகர்கள் பிடிவாதமாயிருக்கிறார்கள். ஹிந்து நாகரீகமும், சமூகமும், பலம் வாய்ந்ததாயிருக்க வேண்டுமானால், நமது விவாக முறைகள் அடியோடு மாற வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் பொருளாதார, இராஜீய வெள்ளங்களை இச் சமூகம் எதிர்த்து நிற்க முடியாது. கட்டுப்பாடான கிளர்ச்சி இதற்கு அத்தியாவசியம். சமூக சீர்திருத்தத்தின் மூலம் தான் வகுப்புக் கேடுகளை நாம் ஒழிக்க முடியும். (பார்வர்டு)

தோழர் வரதராஜுலுக்கு ஆதரவு.

பொப்பிலிராஜா வேண்டுகோள்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவரான பொப்பிலி ராஜா கீழ்வருமாறு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார்:—இந்திய சட்ட சபைத் தேர்தலில் கோயம்புத்தூர்-சேலம் வட ஆற்காடு ஜில்லாக்கள் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியார் யாதொரு அபேட்சகரையும் நிறுத்தப் போவதில்லை. ஏனெனில் டாக்டர் பி. வரதராஜுலு அத்தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகருக்குப் போட்டியாக நிற்பதே அதற்குக் காரணமாகும். டாக்டர் வரதராஜுலு நாயுடு ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவரல்லவாயினும், அவருடைய பொது வாழ்க்கையில் அவர் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை பொதுவாக ஆதரித்தே வந்திருக்கிறார். நமது அரசியல் திட்டத்தில், அவர் வேறுபாடுள்ள அபிப்பிராய முடையவராயினும், நமது சமுதாய திட்டவிஷயத்திலும், பிராமணரல்லாதாருக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற விஷயத்திலும் அவர் நமக்கு பெரிதும் உதவியாக இருந்துள்ளார். எனவே, டாக்டர். பி. வரதராஜுலுவை ஆதரித்து ஓட்டுக்கொடுக்கும் படி தொகுதியிலுள்ள சகல ஜஸ்டிஸ் கட்சியினரையும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிங்கப்பூர்.

இவ்வூர் விவேகானந்தாசன்மார்க்க சபையின் விசேஷப் பொதுக்கூட்டம் ஒன்று ஷைசபைக்கட்டிடத்தில் 6-9-34 இரவு 9 மணிக்கு சபையின் தலைவர் தோழர் வடிவேலு அவர்கள் தலைமையின் கீழ்க்கூடியது. ஏராளமான ஜனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் வை. சு. ஷண்முகம் அவர்கள் சமயமும், சன்மார்க்கமும் என்பது பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினார்கள். சுவாமி விவேகானந்தர் அவர்கள் சமயத்தைப்பற்றியும், சன்மார்க்கத்தைப்பற்றியும் கொண்டிருந்தஅபிப்பிராயங்களை விளக்கிக்காட்டி அவர்ஓர் நாஸ்திகரேஎன்று தெளிவாய் விளக்கினார்கள். அதன் பின் தோழர் அ. இராகவன் சொற்பொழிவாளரை ஆதரித்து சிறிது நேரம் பேசியபின் தலைவர் முடிவுரை கூற 10-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

(நமது நிருபர்)

சென்னை கடற்கரையில் 5000 பேர் கூட்டம்.

ஈ. வெ. ரா. உபன்யாசம்.

தோழர்கள் ஆர். கே. ஷண்முகம், டி. வரதராஜுலு நாயுடு, ஏ. இராமசாமி முதலியார், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் 28-9-34௳ மாலை சென்னைக் கடற்கரையில் "வரப்போகும் தேர்தல் என்பது பற்றி" ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசியதாவது:—

தோழர்களே! இன்று இங்கு எலக்ஷன் சம்பந்தமாகப் பேசுவதற்கென்றே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதாக எனக்குத் தெரிகின்றது.

கட்சி கிடையாது.

எனக்கு எலக்ஷனில் கக்ஷிப் பிரச்னை கிடையாது. கட்சிகள் என்பது கொள்கைகளைப் பொருத்ததாக இருப்பது இயல்பு. ஆனால் நம் நாட்டில் எந்தக் கட்சியையும் கொள்கையை ஆதாரமாய்க் கொண்டது என்று நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

நமது மாகாணத்தில் வெகுகாலமாகவே கட்சிகள் உத்தியோக ஆசைக்கும், வகுப்பு ஆதிக்கத்துக்குமாகவே இருந்து வருகின்றனவே ஒழிய பொதுஜன நலக் கொள்கைக்காக இருந்து வரவில்லை.

முதலில் உத்தியோக ஆசையை முன்னிட்டு ஏற்பட்ட கட்சியின் பயனாய் பல கொழுத்த சம்பளமுள்ள உத்தியோகங்களும், அதிகாரங்களும் நமது மக்களுக்கு கிடைக்க சௌகரியமானவுடன் இப்போது இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், தீண்டாதவர், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்புநலத்தை பிரதானமாய்க் கொண்ட கக்ஷிகள் தலை விரித்தாடுகின்றன. ஒவ்வொரு வகுப்புக் கக்ஷியும் மற்ற வகுப்பை ஏமாற்றுவதற்கு அனுகூலமான விஷயங்களைத் தான் கக்ஷிக் கொள்கைகளாய்க் கொண்டிருக்கின்றனவே ஒழிய வேறில்லை.

வகுப்பு வாதம் தான் கட்சி.

இன்றைய அகில இந்திய கக்ஷியை எடுத்துக்கொள்ளுங்கள். முஸ்லீம்கள் காங்கிரசை ஒப்புக்கொள்ளாமல் தனியாக தங்கள் வகுப்புக்கு ஒரு கக்ஷி ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்திய தேசிய "காங்கிரஸ் என்பதை வகுப்பு (இந்துக்கள்) கக்ஷிஎன்றும் சொல்லுகிறார்கள். அதுபோலவே கிறிஸ்தவரும் மற்றவர்களும் சொல்லுகிறார்கள்.

ஆனால் இந்துக்களோ, காங்கிரஸ் தான் பொதுக் கக்ஷி என்றும், மற்றவைகள் எல்லாம் வகுப்புக் கக்ஷிகள் என்றும் சொல்லுகிறார்கள்.

இந்தத் தத்துவமேதான் இன்று பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சி ஏற்பட்டிருப்பதும், பார்ப்பனர் ஜஸ்டிஸ்கட்சியை வகுப்பு வாதக் கட்சி என்பதும் பார்ப்பனரல்லாதார் காங்கிரசை வகுப்பு வாதக் கட்சி என்று சொல்லுவதும் ஆகியவைகளுக்கு காரணமாய் இருக்கின்றன. கக்ஷிகளின் போக்கும் இந்த உள்கருத்தை ஆதாரமாகக் கொண்டதாகவே இருந்து வருகின்றன.

இதுவரை இந்தப்போராட்டம் அதாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போராட்டம் நமது மாகாணத்துக்குள்பட்ட விஷயங்களைப் பொருத்தவரையில் இருந்து வந்தது.

பொறுமையால் வந்த வினை.

பல காரணங்களால் தோழர்கள் ஆர். கே. ஷண்முகம், ஏ. ராமசாமி முதலியார் ஆகியவர்கள் எப்படியோ இந்திய சட்டசபைக்குப் போக ஆரம்பித்ததிலிருந்து இப்போது இந்தியா பூராவுக்கும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்பு உணர்ச்சி பரவ வேண்டியதாய் விட்டது. அவர்கள் இந்திய சட்டசபைக்குப்போனதின் பயனாய் அங்கிருந்து வந்த பார்ப்பன ஆதிக்கத்துக்குச் சாவு மணி அடித்து விட்டது. ஆர். கே. எஸ்., எ. ஆர். ஆகிய இவர்களின் மேன்மையும், திறமையும் அங்கு தாண்டவமாடத் தலைப்பட்டு விட்டது. இதிலிருந்து பார்ப்பனர்கள் தோழர்கள் ஷண்முகம், A. ராமசாமி ஆகியவர்கள் விஷயத்தில் அதிக கவலை எடுத்து அவர்களை அங்கு செல்லவொட்டாமல் தடுக்க வேண்டியவர்களாய் விட்டார்கள்.

அதோடு தோழர் ஷண்முகத்திற்குஇந்திய சட்டசபைத் தலைவர் பதவி கிடைத்தவுடன் சில பார்ப்பனர்களின் பொறாமையும், சதியும் ஒன்றுக்குப் பத்து நூறாயிரமாய் வளர்ந்து விட்டது. ஏனெனில் எப்படியாவதும் கூடிய சீக்கிரத்தில் இவர்கள் இருவரும் இன்னும் பெரும்பதவிகளுக்கு வரப்போகின்றார்கள் என்பது பார்ப்பனர்களுக்குத் தெரியும். ஆதலால் பார்ப்பனர் இதில் வெகு முயற்சி என்கின்ற வேஷத்தில் எவ்வளவோ தடைகள் செய்து வருகிறார்கள்.

தலைவராகவில்லை என்றால் போட்டியில்லை.

உதாரணமாக தோழர் ஷண்முகம் அவர்கள் தான் மறுபடியும் தலைவர் பதவிக்கு நிற்கவில்லை என்று சொல்லிவிட்டால் தென் இந்தியாவில் இந்திய சட்டசபை தேர்தல்களில் எதற்கும் காங்கிரசு போட்டி போடாது என்பது உறுதி என்று நீங்கள் நம்பலாம்.

ஒரு சமயம் அவர் கண்டிப்பாய் நிற்பதானாலும் தோழர்கள் ஏ. ராமசாமி முதலியார் அவர்களும், டாக்டர் வரதராஜுலு அவர்களும் தாங்கள் இந்திய சட்டசபைக்குச் சென்ற பிறகு பிரசிடெண்ட் எலக்ஷனில் தோழர் ஷண்முகத்துக்கு ஓட்டுப் போடுவதில்லை என்று வாக்குக்கொடுத்து விட்டால் தோழர்கள் சத்தியமூர்த்தி, அவனாசிலிங்கம் செட்டியார், குமாரசாமி ராஜா, முத்துரங்க முதலியார் ஆகியவர்கள் உடனே வித்ட்ரூ செய்து கொள்ளுவதில் ஆக்ஷேபனை இல்லை.

ஆகவே இன்று நடக்கும் இந்திய சட்டசபை தேர்தல் சொந்த புத்தியுள்ளபார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனர்களுக்குஅடிமையாயில்லாத பார்ப்பனரல்லாதாரும் இந்திய சட்ட சபைக்குப் போகக்கூடாது என்பதைத் தவிர வேறு ஒரு காரணமும் இல்லை என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

தோழர் ஷண்முகம் அவர்கள் இந்திய சட்ட சபையில் தலைவரான பிறகு அவரது பெருமை இந்தியாவில் எங்கும் பேசப்பட்டு வருவதானதுநம்நாட்டு பார்ப்பனர்களுக்குப்பெருத்த ஆத்திரத்தை மூட்டி விட்டது. எப்படியாவது அவரைத் தடுத்துவிடவேண்டும் என்பதே காங்கிரஸ்காரர்களுடைய எலக்ஷன் பிரச்னையாகி விட்டது.

செய்த கெடுதி என்ன?

மறுபடி காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் சொல்லும் காரணங்கள் ஒரு காசுக்கும் பயன்படாது என்றே சொல்வேன்.

அரசியல் விஷயத்தில் தோழர் ஷண்முகம் என்ன கெடுதி செய்தார் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன். அவர் வெகுகாலம் காங்கிரசிலிருந்தவர். அவருடைய திறமையையும், அறிவையும் கண்ட பார்ப்பனர் காங்கிரசில் அவரைத் தலையெடுக்க வொட்டாதபடி சூழ்ச்சி செய்ததால் காங்கிரசை விட்டார். தனியாகவே நின்றார். தோழர் ஏ. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்களைப் போலவே அவரும் பல விஷயங்களுக்கு அரசாங்கப்பிரதிநிதியாய் நியமிக்கப்பட்டார். வெளி தேசத்துக்கும் சென்றார். அவர் திறமையால் ஜனப்பிரதிநிதிகள் கொண்ட சட்டசபைக்குத் தலைவரானார். அங்கு அவர் நடந்து கொண்ட திறமையால் மறுபடியும் அவர் தலைவராகப் போகிறார் என்பது உறுதி. அவர்மீது ஆத்திரப்படும் பார்ப்பனர்கள் அவர் தலைவராய் இருந்தபோது எதாவது தவறுதலாய் நடந்து கொண்டார் என்பதைக் காட்டி ஆக்ஷேபித்தால் அது ஆண்மையாகும்.

தோழர் ஷண்முகம் இந்திய சட்டசபைத் தலைவர் என்கின்ற ஹோதாவில் ஒரு சமயத்தில் சட்டசபைக்குள் வைசிராய்க்கு காவலாக இருந்த சுமார் 100 போலீஸ்காரர்களை வெளியில் போகும்படி சொன்னார். யார் சொல்லியும் கேட்கவில்லை. மற்றொரு சமயம் ராணுவ சம்பந்தமான விஷயத்தில் அரசாங்கத்துக்குநேர்விரோதமாகதீர்ப்புக் கொடுத்தார். இந்த இரண்டையும் இந்தியா முழுவதுமே பாராட்டிற்று. ஆனால் பார்ப்பனப் பத்திரிக்கைகளும் அவர்களது கூலிப் பத்திரிக்கைகளும் மாத்திரம் சிறிதுகூட மனிதத் தன்மை, நியாயம் ஆகியவை யில்லாமல் அவற்றை மறைத்தும், திரித்தும் கூறின.

வரதராஜுலுக்கு ஏன் போட்டி?

தோழர் வரதராஜுலுவுக்கு விரோதமாய் இந்தப் பார்ப்பனர்களும், அவர்கள் கூலிகளும் ஏன் இவ்வளவு விஷமப் பிரசாரம் செய்யவேண்டும்? அவர் என்ன செய்தார் - அவர் கிராமம் கிராமமாக தன் கைப்பணத்தைச் செலவு செய்துகொண்டு பிரசாரம்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு.

ஈரோடு 1934- அக்டோபர் 7-உ

இரண்டு மகாநாடுகள்.

சென்ற மாதம் கடைசி வாரத்தில் தமிழ் நாட்டில் இரண்டு மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச்சங்க மகாநாடு. மற்றொன்று கோவையில் நடந்த தமிழ் நாடு காங்கிரஸ் மகாநாடு. முன்னையதற்கு பொப்பிலி ராஜா தலைவர். பின்னையதற்கு தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் தலைவர். இருவர்களுடைய பேச்சுச் சுருக்கமும் வேறு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஜஸ்டிஸ் மகாநாட்டில் ஒரு பெரிய மாறுதல். அதாவது அதுதன் அஸ்திவாரத்திலிருந்தே ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்திக்கொண்டது. இனி அதைப் பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்றோ, வகுப்புவாதிகள் மகாநாடுஎன்றோ, பார்ப்பனத்துவேஷிகள் மகாநாடு என்றோ ஒருவராலும் சொல்ல முடியாதபடி செய்து கொண்டதுடன் எவ்வித வகுப்பு நிபந்தனையும் இல்லாமல்எல்லா வகுப்புகளுக்கும் சம சுதந்திரமும், சம சந்தர்ப்பமும், சம நீதியும் வழங்குவதை முக்கிய நோக்கமாகக்கொண்டு இருக்கிறது.

இதற்குக் காரணம் "வகுப்புவாதம்" என்று பார்ப்பனர்கள் போட்ட கூச்சலாயிருந்தாலும் இருக்கலாம். அல்லது பிரிட்டன் அதிகார வர்க்கத்துக்கோ, அல்லது அரசாங்க வர்க்கத்துக்கோ ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று இருந்த நிபந்தனையின் காரணம் இன்னது என்று விளங்காமல் இருந்தாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் ஜஸ்டிஸ் கட்சி இப்பொழுது ஒரு அரசியல் கட்சி என்கின்ற "பெருமையை" அடைந்துவிட்டது.

இந்த மாறுதலுக்கு அஸ்திவாரமாயிருந்தவர் தோழர் சர். ஷண்முகம் என்பது நமது அபிப்பிராயம். மற்ற ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஷண்முகம் ஆட்டத்துக்குத் தாளம் போட்டவர்களே யாவர்கள் என்பதும் நமது அபிப்பிராயம்.

சமூக வாழ்விலுள்ள உயர்வு தாழ்வை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட-ஒதுக்கப்பட்ட மக்களுக்கு சமத்துவமும், சம சந்தர்ப்பமும்அளிக்கவும் ஜஸ்டிஸ் கட்சியை ஒரு உப கருவியாக உபயோகித்துக் கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின்மீது தான் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கக்ஷியை அனுசரித்து அதில் சிறிது கலந்து வந்ததே ஒழிய அதுவே சர்வ வியாதிக்கும் சஞ்சீவி என்று கருதியல்ல.

இதன் பயனாய் சில நன்மைகள் ஏற்பட்டன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அக் கக்ஷியானது நாதனற்று சிலருடைய வாழ்வுக்கும், பெருமைக்கும், பணம், பதவி சம்பாதிப்பதற்கும் மாத்திரம் பயன் படத்தக்கதென்று உலகோர் இகழும் படியாகக்கூட 4, 5 வருஷ காலம் கஷ்டப்பட்டு விட்டது என்பதானது நாம் மறைத்ததாலேயே மறைந்து விடுமென்று நம்ப முடியாது.

இப்போது அக் கக்ஷி ஒரு முக்கிய கொள்கையையே தியாகம் செய்து விட்டது என்பதோடு மாத்திரமல்லாமல் ஒரு தகுதியான தலைவரையும் பெற்று விட்டது. ஆதலால் வரப்போகும்அரசியல்சரித்திரத்தில் (சமூகசரித்திரத்தில்அல்ல) ஒரு நல்ல ஸ்தானத்தைப் பெற்று சென்னை மாகாணத்தை இந்திய மாகாண வரிசையில் முதல் ஸ்தானத்தில் இருத்தி வைக்கும் என்பது நமது நம்பிக்கை.

அதன் இன்றைய தலைவர் செல்வ வந்தரே யானாலும் சிறு வயதினரேயானாலும், அக் கக்ஷியில்இருந்துவரும் வேலைத் திட்டத்துக்கு மிகப் பொருத்தமானவரும், மிக மிக அவசியமானவரும் இன்றியமையாதவரும் ஆவார் என்று சொல்லலாம்.

அவர் 1932-ல் ஜஸ்டிஸ்கக்ஷிக்குத் தலைவராவதற்குப்பலாத்கார உதவியும் தேவை இருந்தது என்று நாம் கேள்விப்பட்டோம். ஆனால் இப்போது ஜஸ்டிஸ் கக்ஷித் தலைமை ஸ்தானம் என்கின்ற கிரீடம் வேறு எவர் தலைக்கும் பிடித்தமும் பொருத்தமும் இல்லாத தாகி அதுவாகவே அவரைப்போய் அடைந்து விட்டது.

இதற்குக் காரணம் இந்த இரண்டு வருஷ காலத்திய அவருடைய நிர்வாகமானது அவருடைய சொந்த எதிரிகளும், ஜஸ்டிஸ் கக்ஷியின் பிறவி எதிரிகளும் கூட குறை கூற முடியாதவாறு நடந்திருக்கிறதே.

அவரது இந்த இரண்டு வருஷத்திய சம்பளம் சுமார் லக்ஷ ரூபாயையும் கக்ஷி நன்மைக்கே பயன்படுத்தி உள்ளார். அது மாத்திரமல்லாமல் தன் சொந்தப்பணத்தையும் லக்ஷக்கணக்கில் கட்சிக்காகவென்று செலவு செய்துஇருக்கிறார்.

இதிலிருந்து பணத்தாசையால் இவர் இந்தப் பதவிக்கு வந்ததாக யாரும் சொல்ல முடியாது. அன்றியும் பதவி ஆசையென்றும் சொல்ல முடியாது. ஏனெனில் இவர்களது பாட்டனார் காலத்திலேயே அதாவது மந்திரிப்பதவிக்குக் குண்டு போடும்படியான அவ்வளவு மதிப்பும், பெருமையும் இருந்த காலத்திலேயே வேண்டாம் என்று உதரித்தள்ளி விடப்பட்டிருக்கிறது.

தேசிங்கு ராஜன், நெப்போலியன் ஆகியவர்கள்சரித்திரம், கதைப் பிரசங்கம் ஆகியவைகள் போல் இன்றும் ஆந்திர தேசத்தில் கூத்து, பாட்டு முதலியவைகள் மூலம் பொப்பிலி ராஜ்யத்தைப்பற்றி நடக்கின்றன. ஆதலால் சரித்திரகால முதல், இன்றைய பண உலகம் வரை அவரது மேன்மைக்குணம்காரணமாகவே தலைமைப் பதவி அவரைப் போய் அடைந்திருக்கிறது.

செல்வம், செல்வாக்கு, பதவி, பெருமை ஆகியவைகள் உள்ள ஒருவன் செல்வத்தை, செல்வாக்கை, பெருமையை தியாகம் செய்வது தான் உண்மையானதியாகமே ஒழிய ஒன்றும் இல்லாதவன் தான் எல்லாவற்றையும் பிறக்கும் போதே தியாகம் செய்து விட்டேன் என்று சொல்வதில் எவ்வளவு தியாகம்இருக்கக்கூடும்?

சரீரத்தில் பலமும், தக்க ஆயுதமும் உள்ளவன் சகிப்புத் தான் அஹிம்சா தர்மத்தை அனுசரித்ததாகலாமே ஒழிய பலவீனர், பயங்காளி, ஆயுதமற்றவர்களின் சகிப்பு அஹிம்சா தர்மம் சகிப்பு ஆகாது. அது போல்தான் பொப்பிலி ராஜாவின் தியாகம், தாராளம் முதலியவைகள் தலைமைக்கு ஏற்றதுஎன்கின்றோம். இவ்வளவும் இருப்பதுடன் அவர் தலைமை தாங்கும் கட்சிக்கு ஒரு கொள்கை, அல்லதுஒரு வேலைத்திட்டம் இல்லாவிட்டால் ஓட்டைக்குடத்தில் தண்ணீர் இறைத்தது போல்தான் முடியும். அக் கட்சியில்அவரைச்சுற்றி உள்ளவர்கள் பெரும்பாலும் கட்சிக் கொள்கைக்கு சம்மந்தமில்லாமலும், வயிற்றுப் பிழைப்பையே பிரதானமாய்க் கொண்டவர்களும், வயிற்றுப்பிழைப்புக்கு எதையும் விற்கும் "தியாகி"களாகவுமே இருக்கிறார்கள். பலர் தங்களை ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லிக்கொண்டு தியாகராய மண்டபத்தை சுற்றிக்கொண்டு திரியாவிட்டால் உப்புக்குக்கூட வகையில்லாமல் திண்டாடக் கூடியவர்களாகவுமிருக்கிறார்கள். நாமினேஷன்கள்வேண்டும். எலக்ஷன்களுக்கு பணம் வேண்டும். பிள்ளைகளுக்கு உத்தியோகம் வேண்டும். பட்டங்கள் வேண்டும். பதவிகள் வேண்டும். ஆனால் கட்சிக்காக இந்த 17 வருஷகாலமாக ஜஸ்டிஸ் பத்திரிக்கைக்கு ஒரு சந்தா கூட கொடுத்தறியார்கள். இப்படிப்பட்டவர்கள் சென்னை மாத்திரமல்லாமல் மாகாணம் பூராவும் இருக்கிறார்கள் என்றுசொல்லுவதால் சென்னைவாசிகளுக்கு ஒரு ஆறுதல் ஏற்படலாம்.

இன்றைய தினமும் சொல்லுகிறோம் சுருக்கமாகச் சொன்னால் நாயர் பெருமானுக்குப் பிறகு, தியாகராயருக்குப் பிறகு தோழர் பொப்பிலி ராஜாவே தகுந்ததலைவர் என்றுகூறலாம். அவர் அவருடைய சுற்று வட்டக் கூட்டத்தாரால் ஏமாற்றப்படாமல் அவர்களுக்கு அடிமையாகாமல் கட்சிக்குத் தக்கதொரு வேலைத்திட்டத்தை ஏற்படுத்தி சர்வாதிகாரியாக நடந்து நாட்டுக்கு ஏதாவது பயன் உண்டாகும் படியான காரியம் செய்து புகழ்பெற்றால் பெறட்டும். இல்லா விட்டால் எத்தனையோ கோடா கோடி ஜீவராசிகள் பிறந்து வயிற்றை நிரப்பி வாழ்ந்து நோய்வாய்ப்பட்டு மாண்டு மடிந்து மண்ணாகின்ற கூட்டத்தில் ஒருவராய் இருந்தால் இருக்கட்டும்.

முடிவாகச் சொல்வதென்னவென்றால் தோழர் ஈ.வெ.ராமசாமியால் ஜஸ்டிஸ் மகாநாட்டுக்கு அக்கட்சி வேலைத்திட்டமாகச் சில தீர்மானங்கள் அனுப்பப்பட்டன. அவற்றை மகாநாட்டில் வைப்பதற்கே சில 'ஜஸ்டிஸ்வாதிகள்' ஆக்ஷேபித்தார்களென்றாலும் இத்தீர்மானங்கள் பொப்பிலி ராஜாவின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பப்பட்டதால் மகாநாட்டு மேஜைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் கடைசியாக அத்தீர்மானங்கள் மகாநாட்டு யோசனைக்குக் கொண்டுவரப்படவில்லை பலதோழர்களின் கிளர்ச்சியின் பயனாய் டிசம்பர் மாதத்திற்கூடும் நிர்வாகக்கமிட்டியில் பைசல் செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்பதோடு பொப்பிலி ராஜா அவர்கள் அத்தீர்மானங்கள் சில வார்த்தைத் திருத்தங்களோடு ஒப்புக்கொள்வதில் தனக்கு ஆக்ஷேபனை இல்லை என்றும் சொல்லி இருக்கிற தைரியத்தால் டிசம்பர் கூட்டத்திற்கு இத்தீர்மானங்கள் கொண்டுவருவதைத்தோழர் ராமசாமியும் ஒப்புக்கொண்டார். அப்பொழுது என்ன செய்வார்கள் என்பதுபற்றிப் பலருக்கு இப்போதே ஜோசியம் தெரிகிறது என்றாலும் டிசம்பர் வரை பொறுத்து இருப்பதால் ஒன்றும் முழுகிப் போய் விடாது என்றே கருதுகிறோம்.

கோவை மகாநாடு.

கோவை மகாநாட்டிற்கு தோழர் சி. ஆர். ஆச்சாரியார் தலைமை வகித்தார்.

ஜஸ்டிஸ் கக்ஷியில் பலரைச் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்ததற்கு நேர் விரோதமாய் கோவை மகாநாட்டில் காங்கிரசில் இருந்து பலரைத் தள்ளி விடவும் சிலரை வந்து சேராமல் இருக்கத் தடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ராட்டினம் சுற்றுவதும், நூல் சந்தா கொடுப்பதும், கதரையே கட்டுவதும் முதலாகிய காரியங்கள் அரசியல், சமூக இயல் ஆகியவற்றில் தீவிர எண்ணமிருக்கின்றவர்களுக்கும், சொந்த புத்திக்கு மதிப்பு கொடுப்பவர்களுக்கும், காங்கிரசில்இடமில்லாமல் செய்து விட்டது. காங்கிரசின் மூலம் சுயநலம் அனுபவிக்கக் கூடியவர்களுக்கே காங்கிரசில் வழி திறக்கப்பட்டு விட்டது. எப்படி இருந்தாலும் தலைவர் ஆச்சாரியார் அவர்கள் நல்ல தியாகம் செய்தவர். காங்கிரசினால் பிழைக்க வேண்டிய அவசியமில்லாதவர். மற்ற காங்கிரசுக்காரர்களைப்போல் அவரும் இன்றுதனது வக்கீல் வேலைக்குச் செல்வாரானால் மீ 4000, 5000 ரூபாய் மாத்திரமல்லாமல் தோழர்கள் அல்லாடி, எத்திராஜ் முதலியவர்களைப்போல் மீ 10 ஆயிரம் 20 ஆயிரம் சம்பாதிக்கக் கூடிய நிலைமை கூட ஏற்படலாம். ஆதலால் அவருடைய தியாகத்தில் யாருக்கும் விவகாரம் இல்லை என்றே கருதுகின்றோம்.

ஆனால் பார்ப்பனர்கள் மண்வெட்டி எடுப்பதை அவர் விரும்புவதில்லை. இந்த ஒரு எண்ணம் அவரது தியாகத்தைப்பயனற்றதாக்கி விட்டது. அவரது பார்ப்பன அபிமானத்தைக் கூட நாம் ஆக்ஷேபிப்பதில்லை. அதற்காக பழமையை ஆதரிப்பதை நாம் ஒப்புக்கொள்ளமுடியவில்லை. அவருக்கு அபார மூளைச்சக்தி உண்டு. அதற்கு யாவரையும் மயக்கச் செய்துவிடும் வல்லமையும் உண்டு. ஆனால் அவை பழமையில் இறங்கி விட்டதுதான் நமக்கு பயனற்றதாகக் காணப்படுகின்றது. கேவலம் ஒரு இந்திய சட்டசபைத்தேர்தலில் அவர் இறங்கியதின் பயனாய் அவர் சுருக்கி விடப்பட்டு விட்டார். அவர் வெற்றி பெற்றாலும் கூட மேலால் அடையப் போகும் பலன் என்ன என்பது வெட்ட வெளிச்சமாய் தெரிந்ததேயாகும்.

இது நிற்க "சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசுக்கு வர ஆசைப்படுகிறார்கள் ஆனதால் அவர்களைவரவேற்கவேண்டும்" என்று சொல்லி இருக்கிறார். ஆசைப்படுவதாகவே வைத்துக் கொண்டுஇதற்காக நன்றிசெலுத்துகின்றோம். ஆனால்பேச்சளவில் வரவேற்பதாய்ச் சொல்லிவிட்டு காரிய அளவில் கதவைச் சாத்திவிட்டார். அதாவது ராட்டினம் சுற்றி நூல் நூற்று கதர்கட்டிக்கொண்டு வரட்டும் என்கிறார். மதக்காரர்கள்கூட இப்படித்தான் சொல்லுகின்றார்கள். எப்படி இருந்தாலும் ஜஸ்டிஸ் கக்ஷியில் பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ளலாம் என்று ஏற்பட்ட பிறகு காங்கிரசில் சேருவதை எந்தப் பார்ப்பனரல்லாதாருடைய கொள்கையும் ஆட்சேபிக்காது என்றே கருதுகிறோம்.

ஒரு மனிதன் ஜஸ்டிஸ் கட்சியிலும், காங்கிரசிலும் அங்கத்தினராயிருப்பதை எந்தக் கொள்கையும் இப்போது தடுத்து விடவில்லை.

இப்போது வகுப்புத் தீர்ப்பும் ஊமையாய் இருக்கிறது. எலக்ஷன் காலத்தில் மாத்திரம் சிறிது கஷ்டம் ஏற்படலாம் என்றாலும் தோழர் மாளவியாவைப்போல் நடந்து கொள்வதின் மூலம் அக்கஷ்டத்தையும் நீக்கிக் கொள்ளலாம்.

ஆதலால் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தில் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்கள் வரும்போது, பார்ப்பனர்கள் ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரசில் பார்ப்பனரல்லாதார் போய் சேருவது என்பதில் விசேஷ குற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. காந்தியார் காங்கிரசை விட்டு விலகுவது வெறும் மிரட்டலாய் இல்லாமல் உண்மையாய் இருக்குமானால் காங்கிரசில் பார்ப்பன ஆதிக்கம் குறைந்தாலும் குறையலாம்.

சமூகத்துறையிலும், பொருளாதாரத்துறையிலும் தீவிர மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆதலால் பம்பாய் காங்கிரசுக்குப் பிறகு காங்கிரசைப்பற்றிய நமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம்.

பார்ப்பனரைச் சேர்த்தது ஏன்?

சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்வது என்கின்ற தீர்மானம் வந்த காலத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசியதாவது:—

தோழர்களே! பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளலாமா? என்கின்ற பிரச்சினையானது ஜஸ்டிஸ் கட்சியில் 1926ம் வருஷம் முதல் பேசப்பட்டு வருகிறது.

உதாரணமாக மதுரை மகாநாட்டில் பனகால் அரசர் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டு அதற்கு ஒரு கமிட்டியை நியமித்துப் பார்ப்பனர்கள் விண்ணப்பங்களைக் கமிட்டி பரிசோதிக்கலாமா என்றும், பூணூல் இல்லாதவர்களை சேர்த்துக்கொள்வது என்கின்ற நிபந்தனை வைக்கலாமா என்றும் மற்றும் பலவித நிபந்தனைகளின் மீதாவது சேர்க்கலாமென்றும் சொன்னார். பிறகு கோயம்புத்தூர் மகாநாட்டிலும், கடைசியாக நெல்லூர் மகாநாட்டிலும் பேசப்பட்டது. என்னைப் பொறுத்தவரை நான் ஆக்ஷேபித்தே வந்திருக்கிறேன். பொதுஜனங்களுக்கும் பிரியமில்லை என்பது எனது அபிப்பிராயம்.

ஆனால் தலைவர்களுக்கு ஏதோ அவசியமிருப்பதாகத் தெரிகின்றது. அதை உத்தேசித்தே சென்ற மாதம் கூடின ஒரு சாதாரண தனிப்பட்ட கூட்டத்தில் நான் ஆக்ஷேபிக்கப்போவதில்லை என்று கூறி இருக்கிறேன். ஏனெனில்தலைவர்கள் என்பவர்கள் அதன் பயனை அடைந்து பார்க்கட்டும் என்று கருதித்தான்.

இதுபோலவே முன்னமும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதாவது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் காங்கிரசில் சேரவேண்டும் என்கின்ற ஒரு பிரச்சினை கோயம்புத்தூர் மகாநாட்டில் 1927ல் எழுந்தது. நான்ஆக்ஷேபித்தேன். தோழர்கள் பனகால் அரசர், சர். பாத்ரோ முதலியவர்கள் மிகவும் கேட்டுக்கொண்டார்கள். பொது ஆக்ஷேபனைகூட பலமாய் இருந்தது. கடைசியாக நான் இவர்கள் அதன் பயனை அடைந்து பார்க்கட்டும் பின்பு விஷயம் தெரிந்துகொள்ளட்டும் என்கின்ற எண்ணத்தின் மீது தான் தடுப்பதில்லை என்று சொல்லிவிட்டேன். தீர்மானம் எவ்வித எதிர்ப்புமின்றிப்பாசாகிற்று.என்றாலும் ஒரு அம்மன் காசு அளவுபயன் கூட ஏற்படவில்லை. இதன் பயனாய் முன்னையைவிட அதிகமாய் காங்கிரசை ஜஸ்டிஸ் கக்ஷியார் எதிர்க்க நேர்ந்தது. அதுபோலவே இப்

போதும் பொதுஜனங்களுக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஏதோ ஒரு உள் கருத்துக்கொண்டு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதன் பயனை கண்டிப்பாய் அனுபவிக்கப் போகிறார்கள். அந்த தைரியத்தின் மீதே இப்போது நான் தடுக்கப் போவதில்லை என்று சொல்லுகிறேன். இப்படிச் சொன்னதால் சில தோழர்கள் நான் சம்மதம் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். அவர்களை எனக்கு நன்ராய்த் தெரியும். பார்ப்பனர்களிடம் நான் துவேஷமாய் இருந்தாலும் சினேகமாய் இருந்தாலும் அந்தப் பலன்களை எல்லாம் இவர்கள் தான் அடைவார்களே ஒழிய எனக்கு ஒரு லாபமும் இல்லை. வேண்டுமானால் பார்ப்பனர்களால் ஏற்படும் விஷமமும், தொல்லையும் தான் எனக்குச் சொந்தமாகும்.

நான் சென்ற வாரப் பத்திரிகையில் ''பார்ப்பனிய ஒழிப்புக் கொண்டாட்ட நாள்'' என்பதாக வருஷத்தில் ஒரு நாள் கொண்டாட வேண்டும் என்று எழுதி இருக்கின்றேன்.

இவை நிற்க பொதுவாக ஒரு விஷயத்தை உங்கள் ஞாபகத்துக்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாதென்று ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு விதியும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கின்ற ஒரு விதியும் நமக்குள் இருந்து வருகின்றது. என்றாலும் இது எப்போதும் இருக்கவேண்டியதா? அல்லது எவ்வளவு காலத்துக்கு இருக்கவேண்டியது? என்று யோசித்துப் பாருங்கள். எல்லா இந்திய மக்கள் மாத்திரம் அல்லாமல் உலக மக்கள் எல்லோருமே சகோதரர்களாக தோழமையுடன் வாழ வேண்டுமென்றும் வகுப்பு வித்தியாசங்கள் என்பது எங்கும், எந்த ரூபத்திலும் காணக்கூடாது என்றும் கூப்பாடு போடுகின்ற நாம் எப்போதும் பார்ப்பனர்களை சேர்க்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். சர்வ ஜன சகோதரத்துவத்துக்கும், வகுப்புப் பிரிவு மறைவுக்கும் தான் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாது என்றும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் சொல்லுகின்றோம். இது சாதாரண அறிவுடையவர்களுக்கு விளங்காது. சிறிது கூர்மையான பகுத்தறிவைப் பயன் படுத்திப் பார்ப்பவர்களுக்கு விளங்கி விடும்.

எப்படியெனில் ஒரு வியாதியை சௌக்கியப்படுத்த அந்த வியாதியின் சத்தை இன்ஜக்ஷன் செய்வது போல் உதாரணமாக பீனிசமுக்கு வியாதிக்காரனுக்கு அந்த பீனிச மூக்குச்சீயையும், கெட்ட நீரையும் எடுத்துச் சேர்த்து பக்குவம் செய்து இன்ஜக்ஷன் செய்தால் அந்த மூக்குவியாதிசௌக்கியமாய் விடுகின்றது.

அதுபோல் பார்ப்பனர்களை விலக்கி வைப்பது என்பதில் பார்ப்பனியம் ஒழிந்து விடுகின்றது. வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் என்பதில் வகுப்புகளின் உயர்வு தாழ்வு வித்தியாசம் ஒழிந்து சம நிலைக்கு வர நேருகின்றது. இவற்றின் பலனாய் ஒற்றுமையும், சமத்துவமும் வந்து பிரிவும், பேதமும் தானாய் மறைய நேரிடுகின்றது.

இந்த நிலை ஏற்படும் வரையில் தான் நாம் பார்ப்பனர்களைச்சேர்க்கக்கூடாது என்றும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்என்றும்சொல்லுகின்றோமே ஒழிய உலகம் உள்ள வரையில், மனிதசமூகம் உள்ள வரையில் கூடாது என்றும் வேண்டும் என்றும் நாம் கருதி ஏற்படுத்தவில்லை.

இப்போது உள்ள கேள்வியெல்லாம் பார்ப்பனர்களைச்சேர்த்துக்கொள்ளவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எடுத்து விடவும் தகுதிஆனதும், அவசியமானதுமானகாலம்வந்து விட்டதா என்பதேயாகும். என்னுடைய அபிப்பிராயத்தில் இல்லை என்றே கருதுகிறேன். சிலர் வந்து விட்டது என்கிறார்கள். சிலருக்கு இரண்டும் புரியாமல் சொல்லிக்கொடுத்ததைச்சொல்லும் கிளிப்பிள்ளைகள் மாதிரி ஒரே மாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் இன்றைய இந்த அபிப்பிராய பேதங்களுக்குக் காரணமே ஒழிய வேறில்லை.

''பார்ப்பனர்களைச்சேர்த்துக் கொள்ள காலம் வந்து விட்டது'' என்று இன்று சொல்லுகின்றவர்கள் தலைவர்கள் என்கின்றவர்களேயாவார்கள். தோழர்கள் சர் ஷண்முகம், பொப்பிலிராஜா, சர் உஸ்மான், ராஜன் போன்றவர்களே ஆசைப்படுகின்றார்கள் என்றால் அதன் பலாபலனை அடைந்து பார்க்க அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் வரையில் இந்தப்பிரச்சினை விஷயத்தில் ஒரு சாந்தியும் ஏற்படாது ஆதலால் நான் குறுக்கே நிற்பதில்லை என்று சொல்லிவிட்டேன். எனதுதோழர்கள் பலரும் இதை ஒப்புக்கொண்டது எனக்கு சந்தோஷமே.

இப்போது எனக்கும் மற்றும் பல எனது கூட்டு வேலைத்தோழர்களுக்கும் இருக்கும் முக்கியபிரச்சினை. இந்தப்பார்ப்பனர்களைப்பொருத்ததல்ல.

பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சி செய்யப்போகும் வேலைஎன்ன? அதற்கு வேலைத் திட்டம் என்ன? என்பது தான் முக்கிய பிரச்சினை. இந்தப்பிரச்சினையால் தான் நாங்கள் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதா அல்லது விலகுவதா என்கின்ற தத்துவம் இருந்து வருகின்றது.

அதைத்தான் நாங்கள் முக்கியமாய்க் கருதுகிறோம். அந்த விஷயத்துக்கு ஒரு வேலைத்திட்டம் அனுப்பியிருக்கிறேன் அது யோசனைக்கு வரும் அதைப் பொருத்தே எங்கள் முடிவும் இருக்கும். பார்ப்பனர்களைச் சேர்க்கும் விஷயம் முடிவடைந்தால் ஏதோ ஒரு சில கூட்டத்துக்குத்தான் பயன் உண்டாகலாம்.

நமது வேலைத்திட்ட விஷயம் முடிவடைவதில்தான் இந்த தேசப்பொதுமக்களின் ''தலையெழுத்து'' நிர்ணயிக்கப்படப்போகின்றது.

ஆதலால் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்க்கும் விஷயத்தில் எனது அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டேன். பிறகு நீங்கள் எல்லோரும் யோசித்துத் தக்கது செய்யுங்கள் என்று பேசினார்.

இத் தீர்மானத்தின் மீது தோழர்கள் சர் பாத்ரோ, செட்டிநாட்டு ராஜா, சர். அண்ணாமலைச் செட்டியார், ஜே. என். இராமநாதன், கே. பாலசுப்பிரமணியம், திவான் பகதூர் கோபால்சாமி முதலியார், அப்துல் கரீம், வெங்கிட்டகிரி குமார ராஜா, கே. வி. அழகர்சாமி, ஆறுமுகம் பிள்ளை, திவான்பகதூர் மகாபலஹேகடே, சர். மகமது உஸ்மான், மார்த்தாண்டம், அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள் முதலியவர்கள் பேசினார்கள். தீர்மானம் பிறகு ஆக்ஷேபனை இல்லாமல் நிறைவேறிற்று.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தவர். அவர் காங்கிரசில் மாகாண தலைவராகவும், எல்லா இந்திய காரியக் கமிட்டி அங்கத்தினராகவும் இருந்தவர். இந்தப் பார்ப்பனர்கள் தான் தோழர் வரதராஜுலுவை [illegible] தோழர் ராஜகோபாலாச்சாரியாரை [illegible] வெளியிட்டார்கள். அதற்குப்பிறகு தேசத்துக்கு விரோதமாவது, சர்க்காருக்கு அனுகூலமாவது என்ன காரியம் செய்து விட்டார் என்று யாராவது சொல்லட்டும். ''4 அணா மெம்பராக காங்கிரசில் சேரவில்லை. ஆதலால் அவர் தேசத்துரோகி'' என்று சொல்லுவதானால் இதை மற்றவர்கள் சகிக்க முடியுமா?

தோழர் ராமசாமி முதலியார் அவர்களுக்கு விரோதமாய் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் நிறுத்தப்பட்டிருக்கிறார். (தொடரும்)

தோழர் ஈ. வெ. ராமசாமி சுற்றுப்பிரயாணம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சென்ற மாதம் 29, 30ந் தேதிகளில் சென்னையில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்குச் சென்று விட்டு 2-10-34ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார்.

மீண்டும் 6-10-34 ந்தேதி இரவு ஈரோட்டை விட்டுப் புறப்பட்டு 7-10-34ந் தேதி புதுக்கோட்டை, காரைக்குடி, திருச்சி முதலிய இடங்களுக்குச் சென்று விட்டு 9-10-34 ந்தேதி ஈரோடு வந்து சேர்வார். வந்ததும் கோவை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் ஆரம்பிப்பார்.

திருமணம்.

தோழர் எம். ஜெயராமனுக்கும், தோழர் கே. இந்திராணி அம்மாளுக்கும் கோலார் தங்கவயல் இராபர்ட்ஸன் பேட்டை, இலக்ஷிமிபதி ஹாலில் (14—10—34) ஞாயிறன்று மாலை 4 மணிக்கு திருமணம் நடைபெறும்.

அடுத்தவாரம்.

அடுத்தவாரம் சென்னை, கோவை மகா நாடுகளின் தீர்மானங்கள் வரும்.

சென்னை தென்னிந்திய நலவுரிமைச்சங்க மகாநாடு.



இதில் மகாநாட்டுத் தலைவர் கனம் பொப்பிலி அரசர், வரவேற்புக்கழகத் தலைவர் குமாரசாமி செட்டியார், சர், மகமது உஸ்மான், திவான்பஹதூர் A. இராமசாமி முதலியார் முதலியவர்களைக்காணலாம்.

வேலூரில் நாயுடு முழக்கம்,

வேலூர் காங்கிரஸ்காரரின் காலித்தனத்தின் மத்தியில் நாயுடு முழக்கிய வீரமுழக்கம்:—

காங்கிரஸ் மகாசபை கூடி தீர்மானித்த பின்பே, காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்த உரிமை உண்டென்றும், சட்டசபையிலேயே சாகவேண்டுமென்று முடிவுகட்டிக் கொண்டிருக்கும் தோழர் சத்திய மூர்த்திக்கு பம்பாயில் காங்கிரஸ் கூடுவது நடுக்கத்தைக் கொடுக்கிறதென்றும், ராஜகோபாலாச்சாரி பணங்கொடுத்து ஆள் பிடித்து விஷமப்பிரசாரம் செய்து வருகிறாரென்றும் தன்னோடு போட்டிபோடும் தோழர் அவுனாசிலிங்கம் அவர்கள் தன்னை எதிர்ப்பதைத்தான் ஆட்சேபிக்கவில்லை யென்றும் ராஜகோபாலாச்சாரியார் செய்துவரும் சூழ்ச்சியையே வெறுப்பதாகக் கூறியதோடு இன்று காங்கிரசிலிருந்து முஸ்லீம்களும், ஹிந்துக்களும் பிரிந்து விட்டனரென்றும். காந்தியாரின்குமாரரும் பிரிந்துவிட்டார் என்றும் காந்தியாரும் விலகிவிட யோசித்து வருகிறார் என்றும் காந்தியாரையோ, காந்தியாரின் பேரப்பிள்ளையையோ கூட்டி வராமல் தோழர் ஆச்சாரியாருக்கு எந்தக் கூட்டத்திலும் தலைநீட்டமுடியாது என்றும் இந்தநிலையில்காங்கிரஸ் இருக்கிறதா இல்லையா என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள் என்றும் கூறினர்.

பிறகு மற்ற அத்தியாயங்களும் பூர்த்தி செய்யப்பட்டன.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

"வாஸ்தவத்தில் சிவிலியன்கள் நிருவாகத்தைத் தவிர சமஸ்தான நிருவாகங்கள் எல்லாம் ஊழலுடையனவாகவே இருக்கின்றன.

அரசியல் வீரர்கள்

இந்தியாவிலே அசுத்தமும் நோயும் நிரம்பியிருந்தாலும் படித்தவர்கள் பெரிய அரசியல் வாதிகளாயிருக்கிறார்கள். ஏனைய நாட்டு அரசியல் வாதிகளைப் போல் இந்திய அரசியல் வாதிகளும் மிக்க சமர்த்தர்களாகவே இருக்கிறார்கள்.

"வாதம் செய்வதில் இந்திய லாயர்கள், ஸர் ஜான் சைமன், வின்ஸ்டன் சர்ச்சில் முதலியோருக்கு ஒப்பானவர்களாயிருக்கிறார்கள். மற்ற நாட்டாரை விட இந்திய அரசியல் வாதிகள் மிக்க மூளை பலமுடையவர்கள் என்பதற்கும் சந்தேகமே இல்லை.

வக்கீல்கள் ஒழுக்கமற்றவர்கள்.

எனினும் அவர்களுக்கு மதிப்புக்கொடுக்க முடியாது. வக்கீல்கள் எல்லாம் மிகவும் ஒழுங்கீனமானவர்கள். நமது சிவிலியன்களே சத்தியவாதிகள்.

மந்திரிகள், ஜட்ஜுகள் லஞ்சம் வாங்குபவர்கள் கைக்கூலி வாங்காத இந்திய மந்திரிகளையோ, நீதிபதிகளையோ இந்தியாவில் காணவே முடியாது".

மலையாளம் சில்க்.

2¼-வீதி. 5-கஜம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-கஜம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-கஜம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்க மகாநாடு.

வரவேற்புக்கழகத் தலைவர் தோழர்

பி. டி. குமாரசாமி செட்டியார்

அவர்களின்வரவேற்புப் பிரசங்கம்.

29-9-34- பகல் 12 மணிக்கு விக்டோரியா மண்டபத்தில் தென்னிந்திய நலவுரிமைச் சங்க மகாநாடு கூடியது.

வரவேற்பு கமிட்டித் தலைவரான திவான்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் தமது பிரசங்கத்தில் கூறியதாவது:—

தோழர்களே "என்னை வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் தெரிந்தெடுத்ததுபற்றி நான் அக்கமிட்டிஅங்கத்தினர்களுக்கு வந்தனம் கூறுகின்றேன். இம்மகாநாட்டுக்கு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் அன்பான வரவேற்பு கூறுகின்றேன். 1917ம் வருஷத்தில் முதல் மகாநாடு நடந்ததிலிருந்து, நமது கட்சி அபிவிருத்திக்குச் சாதகமான பல விஷயங்கள் நிகழ்ந்துள்ளன. சர்க்கார் உத்தியோகங்கள் சம்பந்தமாக ஒரு பிரிவினர் ஆதிக்கம் கொள்ளுவதற்கு நாம் சாவுமணி அடித்ததோடு எல்லா வகுப்பாருக்கும் சம நீதி வழங்க வேண்டுமென்ற கொள்கையை நாம் நிலை நாட்டியுள்ளோம். நாம் நியாயத்திற்காகப் போராடி அதனைப் பெற்று விட்டோம். தற்போது அரசியல் வாழ்க்கையிலும், சமுதாய விஷயங்களிலும், மதத் துறையிலும் 17 வருஷங்களுக்கு முன் பிருந்ததை விட அதிக சுதந்தரம் ஏற்பட்டிருக்கிறது. நமது இயக்கம் பாமரர்களை விழிப்படையச் செய்துள்ளது.

ஜஸ்டிஸ் கட்சியின் வேலை

எல்லா வகுப்பாரது முன்னேற்றத்திற்கும், முக்கியமாக தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றத்திற்கும், மாகாண அரசியல் அபிவிருத்திக்கும் ஜஸ்டிஸ் கட்சி செய்துள்ள வேலையை நான் விவரித்துக் கூற வேண்டுவது அவசியமல்லவென நான் கருதுகின்றேன். மாகாண பொறுப்பாட்சி அளிக்கப்போவதற்கு முக்கிய காரணம் ஜஸ்டிஸ் கட்சி மாண்ட்-போர்டு சீர்திருத்தங்களைச் சித்திகரமாக அமுலுக்குக்கொண்டுவந்ததேயாகும். நமது கட்சி மந்திரிகள் இந்துமதஸ்தாபனங்களில் சீர்திருத்தம், கைத்தொழில்களுக்கு சர்க்கார் உதவி அளிப்பது, சர்வகலாசாலைகள் அபிவிருத்தி, நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் இவர்களுக்குள்ள சம்பந்தத்தைச் செம்மைப்படுத்துவது, ஸ்தலஸ்தாபனங்களின் அபிவிருத்திக்குத்தடைகளை அகற்றுவது இவை சம்மந்தமாக பல சட்டங்கள் நிறைவேற்றியுள்ளனர். அவர்கள் செய்துள்ள வேலைக்கு இந்தியாவில் மற்றெங்கும் உவமை காட்ட முடியாது. அது பற்றி நாம் பெருமை யடைகின்றோம். அப்படியிருந்தும், நமது கட்சியினரை வகுப்பு வாதிகளென்றும், உத்தியோக வேட்டைக்காரர்களென்றும் தூற்றுகின்றனர். பிராமணரல்லாதார் எவரையும் பெரிய பதவியில் நியமித்தால் அவரை சில பத்திரிகைகள் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றன.

பொப்பிலி ராஜாவை தலைவராகக் கொண்டிருப்பது நமது கட்சியின் பாக்கியமேயாகும், அவர் தலைவர் பதவி ஏற்று சிறிது காலமே ஆனபோதிலும், காரிய நிர்வாகத்தில் திறமையும், தைரியமும், ராஜ தந்திரமும் காட்டியுள்ளார். அவரது தலைமையில் நமது கட்சி மென்மேலும் பலப்படுமென்பதற்கு ஐயமில்லை.

பிராமணர்களுக்கு அநுமதி

இம்மகாநாட்டில் முடிவு செய்யவேண்டியமுக்கியமான பிரச்னை பிராமணர்களை நமது கட்சியில் அநுமதிப்பதாகும். கடந்த 5வருஷங்களாகஇவ்விஷயத்தைப்பற்றி மிக்க அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது, பிராமணர்களை அநுமதிக்க வேண்டுமென்றதீர்மானம் நெல்லூர் மகாநாட்டில் ஒரே ஓட்டால் தோல்வியடைந்ததென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம், இம் மாறுதலின் தாரதம்மியங்களைப்பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை, ஆனால் பிராமணர்களை அனுமதிப்பது கட்சியின் நன்மைக்கு உகந்ததாக விருக்குமாவென்ற தோரணையிலேயே நாம் இவ் விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்யவேண்டும். பிராமணர்களை அநுமதிப்பதால் நமது அரசியல் விரோதிகள் நம் மீது பழி கூறுவதற்குக் காரணமாக விருப்பதொன்று நீங்கும்.

ஆதி இந்து இயக்கம்

சமீப காலம் தொடங்கி மகாத்மா காந்தி ஆதிஇந்துக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுவருகின்றார்கள், அந்த இயக்கத்தின் பயனாக பல ஆலயங்களில் ஆதி இந்துக்களுக்கு ஈஸ்வர தரிசன உரிமை ஏற்பட்டது. ஆனால் மீண்டும் தடைஏற்பட்டது- காங்கிரஸ் வாதிகள் ஆலயப் பிரவேச மசோதா வொன்றை இந்திய சட்ட சபையில் நிறைவேற்ற முயன்றனர், ஆனால் அம்மசோதா அதோகதி யடைந்தது. காங்கிரஸ் மகாசபை ஆதி இந்துக்கள் க்ஷேமத்தில் சிரத்தை கொள்ளும் முன்னதாகவே ஜஸ்டிஸ் கட்சியினர் தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றத்தில் சிரத்தை கொண்டிருந்தனர்; இப்பொழுதும் அப்படியே நடந்து வருகின்றனர். ஆலயப்பிரவேசத்தைப் பொறுத்தவரையில், அச்சீர்திருத்தம்காலாகாலத்தில் அமுலுக்கு வரும் அவசரப்பட்டு சட்டம் நிறைவேற்றுவதால் பிரயோஜன மில்லை.

இந்திய தலைவர்கள் சமூகப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரத் தவறியதன் பேரில், பிரிட்டிஷ் சர்க்கார் சமூகத்தீர்ப்பைவெளியிட்டனர். ஆனால் எல்லாவகுப்பாரும் ஒரு மனப்பட்டு ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வார்களேயானல் சமூகத் தீர்ப்பை மாற்றி விடக்கூடும்.

காங்கிரஸ் நிலைமை.

காங்கிரஸ் மகாசபை சமூகத்தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மாட்டாதென்று கூறுகிறது. காங்கிரஸ் கூற்றுமுற்றிலும் அர்த்த மற்றதாகும் தாழ்ந்த வகுப்பாருக்கு தனித்தேர்தல் தொகுதி வழங்கியதின் பேரில் அதை யெதிர்த்து மகாத்மா காந்தி சாகும்வரையில் பட்டினி கிடக்க ஆரம்பித்தார். மகாத்மாவைப் பிழைக்கும்படி செய்ய இந்து சமூகத் தலைவர்கள் எல்லோரும் கூடி பூனா ஒப்பந்தம் கண்டனர். நமது கட்சியினர் சமூகத்தீர்ப்புப்பற்றி அதிக உற்சாகம் கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்து-முஸ்லிம்களுக்குள் திருப்திகரமான ஒப்பந்தம் ஏற்படும் வரையில் சமூகத்தீர்ப்பையும் பூனா ஒப்பந்தத்தையும் நிராகரிப்பதால் பிரயோஜனமே இல்லை.

வெள்ளை அறிக்கை.

வெள்ளை அறிக்கைத் திட்டம் சம்பந்தமாக அரசியல் வாதிகளும், இதர பிரமுகர்களும்பலவித அபிப்பிராயங்கள் கூறியுள்ளனர். காங்கிரஸ் மகாசபை அந்த திட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று கூறுவதோடு அதனையே இந்திய சட்ட சபை தேர்தலில் முக்கிய பிரச்னையாகக் கொண்டுள்ளது. வெள்ளை அறிக்கை சம்பந்தமாக வாக்காளர் எவ்வித முடிவும் கூற முடியாதென்பதே எனது அபிப்பிராயம் வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள பாதுகாப்புகள் போதியதல்ல வென்று வெள்ளை அறிக்கை நிராகரிப்பை ஆதரிக்கும் அபேட்சகருக்கு ஆங்கிலோ—இந்தியர்கள் ஓட்டளிக்கிறார்களென்று கொள்வோம் பிறகு பார்லிமெண்டு செலக்டு கமிட்டி மூலம் ஆங்கிலோ-இந்தியருக்குத் திருப்தி எற்படும்படியான பாதுகாப்புகள் ஏற்படுமானல், ஆங்கிலோ இந்தியர் தேர்தலில் உண்மையல்லாத ஒரு பிரச்னை சம்பந்தமாக ஓட்டளித்தனரென்பது ஏற்படும். பிரிட்டிஷ் இந்திய பிரதிநிதிகள் ஏகமனதாக பார்லிமெண்டு செலக்டு கமிட்டிக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்தனர், அம்மகஜர் சம்பந்தமாக வாக்காளர் தங்கள் முடிவைக் கூற வேண்டுமென்று காங்கிரஸ் ஏற்பாடு செய்திருக்குமானல், அது எவ்வளவோ அநுகூலமானதாக விருக்கும். காங்கிரஸ் உண்மை நிலைமையை அறிந்து அதற்கு ஏற்றபடி நடப்பதில்லை.

நேரு அறிக்கை கதி.

எதிர்கால அரசியல் திட்டத்தை தயாரிக்க ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மகாசபை யொன்று கூட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கூறுகிறது.

பூரண சுயேச்சையை லட்சியமாகக் கொண்டிருக்கும் வரையில், அரசியல் திட்ட மொன்றைத் தயாரிக்க காங்கிரஸ் மகாசபையால் எவ்வித உதவியும் சாத்தியமல்ல.

வரப்போகும் இந்திய சட்ட சபை தேர்தல் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகின்றேன். இந்திய சட்ட சபையில் நமது கட்சி பிரதிநிதிகளான தோழர்கள் ஏ. ராமசாமி முதலியார், சர். ஷண்முகம் செட்டியார், சீதாராமராஜு, டி. எஸ். ராமகிருஷ்ண ரெட்டியார், பி. கோவிந்த ரெட்டியார், கே. பி. தாப்பன் இவர்கள் அரிய சேவை

களைச் செய்துள்ளனர். அவர்கள் மீண்டும் இந்திய சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப் பெறுவார்களென்பதே எனது நம்பிக்கை.

தியாகராயர் ஞாபகார்த்த கட்டிடத்தின் மீது கடன் வாங்கியிருப்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் அக்கடனைத் தீர்க்கவேண்டியது நமது கடமையாகும்.

ஜஸ்டிஸ் கக்ஷியின் வெற்றியும், காங்கிரஸ் கக்ஷியின் தோல்வியும்.

தூத்துக்குடி முனிசிபாலிட்டி 23 வது வார்டு பொதுத்தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சி மாபெரும் தலைவரும், சுயமரியாதை இயக்கத் தோழருமான கே. கே. எ. பெரியசாமி அவர்கள் காங்கிரஸ் வாதிகளின் கடும்பிரசாரத்துக்கிடையே வெற்றி பெற்றார். மொத்தம் கிடைத்த ஓட்டுகள் 251. அதில் 169 தனி காங்கிரஸ்வாதி தோழர் மாசிலாமணி பிள்ளை தோல்வியுற்றார் கிடைத்தஓட்டுகள் 207. 11வது வார்டில் நின்ற தோழர் கலியாண சுந்தரம் செட்டியார் தோல்வியுற்றார். 12 வது வார்டில் நின்ற காங்கிரஸ் வாதியான தோழர் பி. எஸ். சுப்பையர் தோல்வியுற்றார்.

தோழர் கே. கே. எ. பெரியசாமி அவர்கள் தமது வெற்றியை ஒட்டி ஸ்தலபிரபலஸ்தர்களுக்கும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட கவுன்சிலர்களுக்கும் மற்றும்தோழர்களுக்கும் சிற்றுண்டி தாம்பூலம் வழங்கினார். அன்னவரால் நடைபெற்று வரும் சினிமா காட்சிக்கும் நகரவாசிகளனைவரும் இலவசமாக பார்க்க அனுமதிக்கப் பட்டனர்.

இவ்வருடம் எதிர்பாராவண்ணம் தேர்தலுக்கு நின்ற காங்கிரஸ் வாதிகளாகிய தோழர்கள் எ. மாசிலாமணி பிள்ளை, எஸ். கலியாணசுந்தரஞ் செட்டியார், பி. எஸ். சுப்பையர், முதலியோர்கள் தோல்வி யடைந்து விட்டார்கள் தாங்கள் இருந்த காலங்களில் இந்நகரத்திற்கு சீர்திருத்தம் செய்ததினாலேயோ அல்லது சீர்குலைத்ததினாலேயோ, அல்லது உண்மையில் காங்கிரஸின் மீதுள்ள பற்றினாலேயோ, எக்காரணம் பற்றியோ தோல்விப் பட்டது உண்மை.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதற்கிணங்க காங்கிரஸ் பொதுக் கூட்டங்கள் தோறும் மார்பு தட்டிப் பேசும்காங்கிரஸ் வாதிகள் தான் நகர, தேசத்தின் விடுதலைக்குப் போராடுவதாகவும் சூளுரை செய்து சுயநலம் பேணிய காங்கிரஸ் வாதிகள் நகரத்திலும் தேச மெங்கிலும் காங்கிரஸுக்கு செல்வாக்கு இருக்கிறதெனக் கூறியும் வெற்றியடையாமல், பூர்ண தோல்வி அடைந்தது மனம் பொறாதுவாக்காளர்கள் தமது சுதந்திரத்தை விற்று விட்டதாகவும் மற்றும் என்னென்ன காரணங்களோ கூறி அதனாலே தான் காங்கிரஸ் வாதிகளின் வெற்றிக்கு இடமில்லாமல் போயிற்றென்று கூறுவது அவ்வளவுபுத்திசாலித்தனமாகாது. அது பேடித்தனம்.

தேர்தல் காலங்களில் அந்தந்தக் கட்சிக்காரர்கள் தத்தம் செல்வாக்கை தேர்தல போரில் நிலை நிறுத்த முன்வரவேண்டும். தூத்துக்குடி சம்மந்தப் பட்டமட்டில் வாக்காளர்க்கிடையே காங்கிரஸ் வாதிகளின் செல்வாக்கானது கிஞ்சித்தேனும் இல்லாது போனது பற்றியே மேலே கண்ட காங்கிரஸ் வாதிகள் தாங்கள் முழு நம்பிக்கையுடன் எதிர் பார்த்திருந்த வெற்றிக்கு விரோதமாக தோல்வியே சித்தித்தது. இதினின்றே நாட்டினில் காங்கிரசின் செல்வாக்கானது கீழ் நோக்கிப் போய்க்கொண்டேயிருக்கிறதென்றுகூறலாம் இப்பேர்க்கொத்த தோல்வியின் மூலமாகவாவது இனி நடைபெறும் தேர்தல் காலங்களில் காங்கிரஸ் வாதிகள் வாக்காளர்களுக்கிடையே தங்கள் செல்வாக்கை நிர்ணயம் செய்த பிறகே தேர்தலுக்கு நிற்க முயற்சிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது தோல்வியடைந்த பின்னரும் பிதற்றுவது என்றால் பேடித்தனமே.

ஸ்தல நகரசபை சம்பந்தப் பட்ட மட்டில் இப்பொழுது புதிதாக ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கவுன்சிலுக்கு முன்னால் இருந்த பழைய கவுன்சிலில் அங்கத்தினர் ஸ்தானம் வகித்த சில காங்கிரஸ் வாதிகள், நகரத்தில் வரவர காங்கிரசின் மதிப்பு குறைந்து போவதை நன்கு அறிந்தும், காங்கிரசின்பால் ஜனங்களுக்கு கிஞ்சித்தேனும் பற்றுதல் இல்லை எனக்கருதியே தாங்கள் மீண்டும் சபையில் காங்கிரஸ் வாதியாக நிற்க விரும்பாது தேர்தலுக்கு நிற்கவில்லை, அன்னவர்களின் அரிய பெருந்தன்மையான செய்கையை கவனித்தாவது தற்பொழுது தேர்தலுக்கு நின்று தோல்வியடைந்திருக்கும் காங்கிரஸ் வாதிகள் நிற்காமல் சும்மா இருந்திருக்கலாம். அதை விடுத்து தேர்தல் போரில் நின்று, வெற்றி கிடைத்ததாக கோஷம் செய்து, பின்னால் தோல்வியை அடைந்தால், அதனால் என்ன பலாபலன்?

இதற்கு முன்னால் இருந்த முனிசிபல் சபையிலாவது நாம தேயத்திற்கு ஒப்பாக காங்கிரஸ் வாதியின் கட்சியொன்று மின்னிக்கொண்டிருந்தது இவ்வருடமோ புதிதாக ஏற்பட்டிருக்கும் சபையில் காங்கிரஸ்வாதிகளின் கட்சியொன்று இருப்பதாக சொல்வதற்கு இடமேயில்லை. இருந்த போதிலும் புதிதாக ஏற்பட்டிருக்கும் கவுன்சிலில் கூட காங்கிரஸ்வாதிகள் என்று மார்பு தட்ட ஓர் இரண்டு கவுன்சிலர்கள் உளர். ஷெ ஓர் இரண்டு கவுன்சிலர்களும் தற்சமயம் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ்வாதிகளின் தோல்வியைக் கண்டு பீதி கொண்டார்கள் போலும். தங்களுடைய ஆதிக்கம் கவுன்சிலில் நடைபெறாதென வருந்துகின்றனர் போலும். என் செய்வது. ஆனால் ஓர் வழியுண்டு, அதாவது அரசமரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரையும் பிடித்தது போல சென்ற கவுன்சிலில் அங்கத்தினர்களாக இருந்த சிலர் நிற்கவேயில்லை சிலர் நின்று தோல்வியுற்றார்கள். இவை யெல்லாம் கவனிக்கும் காலத்து தற்சமயம் எஞ்சி நிற்கும், கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் காங்கிரஸ் வாதிகள் தாங்களும் கவுன்சிலில் இருப்பதை விட இல்லாதிருப்பதே உசிதமெனக்கருதித் தங்கள் உத்தியோகத்தையும் ராஜிநாமா செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்களெனத் தெரிய வருகிறது. ஐயோ பாவம்? அவ்வாறு ராஜீநாமா செய்வதற்கு முட்டுக்கட்டையாக விளங்குவது Chairman எலக்ஷன் போலும். எது எவ்வாறு போயினும் போகுக.

இது இறுதியாக, பொதுவாகக் கூறுமிடத்து, தற்சமயம், காங்கிரஸின் செல்வாக்கை நன்கறிந்த பின்னரே, தேர்தலுக்கு நிற்பது நலமாக விருக்கும்.

அருப்புக்கோட்டை

ஓர் பிரபல குடும்பத்தில் தமிழ் சீர்திருத்த திருமணம்.

அருப்புக் கோட்டையில் பிரபல ஜவுளி நூல் வியாபாரியும், மாஜி பஞ்சாயத்துப் போர்டு பிரஸிடெண்டும், இராமநாதபுரம் ஜில்லா போர்டு சீர்திருத்தமுறைத்தலைவருமான உயர் திருவாளர் அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியாரவர்களின் குமாரர் திருவாளர் செல்வன் சண்முகசுந்தரம் அவர்களுக்கும், திருவாளர் செல்வி சிவகாமியம்மாளுக்கும், திருவாளர் செல்வன் பொன்னுச்சாமிக்கும், திருவாளர் செல்வி மீனாக்ஷியம்மாளுக்கும் 10-9-34ந்தேதி திருமணம் நடைபெற்றது.

பின்பு மணமக்கள் தாங்களே மனமொத்து ஒருவருக்கொருவர் மண ஒப்பந்த உறுதிமொழி கூறி மணக் குறிப்புடன் மலர் மாலை மாற்றிக்கொண்டார்கள்.

விஜயஞ் செய்திருந்த நண்பர்களில் தோழர்கள் ஜி. ஸ்ரீனிவாசன் எஸ். சுப்பிரமணியம் இவர்களால் மணமக்களுக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பெற்று திருமண வைபவம் 12-30 மணிக்கு இனிது நிறைவேறியது.

புதிய பத்திரிகை.

“சிறுவர் அறிவுக்கதிர்”
சீக்கிரம் வெளிவரும்.

பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு எல்லா வகைகளிலும் அறிவு புகட்டும் புதுமாதிரியான ஓர் மாதாந்தரப்பத்திரிகை.

வருஷ சந்தா உள்ளூர் 8 அணா.
” வெளியூர் 10 அணா.
தனிப்பிரதி 9 பை.

உடனே சந்தாதாரராகுங்கள்
K. J. வேதமுத்து,
தமிழ்ப்பண்டிதர், L. M. போதனாமுறைப்பாடசாலை ஈரோடு.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யின் மூலம் நாம் சுதந்திரத்தையும் அடைய முடியாது.

இந்த சக்தி ஏற்படுவதற்கு வேண்டிய நிபந்தனைகளை நிறைவேற்றி வைக்கக்கூடிய அனுகூலங்கள் தற்போதைய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இல்லையென்பது மகாத்மாஜீயின் திடமான நம்பிக்கை.

இந்த ஸ்தாபனத்திற்குள் இருந்து கொண்டே இந்த திருத்தியமைக்கும் வேலையைச் செய்வதா, அல்லது, அதனுடன் தமது அஹிம்ஸா லக்ஷியத்துக்கு ஏற்ற ஒரு ஸ்தாபனத்தின் மூலமாகச் செய்வதா என்பதைப்பற்றி அவர் சிந்தனை செய்து வருகிறார்.”

விதிமாற்றம்.

காங்கிரஸ் விதிகளை மாற்றுவதற்குக் காந்திஜி கொடுத்த யோசனைகதர், நூல் சந்தா விஷயமாக மட்டில் தீவிர ஆக்ஷேபனை செய்யப்பட்டிருக்கிறது. அது அனுபவ சாத்தியமல்ல என்ற அபிப்பிராயம் அநேகமாய் ஏகோபித்திருப்பது வருந்தத்தக்கது.

தொழிலின் மேன்மை

உலக மெங்கும், கிளர்ச்சி இருந்து வருகின்றன. மூளையைச் செலுத்தி வேலை செய்கிறவர்களும் தொழிலாளர் தான் என்று கருதிய போதிலும், பொதுவுடமைத் தேசத்தில் கைவேலைகாரர்கள் தான் அதிகாரத்தை வகிக்க முடியும் என்பதை உலகமே அறியும்.

தேக உழைப்பால் பாடுபடும் தொழிலாளர் நம்மை யாள்வது நல்லதென நாம் ஒப்புக்கொண்டால், நாம் ஒவ்வொரு வரும் ஏதோ கொஞ்சம் தேக உழைப்பில் ஈடுபட வேண்டுமென்று காந்திஜி கூறுவதை ஏன் ஆக்ஷேபிக்க வேண்டும்?

நூல் சந்தா திருத்தம்

தேக உழைப்பைக் கொண்டு பாடுபடாதவர்கள் நூல் சந்தாவை ஏற்றுக் கொள்ளவேண்டும்; மற்றவர்கள் நான்கணு கொடுத்தால் போதுமென்ற திருத்தத்தைக்கொண்டு வரலாம்.

வகுப்புத் தீர்ப்பு

“தனித் தொகுதிக்கோ, கூட்டுத் தொகுதிக்கோ, அன்னிய அரசாங்கத்தின் வற்புறுத்தலை உதவியாகக் கொண்டு’ ஒரு கட்சியாரை ஒப்புக் கொள்ளச் செய்வது மதியீனமானதும், பயனற்றதுமாகு மென்பது காங்கிரசின் நம்பிக்கை.

இப்பொழுதிருக்கும் நிலமையில் தேசிய முஸ்லிம் தலைவர்கள் கூட இப்பிரச்னையை வெற்றிகரமாய் முடித்துவைக்க சிரமப்படுகிறார்கள். அப்படியிருக்க, முஸ்லிமல்லாத வோட்டர்களுக்குச் சொல்லும் வேண்டுகோளில் தனித்தொகுதி, கூட்டுத்தொகுதி பிரச்னையை எழுப்பு வதில் பிரயோசனமில்லை. ஆகவே இவ்விஷயத்தை இப்போது தேர்தல் பிரச்னையாகக் கிளப்பக்கூடாதென்றும், சரியான சந்தர்ப்பம் நேரும்போது அதைத்திருப்தி கரமாய் முடிக்கவேண்டுமென்றும், காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. கடைசியாக தோழர் ஆச்சாரியார் காங்கிரஸ் காரர்கள் சட்டசபைதேர்தலில் வெற்றியடைய வேண்டியது அவசியமென்றும் கூறி முடித்தார்.

(7.ம் பக்கத்தொடர்ச்சி)

த்து எழுநூற்று எண்பத்திரண்டு (1782) இரண்டாயிரத்து எழுநூற்றுத்தொண்ணூற்றுமூன்று (2793) மில்லியன்ஸ் மைல்கள்வித்தியாசத்தோடு அமைந்திருக்கின்றன. இந்தப்புள்ளி விபரங்கள் நமது மனதில் பதிவது மிகக் கஷ்டம். இதை வாசகர்களின் நினைவுக்குச் சுலபமாக்க சிறிய தொகையில் விளக்குவாம்.

நம் உலகை ஒரு அங்குலம் குறுக்களவு கொண்ட பந்தாகப் பாவிக்கலாம். அப்போது சூரியன் 323 கஜத்திற்கப்பால் 9 அடி குறுக்களவு கொண்ட கோளமாக நிறுத்தப்படும் அதாவது நான்கு ஐந்து நிமிடம் நடந்தால் ஐந்தில் ஒரு பகுதி தூரத்தைக் கடக்கலாம். சந்திரன் ஒரு சிறு பட்டாணிக் கடலையளவில் உலகத்திற்கு $2\frac{1}{2}$ அடிக்கு அப்பால் இருக்கும. சூரியனுக்கும், பூமிக்குமிடையில் இரண்டு உள் கோளங்களான புதனும், சுக்கிரனும் இருக்கும். அதன் தூரங்கள் சூரியனிலிருந்து முறையே நூற்று இருபத்தைந்து (125) இருநூற்றஐம்பது (250) கஜம் இருக்கும். மேற்கூறிய கோளங்களைச்சுற்றிலும், செவ்வாய் கிரகம் தோன்றும் வரை வெறும் வெளியாகவே இருக்கும். இந்தச் செவ்வாய் கிரகம் பூமிக்கு 175 அடிக்கு இப்பால் இருக்கும். வியாழன் ஒரு அடி குறுக்களவில் ஒரு மைலுக்கு அப்பாலும், சனி இரண்டு மைலுக்கப்பாலும், யூரனஸ் நான்கு மைலுக்கப்பாலும், நெப்டியூன் ஆறு மைலுக்கப்பாலும், இருக்கும். பிறகு ஆயிரக்கணக்கான மைல்கள் வரை ஒரு சில பாகங்களான ஒதுக்கப்பட்ட குறைந்த நீராவிகள் நீங்கலாக வெறும் வெளியாகவே இருக்கும்.

இந்த உதாரணங்கள் மூலம் மனிதனின்—உலகின்—நடப்புகள் இந்த மிகப்பெரிய வெளியில் எப்படி அமைந்திருக்கிறதென்பது தெரிய வரும்.

இந்த வெளியில் தான் பூமியைப்பற்றிய வாழ்க்கைகள் நமக்குப் புலனுகின்றன. 4000 மைலுக்கப்பால் இருக்கும் கோளத்திற்கு நமது பூமி வாயிலாக மூன்று மைலுக்கப்புறம் புகுந்து போக முடியாது. மேலும் ஐந்து மைலுக்கப்புறம் எந்த மூகாந்தரத்தினுலும் புகுந்து போக இயலாது. வெளிப்படையாக மற்றையவரையறைகளெல்லாம் வெறுமனுகவும்: இறந்த தாகவும் இருக்கின்றன.

இது வரை கடலில் தோண்டப்பட்ட தன் ஆழம் ஐந்துமைல் வரைக்கும் தான் முடிந்திருக்கிறது. ஆகாயவிமானம் உயரப்பறந்ததில் 4 மைலுக்குச்சிறிது கூடுதலாகத்தான்இது வரை பறக்க முடிவு செய்திருக்கிறது. எனினும் மனிதர்கள் புகைக்கூண்டின் உதவியின் பேரில் மிகுந்த சிரமத்தோடு 7 மைல் வரை செ- றிருக்கின்றனர். எந்தப்பக்ஷிகளும் 5 மைல்கள் வரை பறக்க முடியாது. இந்த வரையறைக்கு இப்பாலேயே பல பூச்சிகளும், சிறு பறவைகளும் ஆகாய விமானத்தில் கொண்டுபோகப்பட்டதில் பிரக்ஞையற்று விழுந்து விடுகின்றன வென்று விஞ்ஞான விற்பன்னர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. (இந்த ஒரு வரையறைக்குள் தான் மனிதர்கள் வசிக்கும் உலகம் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றன. இத்தியாதி ஆராய்ச்சியில் ஈடுபட்ட விற்பன்னர்கள் தங்கள் ஆராய்ச்சியின் திட்டமான முடிவை இன்னும் கண்காணிக்கவில்லை. தினமானம் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டே வருகின்றன. காலம் செல்லச் செல்ல விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியின் விசேஷ முடிவை யடைவார்களென உலகினரால் நம்பப்படுகிறது. அடுத்துவரும் அத்தியாயத்தில் மற்றவைகளை விளக்குவாம்.)

தென் மாப்பட்டு லெனின் ஜனனம்.

இவ்வூர் தோழர், கா. வைத்திலிங்கம் அவர் கட்கு பல, புரட்டாசி, 14ந் தேதி (29-9-34)ல் ஆண்குழந்தை பிறந்து “லெனின்” என்று பெயரிடப் பட்டிருக்கிறது.

தஞ்சை முனிசிபல் எலக்‌ஷன்.

காங்கிரஸ்காரர் தோல்வி.

27-9-34 வியாழனன்று நடைபெற்ற தஞ்சை முனிசிபல் எலக்‌ஷன் முடிவில் காங்கிரசின் சார்பாக 11 வது வார்டுக்கு அபேக்ஷகராக நின்ற ப. ச. வெங்கட கிருஷ்ண பிள்ளை தோல்வியடைந்தார். தஞ்சை தோழர் பி எஸ். ராஜப்பாக் கக்ஷியைச் சார்ந்தவருமான தோழர் கோ. ஆதிமூலம்பிள்ளையவர்கள் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோலார் தங்க வயல்.

ராஜம்.

சு. ம. தோழர் ஈ. எஸ். மணி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் கடந்த 1-9 34 காலை 6-15 மணிக்கு பெங்களூர் பெண் வைத்தியசாலையில் பெண் மகவை ஈன்றன குழந்தை பிறந்தவுடன் ராஜம் என பெயரிடப்பட்டது.

ரீசன்

தோழர் பி. கோவிந்தராஜுலு அவர்கள் வாழ்க்கை துணைவியார் தோழர் நாயகம் அம்மாளுக்கு 4-9-34 கோலார்தங்கவயலில் மாலை 3-30 மணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது குழந்தைக்கு தோழர் ஈ. எஸ். மணியவர்களால் ரீசன் என பெயரிடப்பட்டது.

புதுப்பாளையம்.

23-9-34ந்தேதி இரவு 8 மணிக்கு புதுப்பாளையம் சமதர்ம வாசகசாலையாரால், திருவண்ணாமலை விருதுநகர் நாடார் சத்திரத்தில், கலப்பு விதவா விவாகத் தம்பதிகளான தோழர்கள் ரங்கம்மாள் சிதம்பரம் அவர்களுக்கு பாராட்டு விருந்து சிறப்பாக நடை பெற்றது அநேக தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்

டெண்டர் நோட்டீஸ்.

விருதுநகர் டவுனிலுள்ள சில ரோட்டுகளை நிர்வகிப்பதற்காக டெண்டர்கள் தேவை. எஸ்டிமேட்டுகை ரூ. 6070. 1934-வது வருஷம் அக்டோபர் மீ 13-ந்தேதிக்குள் டெண்டர்கள் சீல் செய்த கவரில் போடப்பட்டு, கீழே கையொப்பமிட்டவருடைய விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு டெண்டருடனும் Rs. 305/- டெண்டர் டிபாசிட்டாக கட்டவேண்டும். மற்ற விபரங்களை நேரில் தெரிந்து கொள்ளலாம்.

முனிஸிபல்ஆபீஸ்,
விருதுநகர்,
28—9—1934.

V. V. ராமசாமி,
சேர்மன்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பற்றி சமீபத்தில் தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியார் குறிப்பிட்ட விஷயங்களில், ஆட்டாவா என்பது கானடாவிலுள்ள ஓர் நகர் என்பதைத் தவிர வேறொன்றும் உண்மையல்ல. (சிரிப்பு) அவர் கூறியுள்ள விஷயங்கள் மிகவும் தப்பெண்ணத்தை உண்டாக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆட்டாவாவிலிருந்து நான் திரும்பி வந்ததும், ஒரு தேசீய நண்பர் ஆட்டாவா ஒப்பந்த விஷயமாக என்னைக் கண்டித்தார். "தாங்கள் ஆட்டாவா ஒப்பந்த அறிக்கையை வாசித்தீர்களா" வெனக் கேட்டேன். "நான் அதை வாசித்தால் எனக்கு சமாதான மேற்பட்டுவிடும்; எனவே அதை வாசிக்க விரும்பவில்லை" யெனக் கூறிவிட்டார். (சிரிப்பு)

ஆட்டாவா ஒப்பந்த சம்பந்தமாக என்னைக் கண்டிப்பவர்களில் 3 விதமானவர்களிருக்கின்றனர். அதாவது.

1. அவ் விஷயத்தில் உண்மையாகவே சந்தேகமுள்ளவர்கள்-
2. சந்தேகாஸ்பதமான யோக்கியப் பொறுப்புடையவர்கள்,
3. அறியாதவர்கள்.

இங்கிலாந்தில் கூட பல பொருளாதார நிபுணர்கள் ஆட்டாவா ஒப்பந்த சம்பந்தமாக பலவித அபிப்பிராயப் படுகிறார்கள். அவ்விதம் உண்மையான சந்தேகமுடையவர்களைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை. உதாரணமாக இந்தியா சட்டசபையிலுள்ள தோழர் சீதாராமராஜு ஆட்டவா ஒப்பந்தத்தைப்பலமாகக்கண்டிப்பவர். அவர் உண்மையாக அபிப்பிராய பேதம் கொண்டிருப்பது பற்றி நான் குறை கூறவில்லை. அத்தகையோரிடம் எனக்கு மதிப்புண்டு. இரண்டாவதாக கூறப்பட்டவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அவர்கள் அறியாதவர்களல்ல. ஆனால் அவர்கள் விஷய மறியாதவர்களுக்கு தப் பெண்ணம் உண்டாகும்படி செய்து விடுவார்கள். இந்தியாவின் வர்த்தகம் நாசமானாலும் ஆகட்டும், இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும் யாதொரு ஒப்பந்தமும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதே அவர்களுடைய அபிப்பிராயமாகும்.

நான் செய்த 'பாவம்'

எனவே ஆட்டாவா மகாநாட்டிற்குச் சென்றது தான் நான் செய்த பாவமாகும். நானாக அம் மகாநாட்டிற்குச் செல்லவில்லை. சர்க்கார் தங்கள் பிரதிநிதியாகவே என்னை அனுப்பினார்கள். இந்தியாவின் பிரதிநிதியாக ஆட்டாவாவிற்குச் சென்றதாக நான் கூறிக்கொள்ளவுமில்லை. ஆட்டாவா மகாநாட்டிற்கும்பிரதிநிதியாகச் செல்லும்படி 1932ம் வருஷம் ஏப்ரல் மீ எனக்கு சர்க்காரிடமிருந்து அழைப்பு கிடைத்தது. உடனே என்னை "சர்க்கார் தாசன்" எனக் கூற ஆரம்பித்து விட்டார்கள். இந்தியாவிற்கே முதலாளிகளின் முக்கிய பிரதிநிதியாக என்னை ஜினிவாவிற்கு அனுப்பியதை மனதில் கொண்டே, சர்க்கார் என்னைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவ் விதம் சர்க்கார் என்னைத் தேர்ந்தெடுத்தது தவறு? அதற்கு முன் 8 வருஷங்களாக நான் வர்த்தக, நிதி சம்பந்தமான விஷயங்களில் சர்க்காரை எப்போதும் கடுமையாகக் கண்டித்தே வந்திருக்கிறேனென்பதை இந்தியா சட்டசபை நடவடிக்கைகளிலிருந்து யாவரும் அறிந்து கொள்ளலாம். இதுவரை தேசத் துரோகமாக நான் ஓர் காரியமாவது செய்திருக்கிறேனென யாராவது கூற முடியுமா? அவ்விதம் நான் சர்க்காரைக் கண்டிப்பவனாக இருந்தும் அவர்கள் என்னையே அவர்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். தவிர நம் தேசத்திற்கு பாதகத்தை விளைவிக்கக்கூடிய போரத்திற்கு நான் ஓர்போதும்உடன்படமாட்டேன். நான் ஜாதியில் செட்டியானதால் அத்தகைய ஒப்பந்தத்தை ஓர் போதும் அங்கீகரிக்க மாட்டேன். (சிரிப்பு)

ஒப்பந்தத்திற்குக் காரணம்.

1929ல் ஆரம்பித்த பொருளாதாரக்கஷ்டமானது 1932ல் மிகவும் கடுமையாகிவிட்டது. எனவே அத்தகைய சங்கடமான சமயத்தில் அரசியல் சம்பந்தமுள்ள நாடுகளெல்லாம் ஒன்றுகூடி, பரிகார முறைகளைத் தேட முற்பட்டது தவறு? இன்னும் இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கும் சாதகமாக பரஸ்பரம் ஒப்பந்தம் செய்துகொள்ளுவதையும் உணர்ந்தோம். ஏனெனில் இந்தியா ஏராளமான மூலச்சரக்குகளை உற்பத்தி செய்யும் நாடாகும். பிரிட்டிஷ் கைத்தொழில்களுக்கு மூலச்சரக்குகள் அத்தியாவசியமானவைகளாக இருக்கின்றன உதாரணமாக இந்தியாவில் லக்ஷக்கணக்கான டன் ஆளிவிரை உற்பத்தியாகிறது. ஆனால் இங்லாந்து தனக்கு வேண்டிய ஆளிவிரைகளை அர்ஜண்டினாவிலிருந்து பெற்று வந்தது. எனவே அதுபோன்ற சாமான்களை பிரிட்டன் வரியின்றி இறக்குமதி செய்யும் படிக்கும், ஆனால் அன்னிய நாடுகளிலிருந்து வரும் அதே சாமான்களுக்கு 10லிருந்து 15 பெர்சண்ட் வரை வரி விதிக்க வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்து கொண்டோம். அதற்குப் பிரதியாக நாம் பிரிட்டனுக்கும் ஏதாவது சலுகை காட்ட வேண்டுமல்லவா? தவிர இந்திய கைத்தொழிலுக்கு பாதகமளிக்கக் கூடிய முறையில், நாங்கள் பிரிட்டனுக்கு சலுகையெதுவும் கொடுத்து விடவில்லை. அப்படியிருக்க, ஆட்டாவா ஒப்பந்தமானது, தேசத்துரோகமானது என்று எவ்விதம் கூறமுடியும்? தவிர, 9 மாதம் முன்னறிக்கை கொடுத்து அவ் ஒப்பந்தத்தை ரத்து செய்து விடலாமென்னும் விதி ஏற்படுத்தியிருக்கிறோம். அதனால் இந்தியாவிற்கு நன்மை யேற்படாவிடில், அதை ரத்து செய்துகொண்டு விடலாம்.

நிற்க, காங்கிரஸ் பிரசாரகர்களுடைய பிரசங்கங்களையெல்லாம் நான் மிகவும் சிரத்தையுடன் வாசித்தேன். ஆட்டாவா ஒப்பந்தம் தேசத்திற்கு பாதகமானதென ருஜுப்பிக்க அவர்கள் ஓர் வார்த்தைகூட கூறவில்லை.

ஏற்பட்ட பலன்

அவ் ஒப்பந்தமானது சென்ற 18 அல்லது 19 மாதங்களாக அமுலிலிருந்து வருகிறது. அதன் சம்பந்தமான புள்ளி விவரங்களை சர்க்கார் சமீபத்தில் வெளியிட்டனர். ஆனால், அவ்விஷயமாக சர்க்கார் அபிப்பிராயமெதுவும் கூறவில்லை. அவ் ஒப்பந்தத்தின் பயனாக இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் மிகவும் அதிகமாகியிருக்கிறது. உதாரணமாக 1931 32ல் அதாவது ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன் பிரிட்டனுக்கு ஏற்றுமதியான சாமான்களின் அளவு பின்வருமாறு:—

அரிசி	25 000 டன்
கடலை எண்ணெய்	2 90,000 டன்
கடுகு எண்ணெய்	4,000 டன்
ஆளிவிரை	14 000 டன்

ஒப்பந்தத்திற்குப் பின் ஏற்றுமதி விவரம் பின்வருமாறு:—

அரிசி	89 000 டன்
கடலை எண்ணெய்	5 40,200 "
கடுகு எண்ணெய்	16,000 "
ஆளி விரை	1,75,000 "

மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து வர்த்தகம் எவ்வளவு தூரம் விருத்தி யடைந்திருக்கிறதென்பதை அறிந்து கொள்ளலாம்.

பண்டிதர் கருத்து

ஆட்டாவா ஒப்சந்தத்தைப் பற்றி லயோலா கல்லூரி பொருளாதார பண்டிதரான பாசினுக் என்னகூறுகிறாரென்பதைக் கவனியுங்கள். அவர் ஒரு ஜெர்மானியர். முன்னர் ஓர் சமயத்தில் அவர் ஆட்டாவா ஒப்பந்தத்தைக் கண்டித்துக் கூறினர். ஆனால் அவ் புள்ளி விவரங்கள் வெளியான பின், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆட்டாவா ஒப்பந்தத்தால் இந்தியாவின் வர்த்தகம் மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறதெனக் கூறியுள்ளார். அவ்வொப்பந்தம் மிகவும் அவசியமானதென்றும் கூறியுள்ளார். உண்மை இப்படியிருக்க, நீங்கள் தேர்தல் பிரசாரப் பொய்களைக்கண்டு ஏமாறுமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். "ஆட்டாவா" ஒப்பந்தத்தைக் கண்டிப்பவர்களை, அவ் உச்சரிப்பை ஆட்டாவாயென திருத்திக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு)

தேர்தல் போர்டின் வேஷம்

அடுத்தபடியாக காங்கிரஸ் தேர்தல் போர்டின் வேஷங்களைப்பற்றி கவனிக்க வேண்டியது அவசியமாகும். காங்கிரசின் பாஷ்ய கர்த்தாவான தோழர் ஸி.ராஜகோபாலாச்சாரியார், இப்போது ஆரம்பமாகியுள்ள தேர்தல் போராட்டமானது சர்க்காருக்கும், காங்கிரசிற்கும் ஏற்பட்டுள்ள போராட்டமென்றும், எனவே மற்ற கட்சிகள் போராட்டத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார்.

இப்போது இந்தியா சட்டசபை தேர்தலில் சர்க்கார் அபேட்சகர்களாக யார் நிற்கிறார்களெனக்கேட்கிறேன். தவிர, காங்கிரஸ் கொள்கையை தேசம் ஒப்புக்கொள்ளுகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, பகிஷ்காரம் முதலியவைளே காங்கிரசின் முக்கிய கொள்கையாக இருந்தது. காங்கிரஸ் இப்போது சட்ட மறுப்பைக் கைவிட்டு விட்டது. சென்ற 3 வருஷங்களாக சட்டமறுப்பே காங்கிரசின் முக்கிய கொள்கையாக இருந்து வந்தது. எனவே சட்டமறுப்பு சரியா? அல்லது சட்டமறுப்பைக் கைவிட்டது சரியா?

திட்ட மேன்ன?

தவிர காங்கிரஸ் வாதிகள் தங்கள் திட்ட மென்ன வென்பதையும் பட்டவர்த்தனமாகக் கூறவில்லை. முதன் முதலாக சர்க்கார் அறிக்கையை நிராகரிக்கப் போவதாகக்கூறுகிறார்கள். அதை நிராகரிப்பதென்றால் என்ன? காங்கிரஸ் வாதிகள் பெரும்பான்மையான ஸ்தானங்கள் பெற்று அதை நிராகரித்தாலும், சர்க்கார் அறிக்கையை அனுசரித்த மசோதா பார்லிமெண்டில் விவாதத்திற்கு வரும். பின்னர் அவ்விஷயத்தில் இந்தியா சட்ட சபைக்கு அதிகாரமெதுவுமிராது. சர்க்கார் அறிக்கையை நிராகரித்து விட்டால், பின்னர் சமூகத் தீர்ப்பு தானாகவே நிராகரிக்கப்பட்டதாகிவிடுமெனக் கூறுகின்றனர். அவ்விதமாயின் சட்டசபையில் முஸ்லிம் அங்கத்தினர்கள் அத்தீர்மானத்தை ஆதரிக்க மாட்டார்கள். ஒரு வேளை முஸ்லிம்கள் கண்ணில் மண்ணைத்தூவி அவ் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டாலும் சர்க்கார், தாங்கள் ஒன்றுஞ் செய்ய முடியாதென்றும் அவ்விஷயமானது பிரிட்டிஸ் சர்க்காருடைய கையிலிருந்து வருகிற தென்றும் கூறி விடுவார்கள். பின்னர் காங்கிரஸ் அங்கத்தினர் மீண்டும் சட்ட சபையிலிருந்து வெளியேறுவார்களா? இவ்விஷயமாக காங்கிரஸ் வாதிகள் என்ன செய்யப்போகிறார்களென்பதை அவர்கள் விளக்கவில்லை.

'அடக்குமுறை சட்டரத்து'

அடுத்தபடியாக அடக்கு முறைச் சட்டங்களை ரத்து செய்வது காங்கிரசின் திட்டமாகும். சட்டசபை விதிகளை நன்கு அறிந்தவர்கள், உத்தியோக சம்பந்த மல்லாத மசோதாக்கள் சட்டமாவது எவ்வளவு கஷ்ட மென்பதை அறிந்து கொள்ளுவார்கள். சர்க்கார் அங்கீகாரமிருந்தாலன்றி, அவைகள் சட்டமாவது முடியாத காரியம். அப்படியே அடக்குமுறைச்சட்டங்களை ரத்து செய்ய வேண்டுமென்ற தீர்மானங்கள் நிறைவேறினாலும், அவைகளுக்கு ராஜாங்க சபையில் முட்டுக்கட்டை ஏற்படும். அங்கு சர்க்காருக்கு ஆதரவாக

பெரும்பான்மையோர் ஓட்டுக் கொடுப்பார்களென்பதில் சந்தேகமில்லை. இரு சட்டசபைகளிலும் நிறைவேறினாலன்றி, அத்தீர்மானங்கள் அமுலுக்கு வர முடியாது.

ஜனப் பிரதிநிதி சபை.

மூன்றாவதாக அவர்கள் கூறும் விஷயமானது, ஜனப் பிரதிநிதி மகா சபையாகும். இதற்கு மற்ற தேசங்களில் நடந்துள்ள சம்பவங்களே உதாரணங்களாகும். ஒன்று ஆயுதப் புரட்சியாலோ, அல்லது சர்க்காரின் அங்கீகாரத்தின் மீதோ தான் அவ்விதம் செய்யமுடியும். காங்கிரசின் கொள்கை சாத்வீகமும், அஹிம்சையுமாகும் எனவே, ஷை நோக்கம் பூர்த்தியடைய அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

திட்டம் கிடையாது.

காங்கிரசுக்கு அரசியல், பொருளாதார, சமுதாய திட்டமொன்றுமில்லை. தற்போது ஏற்பட்டுள்ள மகத்தான பொருளாதார மந்தத்தை நூற்பதினாலும், கத்தராலும் தீர்க்க முடியுமா? ஆலயப்பிரவேச மசோதாவை ஆதரிக்கும் படி தோழர். ராஜகோபாலாச்சாரியார் இந்தியா சட்டசபை அங்கத்தினர்களை பகிரங்கமாகக் கேட்டுவந்தார். ஆனால் சமீபத்தில் அவர் செய்த பிரசங்க மொன்றில் ஆலயப்பிரவேச பிரச்சினை இப்போது தேசத்தின் முன்னிலையில் இல்லையெனக்கூறி விட்டார். ஆலயப்பிரவேச விஷயமாக இவ்வளவு தூரம் பொது ஜன வளர்ச்சியைத் தூண்டிவிட்ட பின், தோழர் ஆச்சாரியாரும், மகாத்மாவின் சிஷ்யர்களும் ஆதிஹிந்துக்களை ஆதரிப்பதென நாங்கள் உறுதி கொண்டிருக்கிறோம். எனவே ஆலயப்பிரவேச மசோதாவை ஆதரிக்கப் போகிறோமெனக் கூறுவதே நேர்மை யாகும். எனவே, அவ்விஷயத்தில் காங்கிரஸ்தேர்தல் போர்டின் நிலைமையானது 'ஹம்பக்' காகவே இருக்கிறது.

டாக்டர் நாயுடுவை எதிர்ப்பதேன்?

ஆதி இந்துக்களை ஆதரிப்பதாகக் கூறும் காங்கிரஸ் வாதிகள் எவ்வளவு ஆதிஹிந்துக்களை நிறுத்தி யிருக்கிறார்கள்? எவ்வளவு பெண்களை நிறுத்தியிருக்கிறார்கள். சிறை செல்லாத எங்களையாவது காங்கிரஸ் எதிர்க்கட்டும் சிறையில் முதலாவது வகுப்பு போன்ற சௌகரியமில்லாத சமயத்தில், சிறை சென்ற டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவுக்குப் போட்டியாக அவர்கள் என் அபேட்சகரை நிறுத்தியிருக்கிறார்கள்? மற்றவர்களை காட்டினும் அவர் தேசபக்தியில் குறைந்தவரா? கதர் கட்டி, 4 அணா சந்தாகொடுத்தால் தியாகிகளாகி விடுகிறார்கள் போலும்! எனவே இப்போது இத்தேச ஜனங்கள் கவனிக்க வேண்டிய விஷயம் மிகவும் முக்கியமானதாகும். காங்கிரஸ் தற்போது சர்க்காரை அறைகூவி அழைக்கவில்லை, சுயமதிப்பு, தேசபக்தி முதலியவைகளுக்கு காங்கிரஸ்காரல்லாத இந்தியர்களையே அறைகூவி அழைத்திருக்கிறார்கள். எனவே வாக்காளர்கள் தேர்தல் பிரச்னையை நன்கு பரிசீலனை செய்து, காங்கிரஸிற்கு வெளியிலும், தேசபக்தர்களும், தேசத்திற்குச்சிறந்த தொண்டியற்றியவர்கள் இருக்கிறார்களென்பதையும் தங்கள் தீர்ப்பின் மூலம் காட்டும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் சர். ஷண்முகம் அவர்கள் பேசுகையில், இந்தியா சட்டசபையில் தோழர் ஏ. ராமசாமி முதலியார் அடைந்துள்ள கீர்த்தியைப் புகழ்ந்தும், தேர்தலில் அவரை எல்லோரும் ஆதரிக்கும்படியும்கூறினர்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் கைக்கு மாற்றப்படும் பொழுது தேசத்திலுள்ள சிறுபான்மையோர் அனைவரும் நாட்டின் எதிர்காலவாழ்க்கையில் தங்களின் நிலைமை எவ்வாறிருக்குமென்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுவது சகஜந்தான். எனவே, சிறுபான்மையோரைத்திருப்தி செய்வதற்காகச் சில பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டியதும் அவசியந்தான். உண்மையாகவே புதிய அரசியல் முறையை ஏற்றுக்கொண்டு கையாளுவதில் சிறுபான்மையோர் ஒரு சிறிதும் பயப்படவேண்டியதில்லையென்பதை அவர்களுக்கு நிரூபித்த பின்னரே, நாம் நமது பிறப்புரிமைக்காக ஒற்றுமையுடன் போராடவும், உண்மையான அதிகாரத்தைக் கைப்பற்றவும் முடியுமென்பதை நீங்கள் நம்பவேண்டும்.

இந்தியர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள இயலுமென்று உலகத்தாருக்கு நிரூபித்துக் காட்டி, இன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மேலும் நமது நாட்டிற்குச் சீர்திருத்தங்கள் கொடுக்க முன்வந்திருக்கிறார்களென்றால் அதற்குக்காரணம் மாண்ட் போர்டு சீர்திருத்தத்தை ஜஸ்டிஸ் கட்சியினர் திறம்பட நடத்திக் காட்டியதே யென்று நான் பெருமையுடன் கூறுவதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டுகிறேன். இரட்டை யாட்சியானது ஒரு தற்காலிகமான முறையே யென்பதை யுணர்ந்தும், அதிலுள்ள குற்றங்குறைகளை நன்கு தெரிந்தும், சுயாட்சிக்கு நாங்கள் லாயக்குள்ளவர்களென்பதைக் காட்டிக் கொள்வதற்காகவே அம்முறையையும் நாம் கையாண்டு நடத்தினோம். நாம் சும்மாவிருக்கமுடியாது, நாம் இன்னும் முன்னேறவேண்டும். காலச்சக்கரத்தின் வேகத்தை யடக்குவதற்கு யாராலும் முடியாது. வேறு ஒரு முறையும் கூறாமல் வெள்ளையறிக்கையை மட்டும் நிராகரிப்பதனால் நமது எதிரிகளாக இங்கிலாந்திலிருக்கும் பிற்போக்காளர்களுக்கே வலிவு கொடுக்கின்றோம்.

யார் பொறுப்பாளி.

வட்ட மேஜை மகாநாட்டில் ஒரு சமயம் அளிக்கப்பட்டதை விட அதிகமான பாதுகாப்புகள் தற்போது வெள்ளையறிக்கையில் காணக்கிடைக்கிறதென்றால், அதற்குக்காரணம் எம்முடன் சம்பந்தமாகவும் சுயேச்சை சம்பந்தமாகவும் காங்கிரஸார் வெளியிட்ட பேச்சுகளேயாகும். இதற்காக காங்கிரஸ் தன்னைத்தான் நொந்துகொள்ள வேண்டியதுதான். சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் கட்டுப்பட்டு சுயராஜ்யம் பெற்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் நமது தாய் நாடும் சம அந்தஸ்து அடையவேண்டுமென்று விரும்புகின்ற நமது கட்சியார் இப்பொழுதே பிரிட்டிஷாருக்கு ஒரு எச்சரிக்கை செய்யவேண்டும். அதாவது, எங்களுடைய மிதமான வேண்டுகோளுக்கு, குறைவான எந்த அரசியல் திட்டமும் நாட்டிற்குக் கேட்டையே விளைவிக்கு மென்பதேயாம். அமிதவாதிகள் எல்லாத் தேசங்களிலுமுண்டு. அவர்களைச்சமாதானப் படுத்தவும் இயலாது. எனவே ஜஸ்டிஸ் கட்சிக்கும், இன்னும் அதே கொள்கையையுடைய இந்நாட்டில் பெரும்பான்மையான அரசியல் அறிவாளிகள் அடங்கிய மற்றும் ஏனைய கட்சிகளுக்கும் சம்மதமில்லாத எந்த அரசியல் திட்டமும் இந்நாட்டில் நடைபெற முடியாது.

நமது நோக்கம்.

நமது கட்சியின் நோக்கம் அரசியல் நியாயத்தோடு சமுதாய நீதியும் வழங்குவதேயாகும். ஆகவே, இத்தருணத்தில் தாழ்த்தப்பட்டோரின் ஞாபகம் எனக்கு வருகின்றது. அவர்கள் தாழ்த்தப்பட்டோரென்றே இன்னும் அழைக்கப்படுவதே துரதிஷ்டமாகும். அவர்கள் நலங்கோரியும், முன்னேற்றங்கருதியும் சென்ற பதினைந்து வருஷங்களாக நமது கட்சி தன்னாலியன்ற அளவு பாடுபட்டு வந்திருக்கின்றது. நமது காலஞ்சென்ற மாபெருந் தலைவர்களான சர். தியாகராயச்செட்டியார், டாக்டர் நாயர், பனகாலரசர் முதலியோர் நமக்கென வைத்துவிட்டுப்போன லட்சியங்களையே பின்பற்றி நமது கட்சி நடந்து வருகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்கள்.

தேசத்திலும், தேச சபைகளிலும் தாழ்த்தப்பட்டோர் தக்க நிலையடைவதற்காக முதன் முதலாகப் பாடுபட முயற்சித்த கட்சி இந்தியாவில் நம்முடைய ஒரே கட்சிதானென்பதை நாம் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம். இன்று நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு சபைகளிலும், முனிசிபாலிட்டிகளிலும், லோகல் போர்டுகளிலும், மற்ற எல்லா ஸ்தாபனங்களிலும் தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகள் வீற்றிருக்கின்றார்களென்றால் அது நமது கட்சியின் உழைப்பின் பலனே யென்று மரியாதையுடன் கூறுகின்றேன். அரசியல் முன்னேற்றமும் ஒன்றோடொன்று கலந்தே நடைபெற வேண்டும். மேலும், தீண்டாமை யென்னும் கொடிய பழக்கம் நம் நாட்டை விட்டு முற்றிலும் அகற்றப் பட்டாலன்றி நமது நாடு பூர்ண சுயராஜ்யம் அடைய முடியாதென்றும் நான் கூறுவதை நீங்கள் நம்புங்கள். இத்துறையில் நாம் எவ்வளவோ செய்திருக்கின்றோம். இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டிய திருக்கின்றது. சமத்துவத்தில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். எனவே, நமது தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் பூரண சமத்துவமடையும் வரையில் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் அவர்கள் முன்னேற்றத்திற்கான சகல வேலைகளையும் நாம் முயற்சியுடன் செய்யவேண்டுமென்றே கூறுகின்றேன்.

சுயமரியாதை இயக்கம்.

இந்த சந்தர்ப்பத்தில் தென்னிந்தியாவில் பொதுமக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்த இரண்டு இயக்கங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது ஒன்று வாலிபர் இயக்கம், மற்றொன்று சுயமரியாதை இயக்கம். இவ்வியக்கங்களின் உண்மை நோக்கங்களை நன்கு உணராதசிலர் இவர்கள்மீது சில பழிகளைச் சுமத்துகின்றனர். ஆனால், இப்பழிகளுக்கு ஒரு சிறிதும் ஆதாரமே கிடையாது. எனக்குத் தெரிந்தவரை சுயமரியாதை இயக்கம் பல பெருங்கொள்கைகளைத் தாங்கி நிற்கின்றது. முன்னிருந்ததைவிட இந்து மதத்தையே பெரிதாகவும், பெருமையுடையதாகவும் ஆக்க முயலுகின்றது. துரதிர்ஷ்ட வசமாக சென்ற சில காலங்களில் இந்து மதத்தில் நுழைந்திருக்கும் சில ஆபாசங்களை ஒழிக்கவும், இந்துக்களென்று சொல்லும் அனைவரும் தாங்கள் உலகிலேயே புகழ்பெற்று வழங்கும் ஒருபெரிய கட்டுப்பாட்டை சேர்ந்தவரென்றும், உயர்ந்த மனப்பான்மை கொண்ட உண்மைச்சகோதரரென்றும் உணரச் செய்கின்றது. இந்து மதத்தின் ஏதோ ஒரு தனிப்பட்ட கொள்கையை எடுத்துக் கொண்டு அதனால் ஒரு ஜாதிக்கோ அல்லது ஒரு வகுப்புக்கோ தீங்கு விளைகின்றதென்று ஒரு வெளிநாட்டானும் நம்மை இனி குறைகூறக் கூடாது. அளவு மிகுந்த ஆர்வத்தினால் ஒரு சில வாலிபர்கள் இந்து மதத்தின் எல்லையைக் கடந்து நிற்பினும் அவர்களையும் புறக்கணிக்காது அவர்களை நம்மோடு சேர்த்து, நல்வழிப்படுத்தி அவர்களுடைய கடமையை அவர்களுக்கு உணர்த்துவதே அறிவாளிகளின் கடமையாகும். ஒவ்வொரு மதத்திலும் அவ்வப்போது சில இயக்கங்கள் தோன்றி அம் மதத்தின் பூர்வாங்கக் கொள்கைகளை எல்லா மக்களுக்கும் தெரியச் செய்து அம்மதத்தின் புகழை வளர்ப்பதுண்டு. நமது நாடும் தான் கூறும் உயர்நிலையை அடைந்தால் நமது நாட்டிலுள்ள தற்போதைய ஜாதி வித்யாசங்கள் முற்றிலும் தொலைந்தே போகும்.

நமது இயக்கத்தில் பல திறப்பட்ட மக்களுமிருப்பதால் அவர்களுக்குள்ளே ஏற்படும் வித்யாசங்களை ஒழித்து மாறுபாடான அபிப்பிராயங்

களை மற்ற சமூகத்தின் முன்னேற்றத்தை முன்னிட்டு எல்லோரையும் ஒற்றுமைப் படுத்தி வைக்க வேண்டுவதவசியம். சமீபத்தில் நிலச்சுவான்தார்களுக்கும், குடிகளுக்கும் ஏற்பட்ட கஷ்டங்களை ஒருவாறு சமாதானமாக முடித்துச் சட்டமாக்கப் பட்டதைப்பற்றி நாம் மகிழ்கின்றோம். இத்தகைய முடிவுகண்டமைக்காக இவ்விருதிறத்தாரின் பிரதிநிதிகளுக்கும் இச்சமயத்தில் நான் என் மன மார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். நிலச்சுவான்தார்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அதாவது இவர்களுடைய நன்மை, செழிப்பு, சந்தோஷம் எல்லாம் குடியானவர்களுடைய க்ஷேமத்தையே பொருத்திருக்கிறதாகையால் குடியானவர்களின்சகலஞாயமான காரியங்களையும் நிலச்சுவான்தார்கள் பூர்த்தி செய்துவைக்க வேண்டுமென்பதேயாகும். குடியானவர்களுக்கும் நான் ஒரு வார்த்தை கூற விரும்புகின்றேன். அதாவது, அவர்கள் தங்கள் நிலச்சுவான்தார்களிடத்தில் சந்தேகமும், அவநம்பிக்கையும் கொள்ளாமல் அவர்களுடைய கோரிக்கைகளை சமத்துவமாகவும், நீதியாகவும் கேட்க்க வேண்டுமென்பதே. இக் கொள்கைககளை இரு திறத்தாரும் முழு மனதுடன் பின் பற்றுவார்களேயானால் நமது தேசம் விபசாயத்தில் முன்னேற்ற மடையும். எல்லோருடைய நன்மையைக் கோரி தற்போதிருக்கும் இனேக மனப்பான்மை நீடித்திருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

நமது அரசியல் எதிரிகள் இதுசம்பந்தமாக நமது கக்ஷியை எவ்விதமான குறைகூறினாலும் நாம் அதைப் பொருட்படுத்த வேண்டுவதில்லை.

பார்ப்பனர்—அல்லாதார்.

தேசத்தில் சர்க்கார் ஒருகட்சியும், காங்கிரஸ் ஒரு கட்சியும் ஆக இரண்டே கட்சிகள் இருப்பதாகக் கூறுகின்றார்கள். ஆனால், நமது மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டில் மாகாண சுயாட்சி நமக்குக் கிடைக்கும் போது ஜஸ்டிஸ் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் ஆக இரண்டு கட்சிதானிருக்க முடியும். நம்முடைய லட்சியத்தில் நான் பூர்ண வெற்றியடைய வேண்டுமானால் ஒற்றுமை யொன்றே வேண்டற்பாலது. எனவே, நாட்டிலுள்ள சகல மதத்தினரும், சமுகத்தினரும் ஒற்றுமைப்படவும், அதாவது இந்துக்கள், மகமதியர், கிருஸ்தவர், ஆரிய சமாஜத்தார், ஜெயினர், பிராமணர், பிராமணரல்லாதார் அனைவரும்!ஒற்றுமைப்பட வேண்டியதற்கு உழைப்பதே நமது கட்சியின் முக்கிய கடமையாகும். இதுவே நமக்கிருக்கும் பெரிய வேலை. தேச க்ஷேமத்தை முன்னிட்டு மாகாண சுயாட்சியை எப்படி நடத்துவதென்றும அதில் என்னென்ன கஷ்டங்களிருக்கின்றன வென்றும் நாம் உணரவேண்டும். நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட கட்சி முறை யிருக்க வேண்டுமே தவிர பல திறப்பட்ட கூட்டங்களை ஒன்று சேர்த்து மந்திரி சபை அமைக்கக்கூடாது. நாம் அதிகாரத்திலிருந்தாலும் சரி, எதிர் கட்சியிலிருந்தாலும் சரி சிறு கூட்டத்தினரை ஒன்று சேர்த்து கட்சியமைக்க இடங்கொடுக்கலாகாது. ஏனென்றால் அது இரட்டை யாட்சியைவிட மிகக்கெடுதலாகவிருக்கும்.

நமது கட்சி மிகவும் குறுகிய நோக்கமுடையதென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. இதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் பயப்பட வேண்டியதில்லை யெனினும், எல்லோருக்கும் சம நீதி வழங்க வேண்டுமென்ற நமது கொள்கையின் படி எந்த ஜாதியினராயிருந்தாலும் நமது கொள்கையை யொத்துக்கொள்ளுகிற எல்லோரையும் நம்முடைய கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டதென்றே நினைக்கின்றேன். நம்முடைய கட்சியின் ஆரம்ப கால சரித்திரத்தை யுற்று நோக்குவோமேயானால் மாண்டேகு சீர்திருத்தங்களில் நமக்கு வகுப்பு வாரியாகத் தனித் தொகுதி வேண்டுமென்று கேட்டோம். அது கிடைக்காமற் போகவே, பொதுத் தொகுதியிலாவது ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளத் தயாராகவிருந்தோம். ஆனால், பத்து வருஷங்களாக இம் முறையைக் கையாண்ட பின்னர் நமக்கு இத்தகைய பாதுகாப்புகள் அவசியமில்லை யென்று கருதி நாமாகவே சைமன் கமிஷன் முன்பாக இம்முறை வேண்டாமென்று கூறினோம். இன்னும் வரப்போகும் மாறுதல்களையும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக விருக்கின்றோம். நம்முடைய இயக்கத்தின் பூர்வாங்க கொள்கையில் யாதொரு மாறுதலும் ஏற்பட முடியாதென்பதை யான் வற்புறுத்திக் கூற வேண்டியதில்லை. நாம் இப்பொழுது அக் கொள்கையைப் பின் பற்றுவதோடு முன்னினும் அதன் அவசியத்தை யுணர்ந்து அதிக நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.

திரும்பி வந்தவர்களைக் கண்டு மகிழ்கிறோம்.

இன்னும் அதிக நேரம் உங்களை காக்கவைக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயமல்ல. நமது தேச சரித்திரத்தில் முக்கியமான மாறுதல்கள் ஏற்படவிருக்கும் இந்த சமயத்தில் இன்னும் பல விஷயங்கள் இம் மகாநாட்டில் உங்களது ஆலோசனைக்காகக் கொண்டுவரப் படலாம். தேச க்ஷேமத்தில் மிகவும் ஆர்வங்கொண்ட நாமனைவரும் அவை ஒவ்வொன்றையும் தக்கபடி முடிவு செய்ய வேண்டும். சட்ட வரம்புக் குட்பட்டு அரசியல் கிளர்ச்சி செய்வதையே கொள்கையாகக் கொண்ட நாம் அதன் மூலமே நமது எண்ணங்கள் பூர்த்தியாகுமென்றும் உறுதியுடன் நம்புகிறோம். ஆகவே, பல வருட காலங்களாக ஒத்துழையாமை யென்றும் சட்ட மறுப்பென்றும் அர்த்த மற்ற கொள்கைகளைப் பின் பற்றி அலைந்து திரிந்து மீண்டும் நம்மிடம் திரும்பி வந்திருக்கும் நம்முடைய சகோதரர்களைக் கண்டு மனமகிழ்கின்றோம்.

ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம்.

நமது கொள்கை சாதாரணமானது. இதர நாட்டினர் எவ்வண்ணம் வாழ்கின்றனரோ அவ்வண்ணமே நம் நாட்டினரும் வாழ விரும்புகின்றோம். இந்தியர்கள் என்ற நோரணையில் பூரணசுயமரியாதைத் தன்மையடைய வேண்டுமென்று நாம் தீர்மானித்துக் கொண்டுள்ளோம். அதேபோன்று நமது தாய் நாடு கண்ணியமானதாகவும் நன்மை பயக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்று நாம் விழைகின்றோம். இந்தக் கொள்கையை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. இந்தக் கொள்கையுடன் கூட கட்டுப்பாடாய் ஒற்றுமையாக நம் தாய் நாட்டின் சீர்த்திக்கும் பரஸ்பர நன்மைக்கும், செல்வாக்குக்கும் உழைக்கக் கூடியவர்களுடன் நாம் அன்புகொண்டு சேர்ந்துழைக்கத் தயாராயிருக்கின்றோம்.

புரட்சி

நம்முடைய மாகாணத்துக்கு அடுத்திருக்கும் ஒரு மாகாணத்தில் நிலவிவரும் புரட்சி இயக்கங்களும், பயங்கர இயக்கங்களும் நம்முடைய கொள்கையினிடையே தலை காட்டா. உலக சரித்திரத்தை சரியானபடி படித்துப்பார்த்தால் அரசியல் ஞானமும் நல்லறிவுமுள்ள ஒவ்வொருவரும், எந்தப்பெரிய தேசமும் இத்தகைய தூரதிர்ஷ்ட வசமான முறைகளால் உயர்வடைந்ததில்லை என்பதை சுலபமாய் அறிந்துகொள்ளக் கூடும். இத்தகைய தூரதிர்ஷ்டமான முறைகள் நாட்டிற்கு நலன் பயப்பதற்கு பதிலாக தீமைகளையே உண்டுபண்ண வல்லனவாயிருக்கின்றன.

எதிர்கால அமைப்பு.

நம் இயக்கத்தின் எதிர்கால அமைப்பேஎன்னுடையஇந்தச்சொற்பொழிவின் மிக முக்கியமான பாகமாகும். இந்த முறை அடுத்த ஆண்டு பெரிய அரசியல் மாற்றங்களெல்லாம் ஏற்படப்போவதை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு வேளை நாம் அந்தப் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளவும் கூடும். அத்தகைய நாளை இந்தியாவில் காண்பது நெடுந்தூரத்திலில்லை. இந்நாட்டை சுயாட்சி புரிவதில் அக்கறை கொண்டவர்களும், இந்த மாகாணத்தின் அரசியல் நிர்வாக அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்களும்—நம்முடைய கட்சியாரைவிட அக்கறை கொண்டவர்கள் எவருமில்லையென்று நான் தைரியமாய்க் கூறுகிறேன். ஆரம்பத்தேர்தல் தொகுதியினர் தங்களுடைய கடமைகளை நாட்டிற்கு நலன் பயக்குந் துறைகளில் செலுத்தக்கூடியவாறான ஒழுங்கான முறையில் தேர்ச்சி பெறுவதற்குரிய எல்லா வழிகளிலும் உழைக்க வேண்டியது அவசியமாகும். ஏராளமாக அதிகரித்துவிட்ட தேர்தல் தொகுதியினருடன் சம்பந்தம் வைத்துக் கொள்வதும், நூற்றுக் கணக்கான சில்லரைத்தொகுதிகளுக்கெல்லாம் தகுதியான அபேட்சகர்களைக் கண்டுபிடிப்பதும் நாமிருக்கும் இந்த நிலைமையில் நமக்குச் சுலபமான காரியமாயிருக்குமென்று சொல்லிவிட முடியாது.

கக்ஷி அமைப்பு.

எந்தக் கட்சியும் எந்தத் தேசமும் இத்தகைய சமயத்தில் இவ்வளவு பெரிய விஷயங்களை கட்சி அமைப்புகளில்லாமலும் கட்சிகளின் விதிகளில்லாமலும் கையாள முடியுமென்று நம்பிக்கை வைக்க முடியாது. எதிர்காலத்தில் நம்முன் நிற்கப்போகும் பற்பல விதமான அரசியல் விஷயங்களை கட்சி அமைப்பின்றியும் கட்சி நிதிகளில்லாமலும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாது. நாம் இத்தகைய சந்தர்ப்பத்தில் சுகமாய் காற்றுவாங்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கக்கூடாது. நம்முடைய கட்சியைப் போன்றதொரு கட்சி இந்த நாட்டிற்கு அவசியப் படுகிறது என்பதை இத்தனை நாளைக்காட்டிலும் இன்றைக்கு நான் அதிகமாக உணர்கின்றேன். அவ்வாறு ஒரு கட்சியிருந்தால்தான் புரட்சிகரமான எண்ணங்களையெல்லாம் தடுத்து நிற்கக்கூடும். எனவே நம்முடைய கட்சியின் சார்பாய் அடுத்த சில மாதங்களுக்குள் மிகப்பறந்த பிரசாரம் செய்து கட்டுப்பாடான அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டுமென்று நான் விண்ணப்பித்துக்கொள்ளுகின்றேன். மாகாண சுயாட்சியின் பலன் நம்முடைய கைப்பிடிக்குள் இருக்கும்பொழுது வீண் கூச்சலிடுபவர்களால் பிடுங்கிக் கொண்டு போகப்பட்டு விடாவண்ணம் நம் இயக்கம் உழைத்து வரவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் மகாநாடுகள் நடத்தவேண்டியது மிக மிக அத்தியாவசியமான கடமையாகும். அவ்வண்ணம் மகாநாடுகளைக் கூட்டி பொது ஜனங்களின் நன்மைக்காக தக்க திட்டங்களெல்லால் வகுத்து அத்தகைய துறையில் உழைக்க முன் வரவேண்டும்.

இந்திய சட்டசபை தேர்தல்.

என்னுடைய சொற்பொழிவு முடித்துக்கொள்ளு முன்பாக வரப்போகும் இந்தியா சட்டசபை தேர்தலைப் பற்றி நான் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமையென்று நம்புகிறேன். நமது கட்சித் தலைவர்கள் நாட்டிற்காக செய்துள்ள அரிய வேலைகளுடன் தற்பொழுது கட்சி சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனர். கட்சியில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் கட்சியின் தலைவர்களை ஆதரித்து கட்சிக்கு வெற்றியை யுண்டாக்கும் பெருமையையடைய இதுவே தருணமாகும். தியாகராஜர் ஞாபகார்த்தக் கட்டிடத்தின் மீதுள்ள கடனை தீர்க்கும் படி திவான்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் கேட்டுக்கொள்வதற்கு செவி சாய்க்காமலிருக்க மாட்டோம். அதை தீர்க்க வேண்டிய ஏற்பாட்டை செய்வோம்.

சக்தியின் உதவி.

நமக்கு உதவி புரியும்படியான சக்தியானது நேரானதும் குறுகலானதுமான வழிகளைக் கடந்து நியாயத்தையடையும்படி உதவி புரியட்டும்

(3 ம் பக்கத்தொடர்ச்சி)

ஒரு பறையனுக்குப்பிடித்துக்கொடு" என்று சொல்லும் பழமொழியைப் பார்த்தால் விளங்கும். 50, 60 வயது ஆன ஆண் கிழத்துக்கு 10, 12 வயது பெண் குழந்தையைப் பிடித்து தாலி கட்டி விடுகிறார்கள். கல்யாண விஷயத்தில் ஆண்களுக்குக் கிழம் என்பதே இல்லையாம்.

இந்த விஷயத்திலும் சுயமரியாதைக் கல்யாணம் தக்க சரிசமமான வயது பொருத்தம் பார்த்தே செய்யப்படும்.

மற்றபடி புராணக் கல்யாணங்களில் நாள் பார்ப்பது, கோள் பார்ப்பது, சடங்குகள் செய்வது அதிகச் செலவுகள் செய்வது முதலிய காரியங்களால் கல்யாணக்காரர்களுக்கு தாங்க முடியாததும், விலக்க முடியாததுமான பல அசௌகரியங்கள், செலவுகள் ஏற்படுகின்றன.

உதாரணமாகப் புரோகிதன் அதிகாலையில் 4½ மணி 5 மணி 6 மணிக்கு "முகூர்த்தம்" வைத்துக் கொடுத்து விடுகிறான். இதனால் இரவெல்லாம் தூக்கமில்லாமல் கல்யாணத்துக்கு வந்த ஜனங்கள் அவஸ்தைப்படுகிறார்கள் பல்லு விளக்காமல், கால் கை கழுவாமல்' வெளிக்கும் போகாமல் நித்திய கடன்களை காலா காலத்தில் கழிக்க முடியாமல் மக்கள் அவஸ்தைப்படுவதும் மற்றும் பழக்க வழக்கமென்னும், சடங்கு ஆடம்பரம் முதலியவைகளால் கல்யாணக்காரர்களுக்கு சகிக்க முடியாத தொல்லைகளும் தாங்க முடியாத கடன்களும் ஏற்பட்டு அக் குடும்பங்கள் ஒன்று இரண்டு வருஷங்களுக்கும் சில சமயங்களில் வாழ் நாள் முழுவதும் கடனில் மூழ்கி வேதனைப்படுவதுமாக இருந்து வருகின்றது.

சுயமரியாதைக் கல்யாணத்தில் எல்லோருக்கும் சௌகரியமான நேரமும், மிகவும் சுருக்கமான செலவும் கொண்டு நடத்தப்படுவதோடு அனாவசியமான-அர்த்த மற்ற சடங்குகளையும் ஒழித்து நடத்தப்பட வேண்டுமென்று கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் எல்லாம் கல்யாணத்திற்கு ஏதாவது பலக்குறைவோ, கெடுதலோ ஏற்பட்டு விடும் என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. கல்யாணத்துக்கும், ஜாதி, மதம், சடங்கு, நேரம், காலம், குலம், கோத்திரம் ஆகியவைகளுக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை.

பு—ம வால் என்ன பலன்.

நம் நாட்டில் ஜாதி, மதம், குலம், கோத்திரம், காலம், நேரம், சடங்குக்கிரமம் முதலியவைகள் கவனித்தே 100 க்கு 99 கல்யாணங்கள் செய்யப்படுகின்றன. இப்படி யெல்லாம்செய்தும் இன்று அவற்றின் பலன்களை கவனித்துப்பார்ப்பீர்களானால் ஒட்டுமொத்தம் பெண்சமூகத்தில் 100 க்கு 20 பெண்கள் விதவைகளாய் இருக்கிறார்கள். இந்த விதவைகளுள் 100க்கு 25 பேர்கள் 20 வயதுக்கு கீழ்ப்பட்ட விதவைகள் என்றால் அவர்களின் கஷ்டத்தையும், அனுபவிக்கும் வேதனைகளையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. நாள்கோள் பார்த்து சாஸ்திரப்படி சடங்குகள் செய்யப்பெற்ற தெய்வீகக் கலியாணங்களில் பெண்கள் 100க்கு 20 பேர் ஏன் விதவைகளாய் இருக்க வேண்டும், அவர்களில் 100 க்கு 25 பெண்கள் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் விரக வேதனையில் ஏன் அழுந்திக்கொண்டிருக்கவேண்டும், இது "தெய்வீக மணத்தின்" பலனா? அல்லது "அசுர" மணத்தின்-"பிசாச" மணத்தின் பலனா என்று யோசித்துப்பாருங்கள். தெய்வீகம், பழக்கம், வழக்கம், சாஸ்திரம் என்கின்ற வார்த்தைகள் முன்னேற்றத்துக்கும், பகுத்தறிவுக்கும், சுதந்திரத்துக்கும் ஜன்ம விரோதியான வார்த்தைகளாகும். ஆதலால் சுயமரியாதைக் கலியாணம் என்பதில் மேற்படி முன்னேற்ற விரோதிகளுக்கும், சுதந்திர விரோதிகளுக்கும் இடமில்லை. இந்தக்காரணங்களால் தான் பழமை விரும்பிகள் வைதீகர்கள்—பகுத்தறிவற்ற கோழைகள், சுயமரியாதை இயக்கம் என்றாலும், சுயமரியாதைக்கல்யாணம் என்றாலும் முகத்தைச் சுளித்து கண்களை மூடி விழிப்பார்கள். இவர்களைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை இந்தக் கூட்டங்களுக்கு மரியாதை கொடுத்த எந்த தேசமோ, சமூகமோ விடுதலை பெற்றதாக யாரும் சொல்ல முடியாது.

ஆகையால்தான் இந்தப் பிரசாரம் செய்து வருகின்றோம். மற்றபடி இந்தக் கலியாணத்தில் என் போன்றாருக்கு யாதொரு வேலையும் இல்லை. புரோகிதத்துக்காக எவரும் இங்கு வரவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நீங்கள் எல்லோரும் இதனை கவனித்து நன்றாய் சிந்தித்துப் பாருங்கள். நன்மையை கைக்கொண்டு பகுத்தறிவு வளர்ச்சிக்கும் விடுதலைக்கும் உதவி புரியுங்கள் என்று கேட்டுக்கொண்டு உங்கள் சார்பாக மணமக்களை தங்கள் ஒப்பந்தங்களைக்கூறி ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ள வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

சமதர்மக் கீதங்கள்.

இயற்றியது.
தோழர் ப. ஜீவானந்தம்
விலை பை. 6.

கிடைக்குமிடங்கள்:—

குடி அரசு பதிப்பகம்
ஈரோடு.

சமதர்மக் காரியாலயம்.
ஜோலார்பேட்டை.

பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது.
விலை அணா 0—1—0.

கிடைக்குமிடங்கள்:—

குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.

R. கிஸன்,
கோவை.

நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை.

(ஒரு நவீன நாடகம்.)

ஆக்கியோன்:
தோழர் சி. எ. அய்யாமுத்து அவர்கள்.
இதன் விலை அணா 8.
முன்பணம் அனுப்பவும். வி. பி. இல்லை.
தபால் செலவு இனாம்.
விலாசம்:— மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவறாதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார்தங்கவயல்.

பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

நான் சம்சயவாதி ஆனதேன்!

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

"மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

நான் நாஸ்திகன் ஏன்?

(பகத்சிங் எழுதியது.)

இப் புத்தகமானது தோழர் பகத்சிங், அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானர் என்பதுபற்றியும், ஏன் நாஸ்திகரானர் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக் விளக்க நூல். விலை அணா 4.

கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும்.

விலை அணா 1.

ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா $\frac{1}{2}$.

மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

சோதிடப் புரட்டு

விலை அணா 2.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா $\frac{1}{2}$.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.